ZERO™
Current Events
0% Effort | 100% Results

SHANKAR IAS ACADEMY™
SINCE 2004
Best Academy for Civil Services Exam Coaching

# பொதுத் தமிழ்

I'M TOP © 2026 TNPSC

Zero Current Events Test Series

GR II / IIA Prelims Test Series

SHANKAR IAS ACADEMY™
SINCE 2004
Best Academy for Civil Services Exam Coaching

I'M TOP 2026 TNPSC

# உள்ளடக்கம்


எழுத்து ........ 3
இலக்கணம் ........ 3
பிரித்து எழுதுதல் ........ 5
புணர்ச்சி ........ 5
புணர்மொழியின் இயல்பு ........ 6
புணர்ச்சி வகைகள் ........ 7
இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும் ........ 7
உயிரீற்றுப் புணர்ச்சி ........ 8
குற்றியலுகரப் புணர்ச்சி ........ 9
சேர்த்து எழுதுதல் ........ 11
சந்திப்பிழை ........ 12
வல்லினம் மிகும் இடங்களும் வல்லினம் மிகா இடங்களும்: ........ 12
குறில் நெடில் வேறுபாடு ........ 15
உயிர் எழுத்துகள் ........ 15
உயிர்மெய் எழுத்துகள் ........ 15
வேறுபாடு அறிதல் ........ 18
இன எழுத்துகள் ........ 19
இன எழுத்துக்கள், சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள் ........ 19
ஒருமைப் பன்மை அறிதல், ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல் ........ 20
சொல் ........ 22
இடுகுறிப்பெயர், காரணப்பெயர் ........ 26
வேர்ச்சொல் அறிதல், வேர்ச்சொல்லிலிருந்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், பெயரெச்சம் வகை அறிதல் ........ 28
வேர்ச்சொல் ........ 28
எதிர்ச்சொல், எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல் ........ 33
எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை அறிதல், பிழைதிருத்துக. ........ 34
வினைச்சொல் ........ 35
பெயர் வினை வேறுபாடு ........ 37
உவமை, மரபு, பழமொழி ........ 37
மரபுத்தமிழ் ........ 38
மரபு ........ 38
கலைச் சொல் ........ 40
பல்துறை சார்ந்த கலைச் சொல் அறிவோம் ........ 40


SHANKAR IAS ACADEMY

பொதுவான கலைச்சொற்கள் ....44
பத்தி வினா ....45
கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் ....45
பிறமொழி சொல் ....51
தொடர் வகைகள் ....52
மொழிப்பெயர்ப்பு ....55
மொழிபெயர்ப்புக் கல்வி ....55
அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல் ....57
தமிழில் அகர வரிசை ....58
ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக ....59
ஓரெழுத்து ஒரு மொழி ....60
கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் ....63
சொல்லும் பொருளும் ....66
சொற்களை_இணைத்து_உருவாக்குதல் ....76
பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு ....78
பொருந்தாச் சொல்லைத் தேர்வு செய்தல் ....79

# எழுத்து

**ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும் வரிவடிவமாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.**

## இலக்கணம்

- நாம் பேசும் மொழியையும், எழுதும் மொழியையும் முறையாகப் புரிந்து கொள்வதற்கு இலக்கணம் தேவைப்படுகிறது.

### இலக்கண வகைகள்:

- தமிழ் மொழியின் இலக்கண வகைகள்: **ஐந்து**
  1) எழுத்து இலக்கணம்
  2) சொல் இலக்கணம்
  3) பொருள் இலக்கணம்
  4) யாப்பு இலக்கணம்
  5) அணி இலக்கணம்

### தமிழின் முதல் எழுத்து – அ

- 'அ' என்னும் எழுத்தின் முதுகுக்குப் பின்னால் '|' என்று ஒரு கோடு இருக்கிறது. உலகத்தில் நூற்றுக்கணக்கான மொழிகளின் முதல் எழுத்தில் இப்படி ஒரு கோடு இருக்கிறது. அ எழுத்து மனிதனைக் குறிக்கிறது. என்னும் முதுகுக்கோடு பழங்காலத்தில் வேட்டை ஆடுவதற்கு மனிதன் முதுகில் சுமந்த அம்புக்கூட்டைக் குறிக்கிறது.

### உயிர் எழுத்துகள்

- மொழிக்கு உயிர்போல் விளங்குபவை, உயிர் எழுத்துகள். 'அ' முதல் 'ஔ' வரையிலான பன்னிரண்டும் உயிர் எழுத்துகள்.
- உயிருக்கு முதன்மையானது காற்று. இயல்பாகக் காற்று வெளிப்படும்போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன. வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் 'அ' முதல் 'ஔ' வரையுள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் பிறக்கின்றன.

**அ, இ, உ, எ, ஒ – ஆகிய ஐந்தும் குறுகி ஒலிக்கின்றன**
**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ – ஆகிய ஏழும் நீண்டு ஒலிக்கின்றன**

- ஒவ்வோர் எழுத்தையும் உச்சரிப்பதற்குக் கால அளவு உண்டு.
- எழுத்தை உச்சரிக்க எடுத்துக்கொள்ளும் கால அளவைக் கொண்டே குறில், நெடில் என வகைப்படுத்துகிறோம்.

### மாத்திரை

- மாத்திரை என்பது சிறிய ஒலியளவு. இங்குக் கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.

**குறில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 1 மாத்திரை**
**நெடில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 2 மாத்திரை**

SHANKAR IAS ACADEMY

## மெய்யெழுத்துகள்

- மெய் என்பது உடம்பு எனப் பொருள்படும். மெய் எழுத்துகளை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் ஆகும். மொழிக்கு உடல்போல விளங்குபவை, மெய் எழுத்துகள் ஆகும்.
    - மெல்லினம் – ங், ஞ், ண், ந், ம், ன்
    - வல்லினம் – க், ச், ட், த், ப், ற்
    - இடையினம் – ய், ர், ல், வ், ழ், ள்

**மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு – அரை மாத்திரை**

## ஒலித்துப் பார்த்து உணர்வோம்!

- க், ச், ட், த், ப், ற் – ஆகிய ஆறும் வன்மையாக ஒலிக்கின்றன.
- ங், ஞ், ண், ந், ம், ன் – ஆகிய ஆறும் மென்மையாக ஒலிக்கின்றன.
- ய், ர், ல், வ், ழ், ள் – ஆகிய ஆறும் வன்மையாகவும் இல்லாமல், மென்மையாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிக்கின்றன.

## உயிர்மெய்

- உடலும் உயிரும் இணைந்து மனிதன் உருவாவதுபோல, உருவாகும் எழுத்துகளே உயிர்மெய் எழுத்துகள். மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றும் 216 எழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகள் ஆகும். ஆகவே 'க' முதல் 'னௌ' வரையிலான 216 எழுத்தும் உயிர்மெய் எழுத்துகள்.
- மெய்யுடன் உயிர்க்குறில் சேர்ந்தால் உயிர்மெய்க் குறில் தோன்றுகிறது. மெய்யுடன் உயிர் நெடில் சேர்ந்தால் உயிர்மெய் நெடில் தோன்றுகிறது. ஆகவே உயிர்மெய் எழுத்துகளையும் உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் என இருவகைப்படுத்தலாம்.

**உயிர்மெய் குறில் எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு – ஒரு மாத்திரை**
**உயிர்மெய் நெடில் எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு – இரு மாத்திரை**

## ஆய்த எழுத்து

- தமிழ்மொழியில் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகள் தவிர தனி எழுத்து ஒன்றும் உள்ளது. அது ஃ என்னும் ஆய்த எழுத்தாகும்.
- ஃ எனும் இவ்வெழுத்து மூன்று புள்ளிகளைப் பெற்றுள்ளது. ஆகவே, இதனை முப்புள்ளி, முப்பாற்புள்ளி எனக் குறிப்பிடுவர். இஃது உயிரோடும் மெய்யோடும் சேராமல் தனித்தே இருப்பதால், தனிநிலை எனவும் கூறுவர். போர் வீரர்கள் பயன்படுத்தும் தற்காப்பு ஆயுதத்தில் (கேடயம்) காணப்படும் மூன்று குமிழ்ப்புள்ளிகள்போன்று இருத்தலால் ஆய்தம் எனவும் கூறுவர்.
- ஆய்தஎழுத்து ஒரு சொல்லின் இடையில் மட்டுமே வரும். அவ்வெழுத்தின் முன் குறிலும், அதன்பின் வல்லின உயிர்மெய்க் குறிலும் வரும்.

**ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு அரை மாத்திரை**

SHANKAR IAS ACADEMY

**மொத்த தமிழ் எழுத்துகள்:**

- உயிர் எழுத்துகள் – 12
- மெய் எழுத்துகள் – 18
- உயிர்மெய் எழுத்துகள் – 216
- ஆய்த எழுத்து – 1
- மொத்தம் – 247

**எழுத்துக்களின் பிறப்பு:**

- ஒவ்வொரு எழுத்துக்கும் பிறக்கும் இடமும் பிறக்கும் முயற்சியும் வெவ்வேறாக உள்ளன.

**பிறப்பு**

- உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது **மார்பு, தலை, கழுத்து, மூக்கு** ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, **இதழ், நாக்கு, பல், மேல்வாய்** ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர். எழுத்துகளின் பிறப்பினை **இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு** என இரண்டு வகையாகப் பிரிப்பர்.

**எழுத்துப் பிறக்கும் இடமும் உறுப்பும்**

> ‘நிறைஉயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
> எழும், அணுத் திரள், உரம் கண்டம் உச்சி
> மூக்கு உற்று இதழ், நாப் பல், அணத் தொழிலின்
> வெவ்வேறு எழுத்து, ஒலி யாய், வரல் பிறப்பே”
> – (நன்னூல் 74)

## பிரித்து எழுதுதல்

### புணர்ச்சி

- தமிழ், அமுதம் ஆகிய இரு சொற்களையும் சேர்த்துச் சொல்லிப் பாருங்கள். தமிழமுதம் என்று ஒலிக்கிறது அல்லவா? அதேபோன்று வாழைமரம், வாழைப்பழம் எனும் இவ்விரு சொற்களையும் நோக்குங்கள்.
- முதல் சொல்லில் வாழை + மரம் வாழைமரம் என இருசொற்கள் இணைந்து எத்தகைய மாற்றமும் இல்லாமல் அப்படியே சேர்ந்துள்ளன.
- இரண்டாவது சொல்லில் வாழை + பழம் = வாழைப்பழம் என இருசொற்கள் இணையும்போது வல்லின மெய் (ப்) சேர்ந்து வந்துள்ளது.
- இவற்றுள் முதலில் உள்ள சொல்லை நிலைமொழி என்றும் அதனுடன் வந்து சேரும் சொல்லை வருமொழி என்றும் கூறுவர்.
- இவ்விரு சொற்களும் சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் இணைகின்றன. இவ்வாறு **நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் இணைவதைப் புணர்ச்சி** என்கிறோம்.

SHANKAR IAS ACADEMY

- மொழியைப் பிழையின்றிக் கையாளவும் பாடலடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் பிரித்தறியவும் மொழி ஆளுமையைப் புரிந்துகொள்ளவும் இப்புணர்ச்சி விதிகள் பயன்படுகின்றன.
- புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்தைப் பொறுத்து **உயிரீறு, மெய்யீறு** எனவும் வருமொழியின் முதல் எழுத்தைப் பொறுத்து **உயிர்முதல், மெய்ம்முதல்** எனவும் பிரிக்கலாம்.
    - நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அது **உயிரீற்றுப் புணர்ச்சி** எனப்படும்.
      (எ.கா.) சிலை + அழகு = சிலையழகு (லை = ல் + ஐ)
    - நிலைமொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் அது **மெய்யீற்றுப் புணர்ச்சி** எனப்படும்.
      (எ.கா.) மண் + அழகு = மண்ணழகு
    - வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அது **உயிர்முதல் புணர்ச்சி** எனப்படும்.
      (எ.கா.) பொன் + உண்டு = பொன்னுண்டு
    - வருமொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் அது **மெய்ம்முதல் புணர்ச்சி** எனப்படும்.
      (எ.கா.) பொன் + சிலை = பொற்சிலை (சி = ச் + இ)

## புணர்மொழியின் இயல்பு

- எழுத்து வகையால் சொற்கள் நான்கு வகைப்படும்.

| | |
|---|---|
| உயிரீறு | கலை + அழகு |
| மெய்யீறு | மண் + குடம் |
| உயிர்முதல் | வாழை + இலை |
| மெய்ம்முதல் | வாழை + மரம் |

- மேலும் இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

| | |
|---|---|
| உயிர்முன் உயிர் | மணி (ண் + இ) + அடி = மணியடி |
| உயிர்முன் மெய் | பனி + காற்று = பனிக்காற்று |
| மெய்ம்முன் உயிர் | ஆல் + இலை = ஆலிலை |
| மெய்ம்முன் மெய் | மரம் + (க் + இ) கிளை = மரக்கிளை |

SHANKAR IAS ACADEMY

# புணர்ச்சி வகைகள்

## புணர்ச்சி

### இயல்புப்புணர்ச்சி

வாழை + மரம் = வாழைமரம்

### விகாரப்புணர்ச்சி

1. தோன்றல் : திரு + குறள் = திருக்குறள் (க்)
2. கெடுதல் : மரம் + மரம் + வேர் = மரவேர் (ம்)
3. திரிதல் : பல் + பொடி = பற்பொடி (ற்)

| புணர்ச்சி | |
|---|---|
| **இயல்பு**<br>பொன் + வளை = பொன்வளை | **விகாரம்**<br>பூ + கூடை = பூக்கூடை<br>கல் + சிலை = கற்சிலை<br>கபிலர் + பரணர் = கபிலபரணர் |
| **உடம்படுமெய்**<br>மணி + அடி = மணியடி<br>குரு + அருள் = குருவருள்<br>தே + இலை = தேயிலை<br>தே + ஆரம் = தேவாரம் | **குற்றியலுகரம்**<br>எனது + உயிர் = எனதுயிர்<br>நாடு + யாது = நாடியாது<br>நிலவு + ஒளி = நிலவொளி |

## இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

### இயல்பு புணர்ச்சி

➢ நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது **இயல்பு புணர்ச்சி** ஆகும். அதாவது நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது எவ்விதமாற்றமும் ஏற்படவில்லையென்றால், அஃது இயல்புப்புணர்ச்சியாகும்.

- (எ.கா.) தாய் + மொழி = தாய்மொழி
  வாழை + மரம் = வாழைமரம்
  செடி + கொடி = செடிகொடி
  மண் + மலை = மண்மலை
  பொன் + வளையல் = பொன்வளையல்
  மலர் + மாலை = மலர்மாலை
  பனை + மரம் = பனைமரம்

  (சொற்களில் எம்மாற்றமும் நிகழவில்லை)

➢ உடல் + ஓம்பல் = உடலோம்பல் (இங்குல் + ஓ இணைந்து லோ என்னும் உயிர்மெய் எழுத்து ஆயிற்று. புதிய எழுத்து எதுவும் தோன்றவோ வேறு எழுத்தாகத் திரியவோ மறையவோ இல்லை)

SHANKAR IAS ACADEMY

**விகாரப் புணர்ச்சி**

- இரண்டு சொற்கள் இணையும்போது நிலைமொழியிலோ வருமொழியிலோ அல்லது இரண்டிலுமோ மாற்றங்கள் நிகழுமாயின், அது **விகாரப் புணர்ச்சி** எனப்படும். விகாரப் புணர்ச்சி **தோன்றல், திரிதல், கெடுதல்** என மூவகைப்படும்.
  - நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது **புதிதாக ஓர் எழுத்துத் தோன்றுவது தோன்றல் விகாரம்** ஆகும்.

    (எ.கா.) தமிழ் + தாய் = தமிழ்த்தாய்
    நுழைவு + தேர்வு = நுழைவுத்தேர்வு
    கல்லூரி + சாலை = கல்லூரிச்சாலை
    பலா + சுளை = பலாச்சுளை
    மா + பழம் = மாம்பழம்
    தமிழ் + பாடம் = தமிழ்ப் பாடம்
  - நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது **ஓர் எழுத்து வேறு எழுத்தாக மாறுவது திரிதல் விகாரம்** ஆகும்.

    (எ.கா.) வில் + கொடி = விற்கொடி
    பல் + பசை = பற்பசை
    பொன் + சிலை = பொற்சிலை
    கல் + சிலை = கற்சிலை
    அல் + திணை = அஃறிணை
  - நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது **ஓர் எழுத்து மறைவது கெடுதல் விகாரம்** ஆகும்.

    (எ.கா.) மனம் + மகிழ்ச்சி = மனமகிழ்ச்சி
    புறம் + நானூறு = புறநானூறு
    வடக்கு + திசை = வடதிசை
    மரம் + வேர் = மரவேர்
- இரண்டு சொற்கள் இணையும்போது ஒன்றுக்கு மேற்பட்ட விகாரங்கள் நிகழ்வதும் உண்டு.

  (எ.கா.) **நாடகம் + கலை = நாடகக்கலை**
  **படம் + காட்சி = படக்காட்சி**
  **மணம் + கோலம் = மணக்கோலம்**
- இங்குக் கெடுதல் விகாரத்தின்படி நிலைமொழி ஈற்றில் உள்ள மகர மெய் மறைந்தது. தோன்றல் விகாரத்தின்படி **க்** என்னும் மெய்யெழுத்து தோன்றியது.

## உயிரீற்றுப் புணர்ச்சி

**உடம்படுமெய்**

- நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் உயிரெழுத்துகளாய் இருந்தால், உச்சரிப்பின்போது ஒலி உடன்பாடு இல்லாமல் இடைவெளி ஏற்படும். எனவே, உடன்படாத அவ்விரு மொழிகளையும் சேர்த்துப் புணர்க்க வரும் மெய், உடம்படுமெய் ஆகும். பதினெட்டு மெய்களுள் **ய், வ்** ஆகிய இரு மெய்கள் மட்டும் உடம்படுமெய்களாக வரும்.

- நிலைமொழியின் ஈற்றில் **'இ, ஈ, ஐ'** என்னும் உயிரெழுத்துகளை ஈறாக உடைய சொற்கள் நிற்கும். அவற்றின்முன், பன்னிரண்டு உயிர்களையும் முதலாவதாக உடைய சொற்கள் சேரும். அந்நிலையில் **யகரம் உடம்படுமெய்யாக** வரும்.

- இகர, ஈகார, ஐகார ஈற்றுச் சொல்முன் யகரமும் ஏனைய உயிர்கள் முன் வகரமும், ஏகாரத்தின் முன் யகரமும் வகரமும் ஆகிய இரண்டும் உடம்படுமெய்களாக வரும்.

  - மணி + அழகு = மணி + **ய்** + அழகு = மணியழகு (இகர ஈறு)
  - சேறி + ஆயின் = சேறி +ய் + ஆயின் = சேறியாயின்(இகர ஈறு)
  - காட்சி+அழகு = காட்சி + **ய்** + அழகு காட்சியழகு (இகர ஈறு)
  - தீ +அணைப்பான் = தீ + **ய்** + அணைப்பான் தீயணைப்பான் (ஈகார ஈறு )
  - நீ + அதை = நீ+ய் + அதை = நீயதை(ஈகார ஈறு )
  - தீ + எரி = தீ + **ய்** + எரி = தீயெரி(ஈகார ஈறு )
  - நாவை + அசைத்த = நாவை + ய்+அசைத்த = நாவையசைத்த(ஐகார ஈறு)
  - ஓடை + ஓரம் = ஓடை + **ய்** + ஓரம் = ஓடையோரம் (ஐகார ஈறு)
  - கலை+அறிவு = கலை + **ய்** + அறிவு= கலையறிவு (ஐகார ஈறு)
  - பல + என்று = பல்+வ்+என்று = பலவென்று (அகர ஈறு)
  - நிலா + ஒளி = நிலா+வ்+ஒளி = நிலாவொளி (ஆகார ஈறு)
  - பல + உயிர் = பல + **வ்** + உயிர் = பலவுயிர் (அகர ஈறு)
  - பா + இனம் = பா + **வ்** + இனம் = பாவினம் (ஆகார ஈறு)
  - மாவிலை = மா + **வ்** + இலை= மாவிலை (ஆகார ஈறு)
  - ஒன்றே + என்னின் = ஒன்றே + ய் +என்னின் = ஒன்றேயென்னின் (ஏகார ஈறு)
  - ஒன்றே + என்னின் = ஒன்றே+ வ்+என்னின் = ஒன்றேவென்னின்(ஏகார ஈறு)
  - தே + ஆரம் = தே + **வ்** + ஆரம் = தேவாரம் (ஏகார ஈறு)
  - இவனே + அவன் = இவனே + **ய்** + அவன் = இவனேயவன் (ஏகார ஈறு)
  - சேயிழை = சே + **ய்** + இழை = சேயிழை(ஏகார ஈறு)
  - சே + அடி = சே + **ய்** + அடி = சேயடி (ஏகார ஈறு)
  - சே + அடி = சே + **வ்** + அடி = சேவடி (ஏகார ஈறு)

| | |
|---|---|
| ஐவழி யவ்வும் ஏனை<br>உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்<br>உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்<br>(நன்னூல்–162) | இ, ஈ, ஐ – **ய்**<br>பிற உயிர்கள் – **வ்**<br>ஏ – **ய், வ்** |

## குற்றியலுகரப் புணர்ச்சி

- தனிக்குறில் அல்லாது, சொல்லுக்கு இறுதியில் **வல்லின மெய்கள் ஏறிய உகரம் (கு, சு, டு, து, பு, று)** தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் **குற்றியலுகரம்** ஆகும். சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் **ஆறு** வகைப்படும்.

SHANKAR IAS ACADEMY

| | |
|---|---|
| நாக்கு, வகுப்பு | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| நெஞ்சு, இரும்பு | மென்தொடர்க் குற்றியலுகரம் |
| மார்பு, அமிழ்து | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| முதுகு, வரலாறு | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| எஃகு, அஃது | ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் |
| காது, பேசு | நெடில் தொடர்க் குற்றியலுகரம் |

➢ குற்றியலுகரச் சொற்களில் நிலைமொழியின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் வருமொழியின் முதலில் உள்ள உயிரெழுத்துடன் புணரும்போது, தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய், வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

1. நிலைமொழியின் ஈற்றெழுத்துக் **குற்றியலுகரமாக** இருந்து, வருமொழியின் முதலெழுத்து **உயிராக** இருந்தால், நிலைமொழியிலுள்ள குற்றியலுகரம், தான் ஊர்ந்து வந்த **வல்லின மெய்யைவிட்டு நீங்கும்**.
   i. (எ.கா.) பந்து + ஆட்டம் =பந்த் + உ + ஆட்டம் **'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்'** என்னும் விதிப்படி உ நீங்கியது. **உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே** என்னும் விதிப்படி, பந்த் + ஆட்டம் = பந்தாட்டம் என நிலைமொழி இறுதிமெய், வருமொழியின் முதல் எழுத்தாகிய உயிரோடு இணைந்து புணர்ந்தது.
   ii. மாசற்றார் = மாசு + அற்றார்
   மாசு(ச்+உ) + அற்றார் – **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்'** என்னும் விதிப்படி 'உ' மறைந்தது. மாச் + அற்றார் – **'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'** என்னும் விதிப்படி 'மாசற்றார்' எனப் புணர்ந்தது.
   iii. கருத்தோடிசைத்த = கருத்தோடு + இசைத்த
   கருத்தோடு(ட்+உ) + இசைத்த **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'** என்னும் விதிப்படி 'உ' மறைந்தது. கருத்தோ(ட் + இ) சைத்த = **'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'** என்னும் விதிப்படி 'மாசற்றார்' எனப் புணர்ந்தது.

**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் (நன்னூல்–164)**

**குறிப்பு :** நிலைமொழி ஈற்று முற்றுகரமும், வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருப்பின், குற்றியலுகரப் புணர்ச்சியைப்போலப் புணரும்.

(எ.கா.) உயர்வு (வ் + உ) + அடைந்தார் = உயர்வடைந்தார்.

2. நிலைமொழியின் ஈறு **குற்றியலுகரமாக** இருந்து, வருமொழியின் முதல் எழுத்து, **யகரமாக** இருந்து புணரும்போது, **உகரம் இகரமாகத் திரியும்**. இதனைக் குற்றியலிகரப் புணர்ச்சி என்பர்.

(எ.கா.) குரங்கு + யாது = குரங் (க் + உ) + யாது
= குரங்க் + இ + யாது
= குரங்கியாது.

**உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்**
**யவ்வரின் இய்யாம் முற்றுமற்றொ ரோவழி – நன்னூல், 164**
**(உக்குறள் – குறுகிய உகரம்; இய்யாம் – இகரமாகும்.)**

SHANKAR IAS ACADEMY

## சேர்த்து எழுதுதல்

1. பொன் + வளையல் = பொன்வளையல்
2. மலர் + மாலை = மலர்மாலை
3. பனை + மரம் = பனைமரம்
4. பலா + சுளை = பலாச்சுளை
5. படம் + காட்சி = படக்காட்சி
6. பொன் + சிலை = பொற்சிலை
7. மா + பழம் = மாம்பழம்
8. வடக்கு + திசை = வடதிசை
9. மணம் + கோலம் = மணக்கோலம்
10. அல் + திணை = அஃறிணை.
11. திரு + குறள் = திருக்குறள் (க்)
12. மரம் + வேர் = மரவேர் (ம்)
13. பல் + பொடி = பற்பொடி (ற்)
14. வாழை + மரம் = வாழைமரம்
15. வீடு + தோட்டம் – வீட்டு + தோட்டம் = வீட்டுத்தோட்டம்
16. காடு + மரம் = காட்டு மரம்
17. முரடு + காளை – முரட்டு + காளை = முரட்டுக்காளை
18. பகடு + வாழ்க்கை = பகட்டுவாழ்க்கை
19. சோறு + பானை – சோற்று + பானை = சோற்றுப்பானை
20. ஆறு + நீர் = ஆற்றுநீர்
21. வயிறு + பசி – வயிற்று + பசி = வயிற்றுப்பசி
22. கயிறு + வண்டி – கயிற்றுவண்டி
23. திரைப்படம் – திரை + படம்
24. வரவறிந்தான் – வரவு + அறிந்தான்
25. பூ + கொடி = பூக்கொடி, பூங்கொடி
26. பூ + சோலை = பூச்சோலை, பூஞ்சோலை
27. பூ + பந்து = பூப்பந்து, பூம்பந்து
28. பூ + தொட்டி = பூத்தொட்டி, பூந்தொட்டி
29. வானொலி – வான் + ஒலி
30. பாடம் + வேளை = பாடவேளை
31. மண் + மகள் = மண்மகள்
32. மரக்கலம் = மரம் + கலம்
33. கல் + அதர் = கல்லதர்
34. பழம் + தோல் – பழ + தோல் = பழத்தோல்
35. காலம் + கடந்தவன் = காலங்கடந்தவன்
36. முதுமை + ஊர் = மூதூர்
37. நெடுமை + இலை = நெட்டிலை
38. கருமை + கடல் = கருங்கடல்
39. பெருமை + அன் = பெரியன்

SHANKAR IAS ACADEMY

40. பசுமை + தமிழ் = பைந்தமிழ்
41. செம்மை + தமிழ் = செந்தமிழ்
42. பசுமை + தளிர் = பைந்தளிர்
43. வீடு + இல்லை = வீடில்லை
44. முரடு + காளை = முரட்டுக்காளை
45. அச்சு + பலகை = அச்சுப் பலகை
46. பஞ்சு + பொதி = பஞ்சுப்பொதி
47. மார்பு + கூடு = மார்புக்கூடு
48. எஃகு + கம்பி = எஃகுக்கம்பி
49. சில + வளை = சில் வளை
50. சில + வளை = சிலவளை

## சந்திப்பிழை

### வல்லினம் மிகும் இடங்களும் வல்லினம் மிகா இடங்களும்:

- தமிழில் எழுத்திலக்கணத்தில் முக்கியப் பகுதியாகவும் பெரிய பகுதியாகவும் இருப்பது சந்தி இலக்கணம் ஆகும். சந்தி இலக்கணம் என்பது இரண்டு சொற்கள் சேரும்போது ஏற்படும் மாற்றங்களைப் பற்றிய இலக்கணம் ஆகும். இலக்கண நூல்களை இயற்றிய ஆசிரியர்கள் சந்தி இலக்கணத்தைப் **புணர்ச்சி இலக்கணம்** என்றும் கூறுவர்.
- சந்திப்பிழை என்பது ஒரு சொல்லின் விகுதியோடு மற்றொரு சொல் சேரும் பொழுது ஏற்படும் மாற்றங்களில் ஏற்படும் பிழை ஆகும்.
- இருசொற்கள் இணைவதைப் புணர்ச்சி என்பர். அவ்வாறு இருசொற்கள் இணையும் போது முதற்சொல்லின் (நிலைமொழியின்) இறுதியில் உயிர்எழுத்து வந்து இரண்டாவது சொல்லின் (வருமொழியின்) முதலில் க, ச, த, ப என்னும் உயிர்மெய்யெழுத்துக்கள் வருமானால் அவ்விடங்களில் எல்லாம் வருமொழி முதலில் உள்ள மெய்யெழுத்தான வல்லெழுத்து மிகும்.இதை வல்லினம் மிகுதல் என்பர்.
- **தோன்றல், திரிதல், கெடுதல்** என விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்
- வல்லினம் மிகுந்து வருதல் தோன்றல் விகாரப் புணர்ச்சியின்பாற்படும்.
- சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும் பொருள் மயக்கத்தைத் தவிர்க்கவும் பேச்சின் இயல்பைப் பேணவும் இனிய ஓசைக்காகவும் இவ்வல்லின எழுத்துகளின் புணர்ச்சி இலக்கணம் தேவைப்படுகிறது.

(எடு) கிளி + கால் = கிளிக்கால்
பலா + சுளை = பலாச்சுளை
தினை + புனம் = தினைப்புனம்
வெள்ளி + தட்டு = வெள்ளித்தட்டு
இதனையே பொது விதியாக்கி நன்னூலார்,

> **“இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்” என்கிறார்.**
>
> **– நன்னூல்**

| விதிகள் | எடுத்துக்காட்டு |
|---|---|
| அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டுப் பெயர்களின் (சுட்டுத்திரிபுகளின்) பின்னும், எ என்னும் வினாவெழுத்தின் (வினாத்திரிபு) பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும். | • அச்சட்டை<br>• அச்சிறுவன்<br>• அக்கனி<br>• அப்பையன்<br>• இத்தோட்டம்<br>• அக்கடை<br>• இப்புத்தகம்<br>• இக்குளம்<br>• இச்சிறுவன்<br>• உச்சிறுவன்<br>• உப்பக்கம்<br>• எப்பாடம்<br>• அப்பையன்<br>• இச்செடி<br>• இந்தக்காலம்<br>• அந்தப்பக்கம்<br>• அந்தக்கோவில்<br>• இந்தச்சட்டி<br>• அந்தப்பையன்<br>• இந்தப்பள்ளி<br>• அந்தக்கோடு<br>• எந்தத்தோட்டம்<br>• எத்திசை?<br>• எக்குடம்<br>• எப்பொருள்<br>• எச்சட்டை<br>• எப்பணி<br>• எந்தப்பணம்?<br>• எந்தத்திசை?<br>• எந்தச்சட்டை? |
| ஆங்கு, ஈங்கு, யாங்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும் | • ஆங்குப்போ<br>• யாங்குத்தேடினாய்<br>• ஈங்குக்கவனி |
| ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும் | • ஆண்டுச்செல்<br>• ஈண்டுக்காண்க<br>• யாண்டுத்தேடினாய் |
| அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும் | • அதற்குச்சொன்னேன்<br>• இதற்குக்கொடு<br>• எதற்குக்கேட்கிறாய்? |

SHANKAR IAS ACADEMY

| | |
|---|---|
| **அவ்வகை, இவ்வகை, எவ்வகை** என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும் | • அவ்வகை**ப்**பேச்சு<br>• இவ்வகை**ப்**பாடம்<br>• எவ்வகை**ச்**சட்டம் |
| **அங்கு, இங்கு, எங்கு** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும். | • அங்கு**ச்**சென்றான்<br>• இங்கு**ச்**சென்றான்<br>• எங்கு**ச்**சென்றான்<br>• எங்கு**ப்**போனான் |
| **அன்றி, இன்றி** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும். | • அவனன்றி**ப்**பிறர்<br>• இவனன்றி**ச்**சிலர் |
| **அப்படி, இப்படி, எப்படி** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும். | • அப்படி**ச்**செய்<br>• அப்படி**க்**கூறினான்<br>• இப்படி**த்**தாவினான்<br>• எப்படி**ச்**சொன்னான்<br>• அப்படி**க்**கேள்<br>• இப்படி**ச்**செய்<br>• இப்படி**க்**காட்டு<br>• இப்படி**ப்**பேசாதே<br>• அப்படி**க்**கேட்காதே<br>• இப்படி**த்**தள்ளு<br>• எப்படி**த்**தெரியும்? |
| **“ஐ”** என்னும் **இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில்** வல்லினம் மிகும்.<br>அதாவது **இரண்டாம் வேற்றுமை விரியில்** வல்லினம் மிகும். | • கதவை**த்**திற<br>• தகவல்களை**த்**திரட்டு<br>• காட்சியை**ப்**பார்<br>• தலையை**க்**காட்டு<br>• கண்ணனை**ப்**பார்<br>• பாடத்தை**ப்**படி<br>• பாரியை**க்**கண்டான்<br>• பொருளை**ச்**சேர்த்தான்<br>• அவனை**த்**தடுத்தான்<br>• நிலவை**ப்**பார்த்தான்<br>• படத்தை**ப்**பார்த்தான்<br>• புலியை**க்**கொன்றான்<br>• பொருளை**ச்** சேர்த்தான்<br>• நூலை**ப்**படி<br>• பாலை**க்**குடி<br>• பகையை**த்** துரத்து |
| **“கு”** என்னும் **நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில்** வல்லினம் மிகும். அதாவது **நான்காம் வேற்றுமை விரியில்** வல்லினம் மிகும் | • முதியவருக்கு**க்**கொடு<br>• பாலுக்கு**க்**காவல்<br>• எனக்கு**க்** கொடு<br>• மெட்டுக்கு**ப்** பாட்டு |

SHANKAR IAS ACADEMY

| | |
|---|---|
| | • குழந்தைக்குச் சோறு<br>• அவளுக்குத் தா<br>• பாப்பாவுக்குப் பாட்டு<br>• அவனுக்குக் கொடு<br>• ஊருக்குச் செல்<br>• எனக்குத் தெரியும்<br>• அவனுக்குப் பிடிக்கும்<br>• அவனுக்குக் கொடுத்தான்<br>• பணிக்குச் சென்றான்<br>• வீட்டுக்குப் போனேன்<br>• நண்பனுக்குக் கொடு<br>• பூட்டுக்குச் சாவி<br>• ஊருக்குப் பாதை |

## குறில் நெடில் வேறுபாடு

### உயிர் எழுத்துகள்

- உயிருக்கு முதன்மையானது காற்று. இயல்பாகக் காற்று வெளிப்படும்போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன.
- வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் **'அ' முதல் 'ஔ'** வரையுள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் பிறக்கின்றன.
- **அ, இ, உ, எ, ஒ** ஆகிய ஐந்தும் குறுகி ஒலிக்கின்றன.
- **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** ஆகிய ஏழும் நீண்டு ஒலிக்கின்றன.
- ஒவ்வோர் எழுத்தையும் உச்சரிப்பதற்குக் கால அளவு உண்டு.
- எழுத்தை உச்சரிக்க எடுத்துக்கொள்ளும் கால அளவைக் கொண்டே **குறில், நெடில்** என வகைப்படுத்துகிறோம்.
- சொல்வதற்குக் குறைந்த முயற்சியும் குறைந்த காலமும் தேவைப்படும் **அ, இ உ, எ, ஒ** ஆகிய ஐந்து எழுத்துகள் குறில் எழுத்துகள் எனப்படும்.
- சொல்வதற்கு நிறைந்த முயற்சியும், நிறைய நேரமும் தேவைப்படும் **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** ஆகிய ஏழு எழுத்துகள் நெடில் எழுத்துகள் எனப்படும்.

### உயிர்மெய் எழுத்துகள்

- மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றும் 216 எழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகள் ஆகும்.
- எடுத்துக்காட்டிற்கு **'க'** என்ற எழுத்தை எடுத்துக் கொள்வோம்.
- **'க்'** என்ற எழுத்து வடிவம் **'க'** என்ற எழுத்தில் உள்ளது. எனவே இது மெய் எழுத்தைச் சார்ந்து வருகிறது என்பது தெரிய வருகிறது.

- **'க'** என்ற எழுத்தைச் சொல்லிப் பாருங்கள்.
- **க் + அ = க**
- **'க்'** என்ற மெய் எழுத்து முதலிலும் **'அ'** என்ற உயிர் எழுத்து இரண்டாவதாகவும் இணைந்து ஒலிக்கக் **'க'** என்ற எழுத்து கிடைக்கிறது.
- எனவே **'க'** என்ற எழுத்து உயிர், மெய் என்ற இரண்டையும் சேர்ந்து ஒலிக்கும் எழுத்து என்பது தெரிய வருகிறது.
- இதுபோலவே மேற்காட்டிய **216** எழுத்துகளும் முதல் எழுத்துகளைச் சார்ந்தே ஒலிக்கின்றன.

## உயிர்மெய் எழுத்துகளின் வகைகள்:

- மெய்யுடன் உயிர்க்குறில் சேர்ந்தால் உயிர்மெய்க் குறில் தோன்றுகிறது.
- மெய்யுடன் உயிர் நெடில் சேர்ந்தால் உயிர்மெய் நெடில் தோன்றுகிறது.
- ஆகவே உயிர்மெய் எழுத்துக்களையும் உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் என இருவகைப்படுத்தலாம்.
- அதாவது குறுகிய ஒலிகளுடைய எழுத்துகள் குறில் எழுத்துகள் எனப்படும்.
- நெடிய ஒலிகளுடைய எழுத்துகள் நெடில் எழுத்துகள் எனப்படும்.
- அ, இ, உ, எ, ஒ என்ற குறில் உயிர் எழுத்துச் சார்பாகப் பிறக்கும் உயிர்மெய் எழுத்துக்கள் உயிர்மெய் குறில் எழுத்துகள் ஆகும்.
- ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற நெடில் எழுத்துகளின் சார்பாகப் பிறக்கும் உயிர்மெய் எழுத்துகள் உயிர்மெய்நெடில் எழுத்துகள் எனப்படும்.

## குறில் உயிர்மெய்:-

- க = க் + அ – 'க்' என்ற மெய்யுடன் 'அ' என்ற குறில் சேர்ந்தது.
- இது போன்று 'அ, இ, உ, எ, ஒ' என்ற ஐந்து குற்றெழுத்துக்களும் பதினெட்டு மெய் யெழுத்துக்களுடனும் தனித்தனியே சேரும். சேர்ந்து பிறக்கின்ற எழுத்துக்களே குறில் உயிர் மெய்.
- "ஐந்து குற்றெழுத்துக்களும் பதினெட்டு மெய்யெழுத்துக்களுடன் தனித் தனியே கூட, குறில் உயிர் மெய்யெழுத் துக்கள் தொண்ணூறாம்.

**குறில் – உயிர்** **தொண்ணூறு : (18 × 5 = 90)**

| மெய் குறில் | அ | இ | உ | எ | ஒ |
|---|---|---|---|---|---|
| க் | க | கி | கு | கெ | கொ |
| ங் | ங | ஙி | ஙு | ஙெ | ஙொ |
| ச் | ச | சி | சு | செ | சொ |
| ஞ் | ஞ | ஞி | ஞு | ஞெ | ஞொ |
| ட் | ட | டி | டு | டெ | டொ |
| ண் | ண | ணி | ணு | ணெ | ணொ |
| த் | த | தி | து | தெ | தொ |
| ந் | ந | நி | நு | நெ | நொ |
| ப் | ப | பி | பு | பெ | பொ |
| ம் | ம | மி | மு | மெ | மொ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ய் | ய | யி | யு | யெ | யொ |
| ர் | ர | ரி | ரு | ரெ | ரொ |
| ல் | ல | லி | லு | லெ | லொ |
| வ் | வ | வி | வு | வெ | வொ |
| ழ் | ழ | ழி | ழு | ழெ | ழொ |
| ள் | ள | ளி | ளு | ளெ | ளொ |
| ற் | ற | றி | று | றெ | றொ |
| ன் | ன | னி | னு | னெ | னொ |

## நெடில் உயிர்மெய்:-

- கா = க் + ஆ – இதில் 'க்' என்ற மெய்யுடன் ஆ' என்ற நெடில் சேர்ந்தது. இவ்வாறே 'ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ' என்ற ஏழு நெடி ஐ,ஓ,ஔ' லும் மெய்யுடன் தனித்தனியே கூடும். அவ்வாறு வருகிற எழுத்துக்களே நெடில் உயிர் மெய்யெழுத்துக்களாம்.

**நெடில் உயிர்மெய் – நூற்று இருபத்தாறு** **(18 × 7 = 126)**

| மெய் நெடில் | ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|
| க் | கா | கீ | கூ | கே | கை | கோ | கௌ |
| ங் | ஙா | ஙீ | ஙூ | ஙே | ஙை | ஙோ | ஙௌ |
| ச் | சா | சீ | சூ | சே | சை | சோ | சௌ |
| ஞ் | ஞா | ஞீ | ஞூ | ஞே | ஞை | ஞோ | ஞௌ |
| ட் | டா | டீ | டூ | டே | டை | டோ | டௌ |
| ண் | ணா | ணீ | ணூ | ணே | ணை | ணோ | ணௌ |
| த் | தா | தீ | தூ | தே | தை | தோ | தௌ |
| ந் | நா | நீ | நூ | நே | நை | நோ | நௌ |
| ப் | பா | பீ | பூ | பே | பை | போ | பௌ |
| ம் | மா | மீ | மூ | மே | மை | மோ | மௌ |
| ய் | யா | யீ | யூ | யே | யை | யோ | யௌ |
| ர் | ரா | ரீ | ரூ | ரே | ரை | ரோ | ரௌ |
| ல் | லா | லீ | லூ | லே | லை | லோ | லௌ |
| வ் | வா | வீ | வூ | வே | வை | வோ | வௌ |
| ழ் | ழா | ழீ | ழூ | ழே | ழை | ழோ | ழௌ |
| ள் | ளா | ளீ | ளூ | ளே | ளை | ளோ | ளௌ |
| ற் | றா | றீ | றூ | றே | றை | றோ | றௌ |
| ன் | னா | னீ | னூ | னே | னை | னோ | னௌ |

**"ஏழு நெட்டெழுத்துக்களும் பதினெட்டு மெய்யெழுத்துக்களுடன் தனித் தனியே கூட நெடில் உயிர்–மெய் நூற்று இருபத்தாறாம்"**

SHANKAR IAS ACADEMY

# வேறுபாடு அறிதல்

## 1. குறில் நெடில்

- ஓடோடி வந்தான்.
    - இத்தொடரில் **‘ந்’** மற்றும் **‘ன்’** இரண்டும் **மெய் எழுத்துகள்**. அவற்றை விடுத்து, மீதம் உள்ள எழுத்துகளில்,

      ஓ டோ தா – இவை மூன்றும் **நெடில் எழுத்துகள்**

      டி வ – இவை இரண்டும் **குறில் எழுத்துகள்**
    - நல்ல தமிழில் எழுத குறில், நெடில் வேறுபாடு அறிவது அடிப்படை அறிவாகும்.

| | |
|---|---|
| **அடி – குறில்** | **ஆடி – நெடில்** |
| **வளி – குறில்** | **வாளி – நெடில்** |

## 2. ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு

- செய், சேய் என்னும் இரண்டு சொற்களைப் பாருங்கள்.

  **செ** – இ:்து ஒற்றைக்கொம்பு.

  **சே** – இ:்து இரட்டைக்கொம்பு.
- ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பால் பொருள் எப்படி மாறுகிறது பாருங்கள். இதனைச் **செய்**, தாய்**சேய்** நலவிடுதி.

  **ச்** என்பது மெய்யெழுத்து, **எ** என்பது **உயிரெழுத்து.**

  இரண்டும் சேரும்போது **செ** இது **குறில்.**

  **ச்** உடன் **ஏ** சேரும்போது **சே** இது நெடில்.
- **ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்புகளோடு துணை எழுத்துச் சேரும்போது ஏற்படும் மாற்றங்களைப் பாருங்கள்.**

  **கொடி** பறக்கும் **கோடி**ப்பணம் கிடைக்கும்

  **க் + ஒ** – இரண்டும் சேர்ந்தால் **கொ** இது **குறில்.**

  **க் + ஓ** – இரண்டும் சேர்ந்தால் **கோ** இது **நெடில்.**

### குறில் நெடில் உண்டாவது எப்படி?

- அ, இ உ, எ, ஒ – ஆகிய ஐந்தும் குறில் எழுத்துகள். இவை மெய் எழுத்துகளோடு சேரும்போது, உயிர்மெய்க்குறில் எழுத்துகள் உண்டாகின்றன.
    - கடல், கிளி, குரங்கு, சென்னை, சொல்
- ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ – ஏழும் நெடில் எழுத்துகள். இவை மெய் எழுத்துகளோடு சேரும்போது, உயிர்மெய்நெடில் எழுத்துகள் உண்டாகின்றன.
    - காளை, கீற்று, கூடல், கேள்வி, கை, கோவில், கௌதாரி

## 3. மாத்திரை

- இலக்கணத்தில் மாத்திரை என்பது எழுத்துகளின் ஒலியின் அளவைக் குறிக்கும் சொல். மாத்திரை என்பது சிறிய ஒலியளவு.
- கண் சிமிட்டும் நேரம் அல்லது விரல் சொடுக்கும் நேரம் மாத்திரையின் கால அளவாகும்.

SHANKAR IAS ACADEMY

- தமிழ் எழுத்துகளுக்கான மாத்திரை அளவைத் தெரிந்துகொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| மெய்யெழுத்து | – | அரை மாத்திரை |
| உயிரெழுத்து (குறில்) | – | ஒரு மாத்திரை |
| உயிரெழுத்து (நெடில்) | – | இரு மாத்திரை |
| உயிர்மெய் (குறில்) | – | ஒரு மாத்திரை |
| உயிர்மெய் (நெடில்) | – | இரு மாத்திரை |

# இன எழுத்துகள்

## இன எழுத்துக்கள், சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள்

**எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.**

### உயிர் எழுத்துகள்:

- உயிர் எழுத்துகளில் **குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும்** இன எழுத்துகள் ஆகும். குறில் எழுத்து இல்லாத **ஐ** என்னும் எழுத்துக்கு **இ** என்பது இன எழுத்தாகும். **ஔ** என்னும் எழுத்துக்கு **உ** என்பது இன எழுத்தாகும். சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும். (எ.கா.) ஓஒதல், தூஉம், தழீஇ




### மெய் எழுத்துகள்:

- ஆறு **வல்லின** மெய் எழுத்துகளுக்கும் ஆறு **மெல்லின** எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும். மெல்லின எழுத்தும், அதன் நட்பு எழுத்தான வல்லின எழுத்தும் அடுத்தடுத்து வருவது இயல்பு.
- 'ங்' என்னும் எழுத்துக்குப் பின்னால் 'க' இன எழுத்தே வரும். **'ங்', 'க'** இரண்டும் நண்பர்கள். (எ.கா.) சிங்கம், தங்கை.
- அதேபோல் **'ஞ்', 'ச'** இரண்டும் நண்பர்கள். இவ்விரண்டும் சேர்ந்தே வரும். (எ.கா.) மஞ்சள், அஞ்சாதே.

- **ண்ட, ந்த, ம்ப, ன்ற** - எழுத்துகளும் நண்பர்கள். பெரும்பாலும் இவை சேர்ந்தே வரும். (எ.கா.) பண்டம், பந்தல், கம்பன், தென்றல்.
- இத்தகைய **நட்பு எழுத்துகளை இன எழுத்துகள்** என இலக்கணம் கூறுகிறது.
- அதாவது **ங்க; ஞ்ச; ண்ட; ந்த; ம்ப; ன்ற.** இந்த இயல்பைப் புரிந்துகொண்டவர்கள், உண்டான் எனவும், தின்றான் எனவும் முறையாக எழுதுகிறார்கள்.
- புரியாதவர்கள் உண்டான் 'திண்றான்' எனவும் பிழையாகவே எழுதுகிறார்கள்; பேசுகிறார்கள்.



- (எ.கா.) திங்கள், மஞ்சள், மண்டபம், சந்தனம், அம்பு, தென்றல்
- **இடையின** எழுத்துகள் ஆறும் **(ய், ர், ல், வ், ழ், ள்) ஒரே இனமாகும்.**




- தமிழ் எழுத்துகளில் **ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்து இல்லை.**

## ஒருமைப் பன்மை அறிதல், ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல்

- ஒரு பொருளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதற்கு ஒருமையும் பன்மையும் பயன்படுகின்றன. ஒரு பொருளை மட்டும் குறிப்பது, **ஒருமை**.
- ஒன்றிற்கு மேற்பட்ட பொருளைக் குறிப்பது, **பன்மை**.
- ஒருமைச் சொற்களுடன் விகுதி சேர்த்துப் பன்மையாக்கலாம்.
- நூல் என்பது ஒருமையானால், நூல்கள் என்பது பன்மையாகும்.
- இவ்வாறு ஒருமையைப் பன்மையாக்க சில விதிமுறைகள் உள்ளன.

**பின்வரும் எடுத்துக்காட்டுகள்வழி புரிந்துகொள்ளலாம்.**

1. பொதுவாக ஒருமைச் சொற்கள் பன்மையாகும்போது **'கள்'** விகுதி ஏற்கும்.

கலை + கள் = கலைகள்
மாடு + கள் = மாடுகள்
ஆறுகள் = ஆறு + கள்

2. ‘ம்’ என்கிற எழுத்துடன் ‘கள்’ சேரும்போது ‘ங்கள்’ ஆக மாறும்.

படம் + கள் = படங்கள் (‘ம்’ முன் கள் சேர–ங்கள் ஆகியது)

சக்கரம் + கள்= சக்கரங்கள்

வண்ணம் + கள் = வண்ணங்கள்

3. ‘ல்’ என்கிற எழுத்துடன் ‘கள்’ சேரும் போது ‘ற்கள்’ ஆக மாறும்.

பல் + கள் = பற்கள் (‘ல்’ முன் கள் சேரும்போது ‘ல்’ – ‘ற்’ ஆக மாறியது)

கல் + கள் = கற்கள்

சொல் + கள் = சொற்கள்

4. ‘ள்’ என்கிற எழுத்துடன் ‘கள்’ சேரும் போது ‘ட்கள் ‘ ஆக மாறும்.

முள் + ‘கள்’ = முட்கள் (‘ள்’ முன் கள் சேரும்போது ‘ள்’ – ‘ட்’ ஆக மாறியது)

ஆள் + கள் = ஆட்கள்

புள் + கள் = புட்கள்

5. ஓரெழுத்து ஒருமொழியுடன் ‘கள்’ சேரும் போது ‘க்’ தோன்றும்.

பூ + கள் = பூக்கள்

ஈ + கள் = ஈக்கள்

பா + கள் = பாக்கள்

6. நெடில் எழுத்தில் முடியும் சொல்லுடன் ‘கள்’ சேரும் போது ‘க்’ தோன்றும்.

புறா + கள் = புறாக்கள்

விழா + கள் = விழாக்கள்

வெண்பா + கள்= வெண்பாக்கள்

## தொடர்களில் ஒருமை, பன்மை மயக்கம்

- தனிச்சொற்களில் ஒருமை, பன்மை எவ்வாறு வரும் என்பதை அறிந்தோம்.
- தொடர்களிலும் ஒருமை, பன்மைச் சொற்கள் இடம்பெறும்போது, அவற்றைப் பிழையின்றி எழுதவேண்டும்.
- ஒருமையில் தொடங்கும் சொல்லுக்கு ஒருமை முடிபு தரப்பட வேண்டும்.
- அதேபோல் பன்மையில் தொடங்கும் சொல்லுக்குப் பன்மை முடிபு தரப்பட வேண்டும்.
- சிலருடைய பேச்சில் இத்தகைய ஒருமை, பன்மைப் பிழைகளை உங்களால் கண்டறிய இயலும். எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா? நாம் பேசும்போது, எழுத்துத் தமிழில் பேசுவதில்லை. பேச்சுத்தமிழில்தான் பேசுகிறோம். இஃது எளிமை கருதி நிகழ்கிறது.
- இப்படிப் பேசுவதால், இதில் ஒருமை, பன்மைப் பிழை ஏற்படுவதாகக் கூறமுடியாது.
- பேச்சுத் தமிழாக இருந்தாலும் ஒருமை, பன்மை சரியாக இருக்கவேண்டும்.
- “அங்க நாலுபேரு பேசிக்கிட்டு இருக்காங்க” என்றுதான் பேச்சுத்தமிழிலும் ஒருமை, பன்மைப் பிழையின்றிப் பேசுகிறோம்.
- “அங்க நாலுபேர்கள் பேசிக்கிட்டு இருக்கான்” என்று நாம் பேச்சிலும்கூடப் பிழையாகக் கூறுவதில்லை.

SHANKAR IAS ACADEMY

- **நெல்லிக்காய் விற்கும் பெண்ணொருத்தி, "பத்து நெல்லிக்கா அஞ்சு ரூபா" என்று கூவி விற்கிறாள். இந்தத் தொடரில் பிழை உள்ளதா? பிழை இல்லை. அவள் இலக்கணம் படிக்கவில்லை. ஆனால், சரியாகத்தான் சொல்கிறாள். எப்படி?**
- **ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கும்போது, பன்மைச் சொல்லாக்க விகுதிகள் சேர்க்கவேண்டும் என்றும் பார்த்தோம். இங்கு, ஒரே ஒரு நெல்லிக்காயைக் குறிக்க, நெல்லிக்காய் என்று கூறினால் போதுமானது.**
- **ஒன்றிற்கு மேற்பட்டு இருக்கும்போது, நெல்லிக்காய்கள் என்று கூற வேண்டும். சரியாகத்தான் புரிந்துகொண்டுள்ளோம். ஆனால், பத்து நெல்லிக்காய் – இது சரியா, தவறா? சரிதான்.**
- **ஒரு பொருளுக்குமுன் எண்ணுப்பெயர் அடையாக வரும்போது, ஒன்றிற்கு மேற்பட்ட எண்ணிக்கையைக் குறித்தால், அச்சொல்லைப் பன்மையாக்க வேண்டுவதில்லை.**

| | |
|---|---|
| இரண்டு மலர்கள் | தவறு |
| இரு மலர் | சரி |
| பத்துப் பாட்டுகள் | தவறு |
| பத்துப்பாட்டு | சரி |

## சொல்

- **சொல் என்பதனை மொழி, பதம், கிளா, வி, வார்த்தை எனவும் சொல்வோம்.**
- **சொற்றொடரை வாக்கியம் எனவும் சொல்வோம்.**
- **தமிழில் சில எழுத்துகள் தனித்து நின்று பொருள் தரும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தும் பொருள் தரும். இவ்வாறு பொருள் தருபவை சொல் எனப்படும்.**
- **(எ.கா.) ஈ, பூ, மை, கல், கடல், தங்கம்.**

### இலக்கண அடிப்படையில் சொற்கள்

- இலக்கண அடிப்படையில் சொற்கள் நான்கு வகைப்படும்
  - i) பெயர்ச்சொல்
  - ii) வினைச்சொல்
  - iii) இடைச்சொல்
  - iv) உரிச்சொல்

### i) பெயர்ச்சொல்

- ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.
- (எ.கா.) பாரதி, பள்ளி, காலை, கண், நன்மை, அம்மா, அப்பா, மாநகர் மதுரை
- இவை பெயரைக் குறித்து வந்ததால் பெயர்ச் சொற்கள் ஆயின.

**பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவையாவன**

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர்
6. தொழிற்பெயர்

## 1. பொருட்பெயர்

- பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும். இஃது உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும்.
  - **(எ.கா.) மரம், செடி, மயில், பறவை, புத்தகம், நாற்காலி.**
- இந்தப் பொருட்பெயர் இருவகைப்படும். அவை : உயிருள்ள பொருள், உயிரற்ற பொருள்.

**i) உயிருள்ள பொருள்கள்:**

- குமரன், மலர்க்கொடி, தென்னை, செம்பருத்தி, வெள்ளாடு, ஓணான் முதலியன.

**ii) உயிரற்ற பொருள்கள்:**

- நாற்காலி, அடுப்பு, தட்டு, எண்ணெய், மண், நீர், காற்று முதலியன.

## 2. இடப்பெயர்

- ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.
  - **(எ.கா.) சென்னை, பள்ளி, பூங்கா, தெரு.**
  - அன்பகம், பெரியார் தெரு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, திருநின்றவூர் என்னைப்பெற்ற தாயார் கோவில், திருமழிசை, வாழைத்தோட்டம், ஆர்க்காடு, கொல்லிமலை.

## 3. காலப்பெயர்

- காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.
- கண் இமைக்கும் நொடிப்பொழுது முதல் ஊழிக்காலம்வரை எல்லாமே **காலத்தைக் குறிக்கும் பெயர்கள்.** ஐந்துநொடி, முப்பது வினாடி, பன்னிரண்டு மணி, விடியற்பொழுது, திங்கள்கிழமை, ஒருவாரம், தைத்திங்கள், ஓராண்டு, மழைக்காலம்.
  - **(எ.கா.) நிமிடம், நாள், சித்திரை, நொடி, வினாடி, மணி, பொழுது, கிழமை, வாரம், திங்கள், ஆண்டு, பருவகாலம்.**

## 4. சினைப்பெயர்

- பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும். சினை என்பது ஒன்றன் உறுப்பின் பெயரைக் குறிப்பது. மனித உறுப்புகள், விலங்கு உறுப்புகள், தாவரப் பகுதிகள், பொருள்களின் பகுதிகள் என முழுமையான ஒன்றின் பகுதிகளைக் குறிக்கும் பெயர்கள் சினைப்பெயர்கள்.
  - தலை, கண், மூக்கு, செவி, நாக்கு, பல், வயிறு, கை, கால், விரல், நகம் முதலியனவும், வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய், கனி, விதை முதலியனவும் சினைப்பெயர்கள்.
  - **(எ.கா.) கண், கை, இலை, கிளை.**

## 5. பண்புப்பெயர்

➢ பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும். பண்புப்பெயரைப் குணப் பெயர் எனவும் கூறுவர். குணப்பெயர்கள் நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்படும்.
  - வடிவப் பெயர்களைச் சொல். பத்து மீட்டர் துணி, ஐந்துபடி எண்ணெய், பத்துக்கிலோ அரிசி; வட்டப்பலகை, சதுரவீடு, செவ்வகப் புத்தகம், முக்கோணக் கூம்பு.

## 6. தொழிற்பெயர்

➢ தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.
  - **(எ.கா.) படித்தல், ஆடுதல், நடித்தல்.**

### அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கான சான்றுகளை தொடரில் அமைத்து எழுதுவோம்.

- காவியா **புத்தகம்** படித்தாள் – பொருட்பெயர்
- காவியா **பள்ளி**க்குச் சென்றாள் – இடப்பெயர்
- காவியா **மாலை**யில் விளையாடினாள் – காலப்பெயர்
- காவியா **தலை** அசைத்தாள் – சினைப்பெயர்
- காவியா **இனிமை**யாகப் பேசுவாள் – பண்புப்பெயர்
- காவியாவுக்கு நடனம் **ஆடுதல்** பிடிக்கும் – தொழிற்பெயர்

### பெயர்ச்சொல் : மூவிடப் பெயர்கள்

➢ **வேற்றுமை உருபேற்கும்போது திரியும் பெயர்கள்**

➢ வேற்றுமை உருபுகள் **ஐ, ஆல், கு, இன், அது, கண்** என்பன. இவற்றைக் குறித்து முன்வகுப்பில் தெளிவாகப் படித்திருப்பீர்கள். அவை **தன்மை, முன்னிலை, படர்க்கை** ஆகிய மூவிடப் பெயர்களை ஏற்றுவரும்போது எவ்வாறு திரியும் என்பது குறித்துக் காணலாம்.

### தன்மைப் பெயர்கள்

➢ நான், யான் என்பவை தன்மை ஒருமைப் பெயர்கள்.

➢ நாம், யாம் என்பவை தன்மைப் பன்மைப் பெயர்கள்.

1. யான் என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது **என்** எனத் திரியும்.

| | | | |
|---|---|---|---|
| | ஐ | – | என்னை |
| | ஆல் | – | என்னால் |
| **யான்** | கு | – | எனக்கு |
| | இன் | – | என்னின் |
| | அது | – | எனது |
| | கண் | – | என்கண் |

2. யாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது எம் எனத் திரியும். எம்மை, எம்மால், எமக்கு, எம்மின், எமது, எங்கண் என வரும்.
3. நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் நம் எனக் குறுகும்.
   நம்மை, நம்மால், நமக்கு, நம்மின், நமது, நங்கண் எனக் குறுகி வரும்.

SHANKAR IAS ACADEMY

4. **யாங்கள், நாங்கள்** என்னும் தன்மைப் பன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது **எங்கள்** எனத் திரியும். எங்களை, எங்களால், எங்களுக்கு, எங்களின், எங்களது எனத் திரிந்து வரும்.

## முன்னிலைப் பெயர்கள்

- நீ என்பது முன்னிலை ஒருமைப் பெயர். நீர், நீவிர், நீயிர், நீங்கள் ஆகியன முன்னிலைப் பன்மைப் பெயர்கள்.

1. **நீ** என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது **நின்** எனவும், **உன்** எனவும் மாறும்.

| | | | |
|---|---|---|---|
| | ஐ | – | நின்னை, உன்னை |
| | ஆல் | – | நின்னால், உன்னால் |
| **நீ** | கு | – | நினக்கு, உனக்கு |
| | இன் | – | நின்னின், உன்னின் |
| | அது | – | நினது, உனது |
| | கண் | – | நின்கண், உன்கண் |

2. **நீர்** என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது **நும், உம்** எனத் திரியும்.
**நும்மை, நும்மால், நுமக்கு, நும்மின், நுமது, நும்கண்:**
**உம்மை, உம்மால், உமக்கு, உம்மின், உமது, உம்கண்.**
3. நீங்கள் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது நுங்கள், உங்கள் என மாறுபடும்.
**நுங்களை, நுங்களால், நுங்களுக்கு, நுங்களின், நுங்களது;**
**உங்களை, உங்களால், உங்களுக்கு, உங்களின், உங்களது.**

## படர்க்கைப் பெயர்கள்

- தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது கீழ்க்காணுமாறு திரியும்.

1. தான் என்னும் படர்க்கை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது **தன்** என மாறும்.

| | | | |
|---|---|---|---|
| | ஐ | – | தன்னை |
| | ஆல் | – | தன்னால் |
| தான் | கு | – | தனக்கு |
| | இன் | – | தன்னின் |
| | அது | – | தனது |
| | கண் | – | தன்கண் |

2. **தாம்** என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் தம் எனத் திரிந்து வேற்றுமை உருபேற்கும்.
**தம்மை, தம்மால், தமக்கு, தம்மின், தமது, தங்கண்.**
3. **தாங்கள்** என்னும் படர்க்கைப் பெயர் தங்கள் எனத் திரியும்.
தங்களை, தங்களால், தங்களுக்கு, தங்களின், தங்களது, தங்கண்.

**தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்**
**நீ நீர் என்எம் நின்னும் ஆம்பிற**
**குவ்வின் அவ்வரும், நான்கு ஆறு இரட்டல் – நன்னூல், 247**

# இடுகுறிப்பெயர், காரணப்பெயர்

- நம் முன்னோர் பெயர்ச்சொற்களை அவை வழங்கும் அடிப்படையில் இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என இருவகைப்படுத்தினர்.

## இடுகுறிப்பெயர்

- நம் முன்னோர் சில பொருள்களுக்குக் **காரணம் கருதாமல்** பெயரிட்டு வழங்கினர். அவ்வாறு இட்டு வழங்கிய பெயர்கள் இடுகுறிப்பெயர்கள் ஆகும். காரணம் அறியவியலாப் பெயர்கள் எல்லாம் இடுகுறிப்பெயர்களே. பிறமொழிகளில் இடுகுறிப்பெயர்களே மிகுதியாக உள்ளன.

  **(எ.கா.) மண், மரம், காற்று, நாய், கோழி, மாடு, மலை**

- இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர் என இடுகுறிப்பெயர் இரண்டு வகைப்படும்.

### இடுகுறிப் பொதுப்பெயர்

- மலை என்பது அனைத்து மலைகளுக்கும் பொதுப்பெயர். காடு என்பது அனைத்துவகைக் காடுகளுக்கும் பொதுப்பெயர். மாடு என்பது பல்வகை மாடுகளுக்கும் பொதுப்பெயர். இவ்வாறு அனைத்துக்கும் பொதுவாக வரும் இடுகுறிப்பெயர்களை இடுகுறிப் பொதுப்பெயர் எனக் கூறுவர்.
- 'மரம்' என்னும் சொல் மா, பலா, வாழை, தென்னை முதலிய மரவகை அனைத்திற்கும் இடுகுறிப்பெயராய்ப் பொதுவாக வரும்.

  **(எ.கா.) மரம், காடு, செங்கல், முக்காலி**

### இடுகுறிச் சிறப்புப்பெயர்

- ஓர் இடுகுறிப்பெயர் குறிப்பாக ஒரு பொருளை மட்டும் குறிப்பது இடுகுறிச் சிறப்புப்பெயர் எனப்படும். 'தென்னை' என்னும் சொல் ஒரு காரணமும் இன்றி, இடுகுறிப்பெயராய் நின்று, ஒரு பொருளுக்கே (தென்னைமரம்) சிறப்பாய் வருவதனால் இடுகுறிச் சிறப்புப் பெயராயிற்று.

  **(எ.கா.) மா, கருவேலங்காடு.**

## காரணப்பெயர்

- நம் முன்னோர் சில பொருள்களுக்குக் **காரணம் கருதிப்** பெயரிட்டனர். இவ்வாறு காரணத்தோடு ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர் காரணப்பெயர் எனப்படும். தமிழில் காரணப்பெயர்களே மிகுதியாக உள்ளன.

  **நான்கு கால்கள் இருப்பதனால் 'நாற்காலி'**
  (எ.கா.) **நாற்காலி, கரும்பலகை**

- காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் எனக் காரணப் பெயர் இரு வகைப்படும்.

### காரணப் பொதுப்பெயர்

- 'பறவை' என்னும் சொல்லை எடுத்துக்கொள்வோம். பறப்பதனால் பறவை எனக் காரணம் கருதி வழங்கும் பெயராயிற்று. காகம், குயில், புறா, கிளி ஆகிய அனைத்தையும் 'பறவை' என்னும் பொதுச்சொல்லால் அழைக்கின்றோம். அதனால், இதனைக் காரணப் பொதுப்பெயர் என்கிறோம்.
- காரணப்பெயர் குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாகக் குறித்தால் அது, காரணப்பொதுப்பெயர் எனப்படும்.

  (எ.கா.) பறவை(பறப்பதனால்), **அணி**

SHANKAR IAS ACADEMY

**காரணச் சிறப்புப்பெயர்**

- வளையல்போலவே சிலபொருள் வளைந்து வட்டமாக இருக்கும். இருப்பினும், அவையெல்லாம் வளையல் என அழைக்கப்படுவது இல்லை. இருப்பினும் இச்சொல், கையில் அணியும் வளையலை மட்டுமே குறிப்பதனால், காரணச் சிறப்புப் பெயர் ஆயிற்று.
- குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களுள் ஒன்றை மட்டும் சிறப்பாகக் குறிப்பது காரணச்சிறப்புப்பெயர் ஆகும்.

  **(எ.கா.) வளையல், மரங்கொத்தி**

**வினைச்சொல்**

- வினை என்னும் சொல்லுக்குச் செயல் என்பது பொருள். செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

  **(எ.கா.) வா, போ, எழுது, விளையாடு**

- வினைச்சொல் என்பது செயலையும் காலத்தையும் காட்டும்; வேற்றுமை உருபு ஏற்காது (வேற்றுமை உருபுகள் எவை என அறிக).

**வினைச் சொற்களின் வகைகள்**

1. தெரிநிலை வினைமுற்று
2. குறிப்பு வினைமுற்று
3. பெயரெச்சம்
4. வினையெச்சம்
5. சிறப்பு வினை
6. பொது வினை என ஆறுவகைப்படும்.

**தெரிநிலை வினைமுற்று**

- ஒரு தெரிநிலை வினைமுற்று அது குறிக்கும் வினை தொடர்பான ஆறினையும் தெரிவிப்பதற்கு உரியதாக விளங்கும். அவையாவன:
  1. வினையைச் செய்பவன்
  2. வினை செய்வதற்கு உரிய கருவி
  3. வினை செய்வதற்குரிய இடம்
  4. வினைக்குரிய செயல்
  5. வினை நிகழும் காலம்
  6. வினையால் செய்யப்படும் பொருள்

**“செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவதுவினையே” (ந. நூற்பா.320)**

- எடுத்துக்காட்டாக ‘வரைந்தான்’ எனும் தெரிநிலை வினைமுற்றை எடுத்துக் கொள்வோம்.
- ‘வரைந்தான்’ என்னும் சொல்லை நோக்கிய மாத்திரத்தில் வரைதல் என்ற நிகழ்வு இறந்த காலத்தில் (காலம்) நடைபெற்றுள்ளது என அறிய முடிகிறது. வரைந்தான் என்னும் வினை முற்று

| | |
|---|---|
| 1. வரைதல் | (நிகழ்வு/செயல்) |
| 2. வரைந்தான் | (காலம்) |
| 3. அவன் வரைந்தான் | (செய்பவன்) |
| 4. அவன் தூரிகையால் வரைந்தான் | (கருவி) |

SHANKAR IAS ACADEMY

5. அவன் தூரிகையால் சுவரில் வரைந்தான் (இடம்)
6. அவன் தூரிகையால் சுவரில் படம் வரைந்தான் (செயப்படுபொருள்) என எழுத இடமளிக்கிறது

- இந்நூற்பாவில் 'ஆறும்' என்னும் சொல்லில் உள்ள 'உம்' 'முற்றும்மை' ஆகும். இதனைச் 'சிறப்பும்மை' என்றும் கூறுவர். மேற்கூறிய ஆறும் சிறப்புக்குரியன என்பது அவர்கள் தரும் விளக்கம்.
- இம்முறையில் பொருள் கொள்வதால் சிறப்பற்ற சிலவும் இவ்வினையால் அறியப்படும் என்பது தெரிகிறது. அவை 'இன்னதற்கு', 'இது பயன்' என்னும் வாய்பாட்டில் அமையும்.
- அதாவது மேற்கூறிய எடுத்துக்காட்டில், யாரோ ஒருவர் கேட்டதற்காக வரைந்தான்; பணம் பெற வேண்டும் என்னும் பயன் நோக்கி வரைந்தான் முதலியனவற்றையும் பெற வாய்ப்புண்டு.
- தெரிநிலை வினைமுற்றில் பகுதி செயலையும், விகுதி செய்பவனையும், இடைநிலை காலத்தையும் காட்டும் என அறிக.

## வேர்ச்சொல் அறிதல், வேர்ச்சொல்லிலிருந்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், பெயரெச்சம் வகை அறிதல்

### வேர்ச்சொல்

#### அறிமுகம்

- உலகில், ஆறாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகள் உள்ளன. இம்மொழிகளின் வரலாற்றினை, மொழியாய்வு அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.
- மொழியாராய்ச்சியில் வேர்ச்சொல் ஆய்வு, முதன்மையாக விளங்குகிறது. உலக மொழிகளில் முதன்மையான மொழிகளை, மொழியறிஞர்கள் செம்மொழிகள் என்பர். தமிழ், அச்செம்மொழி வரிசையில் இடம்பெற்றுள்ளது.
- மக்கள் வழக்கிலுள்ள பெரும்பாலான மொழிகளுக்கு, அகராதிகள் உருவாக்கப் பட்டுள்ளன. இலக்கிய வழக்கும் செல்வாக்கும் மிக்க மொழிகளுக்கு, அகராதிகள் மட்டுமன்றி வேர்ச்சொல் அகராதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

#### வேர்ச்சொல் ஆய்வு – முன்னுரை

- வேர்ச்சொல் ஆய்வு என்னும் இத்தலைப்பு, வேர்ச்சொல் ஆய்வு என்றால் என்ன என்பது பற்றியும் தமிழில் வேர்ச்சொல் ஆய்வு எவ்வாறு தோற்றம் பெற்றது என்பது பற்றியும் முதலில் விளக்குகிறது;
- அதனைத் தொடர்ந்து, தமிழ் திராவிடமொழிகள் வேர்ச்சொல் உறவினையும் தமிழ் – இந்தோ ஐரோப்பிய மொழிகள் வேர்ச்சொல் உறவினையும், வேர்ச்சொற் கோட்பாட்டையும் விளக்குகிறது.

விள்ளல், விண்டல், விழைதல் ஆகிய சொற்களின் அடிப்பகுதி 'விள்' என்பது. 'விள்' என்ற அடிச்சொல்லிற்கு 'விருப்பம்' என்பது பொருள்.

'விள்' என்னும் அடிப்பகுதிதான் வங்கம் – பங்கம்; வண்டி – பண்டி; வெற்றிலை – Betel போல் 'வகர பகர மாற்றத்தில் மேலை இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் விள் – Phil எனத் திரிந்தது. 'விருப்ப ஆய்வு' என்பதன் வழியாகவே, 'வேர்ச்சொல் ஆய்வு' 'Philology' ஆனது என்பார் பாவாணர்.

SHANKAR IAS ACADEMY

## அகராதி – வேர்ச்சொல் அகராதி

- அகராதிகளில், சொற்களுக்குரிய சரியான வடிவங்களும் பொருள்களும் தரப்பட்டிருக்கும். வேர்ச்சொல் அகராதிகளில் இவற்றிற்கு அப்பால், மொழியின் சொற்கள் தோன்றி வளர்ந்த வரலாறு விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கும்.
- இதனால், ஒரு மொழியை நுட்பமாக அறிவதற்கு இயல்பான அகராதியைவிட, வேர்ச்சொல் அகராதி துணை புரியும்.
- ஆங்கிலத்தில், வேர்ச்சொல் ஆய்வினை Etymological Studies என்பர். 'Etyma' என்ற சொல்லிற்கு உண்மைப்பொருள் (Real meaning) என்பது பொருள்.
- மேற்குலகத்தில் வேர்ச்சொல் ஆய்வினை, Philology' என்று கூறினர். Philology என்பதற்கு 'விருப்பமான ஆய்வு' என்பது பொருள். சொல்லாய்வு ஒரு விருப்பமான கலையாக இருந்ததை இதன்வழி நாம் அறிகிறோம்.

## அகராதியும் வேர்ச்சொல் அகராதியும்

- 'உவரி' என்னும் ஒரு தமிழ்ச்சொல்லினை, அகராதியும் வேர்ச்சொல் அகராதியும் இருவேறு வகையில் விளக்கப்படுத்தும்.
- உவரி = உப்பு, கடல். இவ்விளக்கத்தினை அகராதியில் காணலாம். ஆயின், வேர்ச்சொல் அகராதி 'உவர்' என்னும் உப்பினைக்கொண்டிருப்பதால் கடல், 'உவரி' எனப்பட்டது.
- 'உ' என்னும் உயர்வுப்பொருள் சுட்டடியாக உ–உக–உகர்ப்பு – உவர் – உவரி என இச்சொல் பிறந்தது. மகன் – மவன் போல் ககரம் வகரமாகி, 'உகர்', 'உவர்' ஆனது.
- 'உகப்பே உயர்வு' என்பது, தொல்காப்பியம். இவ்வாறெல்லாம் வேர்ச்சொல் அகராதியில் விளக்கம் விரியும்.
- கடல்நீரைப் பாத்திகளில் தேக்கி, அந்நீரைக் கதிரவன் வெப்பத்தால் வறளச் செய்து, உருவாக்குவதே உப்பாகும். கடல்நீர் காய்ந்ததும் கடல்நீரிலிருந்த ஒரு வெண்பொருள் உப்பிக்கொண்டு, நிலத்தின் மேல் எழும்.
- இதனால், இவ்வெண்பொருள் 'உப்பு' என்னும் பெயர் பெற்றது ஒப்புநோக்கத்தக்கது. மேல் எழுதல் என்னும் பொருளில் உருவான 'உவர்' என்னும் இச்சொல், உவரி என உப்பினையும் கடலையும் குறித்ததற்கு அப்பால் மிகுதியானது என்ற பொருளிலும் பிறகு பொருள் நீண்டது.
- மிகுதியானது என்ற உவரியே பிறகு, உபரி எனப் பேச்சு வழக்கில் திரிந்தது. இவ்வாறான கூடுதல் விளக்கங்களையும் வேர்ச்சொல் அகராதி கொண்டிருக்கும்.
- இயல்பான அகராதியைவிட வேர்ச்சொல் அகராதி, ஒரு மொழியைப்பற்றி அறிவதற்குக் கூடுதல் விளக்கம் தந்து உதவுகிறது. இதனை 'உவரி' சொல்லிற்குக் காட்டிய விளக்கத்தின்வழி அறிந்தோம்.

## வேர் என்பதன் விளக்கம்

- தொல்காப்பியர், 'வியலென் கிளவி அகலப் பொருட்டே' என ஒரு நூற்பா செய்தார். இந்நூற்பாவின்வழி 'வியல்' சொல், அகலப் பொருள் உடையது என்பதை அறிகிறோம்.
- அகன்ற, பெரிய உலகம் – வியனுலகம் என்றெல்லாம் அழைக்கப்படும் பழந்தமிழ் மரபில் இந்த உண்மையைக் காணலாம்.

SHANKAR IAS ACADEMY

**உவர் – Over**

**உப்பி மேலெழுந்தது உப்பு. உகப்பி மேலெழுந்தது உக – உகர் – உவர். இவ் 'உவர்' மேலெழுதல் பொருளிலும் கூடுதல் பொருளிலும் இந்தோ ஐரோப்பியத்தில் உபர் – உபரியானது.**

**கீழை இந்தோ ஐரோப்பியமாகிய சமற்கிருதத்தின் உபரியே மேலை இந்தோ ஐரோப்பிய மொழிகளில், Over என்பதற்கு வேர் என்பார் ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் கீற்று (The Concise Dictionary of ENGLISH ETYMOLOGY–Walter W. Skeat)**

- நிலத்திற்கு அடியில் மரம், செடி, கொடிகளைத் தாங்கி நிற்கும் ஓர் உறுப்பு, வேர். நிலத்தில் ஊன்றும்போது, சிறிதாக இருந்த இந்த உறுப்பு மெல்ல மெல்ல வியலித்து வளர்கிறது.
- அதன் அடிப்படையிலேயே வியல் – வியர் வேர் என இச்சொல் உருவானது. பெயர் – பேர் என்பதுபோல், வியர் – வேர் ஆனது.
- மரம், செடி, கொடிகளைத் தாங்கி, வியலித்து வளர்ந்து நிற்கின்ற நிலைத்திணை (தாவரங்கள்) களின் வேர்கள்போலவே, மொழியின் சொற்கள் பலவற்றையும் தாங்கி நிற்கின்ற மூலச்சொற்களை நாம் வேர்ச்சொற்கள் என்கிறோம். ஆங்கிலத்திலும் இவ்விரண்டின் வேரினையும் Root என்ற ஒரு சொல்லால் வழங்குவது குறிப்பிடத்தக்கது.

## தமிழில் வேர்ச்சொல் ஆய்வின் தோற்றம்

- தமிழின் முழுமுதல் இலக்கணநூல், தொல்காப்பியம். இந்நூலில், வேர்ச்சொல் ஆய்வுக்கான பல தரவுகள் உள்ளன. தொல்காப்பிய உரியியல் பகுதிகள் பலவும் இச்செய்திகள் கொண்டவை.
- 'அமர்தல் மேவல்' என்பது, ஓர் உரியியல் நூற்பா. அமர்தல் என்னும் சொல்லிற்குப் பொருந்துதல் என்பது பொருள். அமர்தல் சொல்லின் அடிப்பகுதி, 'அம்' என்பதாகும்.
- இதன் அடிப்படையிலேயே ஒன்றோடொன்று பொருந்தி வளரும் மூங்கில் அம் – அமை எனப்பட்டது. ஆடமை புரையும் வனப்பில் பணைத்தோள்' என்ற குறுந்தொகைப் (131) பாடலில் ஆடுகின்ற மூங்கில், (ஆடு + அமை) ஆடமை எனப்பட்டது.
- சோற்று உருண்டையைக் குறிக்கும் ஒரு தமிழ்ச்சொல், 'அமலை'. இச்சொல்லும் அம் – அமல் – அமலை எனப் பல சோற்றுப் பருக்கைகள் பொருந்தியதால் தோன்றிய பெயரேயாகும்.
- இரு நாட்டுப் படைவீரர்கள் திரண்டு நின்று போர் செய்தலை 'அமர்' எனவும், போர் நிகழும் இடம் – அமர்க்களம் எனவும் அழைக்கப்படும். இங்கு வந்த அமர் சொல்லும் 'அம்' என்னும் கூட்டப்பொருள் வேரிலிருந்து உருவானவையே.
- புளி, மிளகாய் போன்ற பொருள்களை வைத்து, நெருக்கி அரைக்கும் கல், அம்மிக்கல். இவ்வாறெல்லாம் 'அம்' ஆகிய பொருந்துதற் பொருள் வேர், பொருந்தற் பொருளில் இணைந்திருப்பதைத் தேவநேயப் பாவாணர் நிரல்பட விளக்குவார்.

## தமிழும் திராவிட மொழிகளும்

- தமிழையும் தமிழுடன் மிக நெருக்கமான உறவுடைய தென்னக மொழிகளையும் முதற்கண் இணைத்து ஆய்வு செய்தவர், கால்டுவெல்.

- தென்னக மொழிகளில் தமிழே மூத்தது, முதன்மையானது என்பதைக் கால்டுவெல் நிறுவினார். பாவாணர், தமிழைத் 'திராவிடத் தாய்' என்றே குறித்துத் தனிநூலும் எழுதினார்.
- தமிழுக்கு மிக நெருக்கமான திராவிட மொழிகளின் வரலாற்றையும் அவற்றின் சொற்களையும் மூலமொழியாகிய தமிழுடன் உறவுபடுத்தி ஆய்வதனால் மட்டுமே நல்விளக்கம் பெறமுடியும்.

**சேரல் – கேரல் – கேரலன் – கேரளன்**

- சங்க இலக்கியத்தில் மலைநாடு, 'சாரல்நாடு' எனச் சொல்லப்படுகிறது. சாரல் என்னும் இச்சொல், 'சேரல்' எனத் திரிந்து, மலைநாட்டு அரசர்களைக் குறித்துள்ளது.
- களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், குடக்கோ இளஞ்சேரல் போலச் சங்க காலத்திலேயே அரசர்கள் பெயரில் இச்சொல் வழக்கு பெற்றுள்ளது.
- சேரல் என்னும் இச்சொல், பிறகு 'சேரலன்' எனத் திரிந்தது. சீர்த்தி – கீர்த்தி: செம்பு – கெம்பு போல் சகர, ககர மாற்றத்தில் 'சேரலன்' பிறகு, 'கேரலன்' ஆனது.
- மங்கலம் – மங்களம்: மெல்ல – மெள்ள போல ல – ள போலிமரபில் கோலம் – கேரளம் ஆனது. இக் கேரளம் சொல்லே இன்று 'கேரளா' (KERALA) எனப்படுகிறது.
- புழை என்பது, 'துளையை'க் குறிக்கும் தமிழ்ச்சொல். நீர் ஓடும் துளையுள்ள இடமே புழைக்கடை. பேச்சுவழக்கில், இப் புழைக்கடை, புழக்கடை எனப்படும்.
- உள்துளையுடைய காய், 'புழல்காய்'. அதுவே, பிறகு 'புடல்காய் ஆனது. நாழி + உரி = நாடுரி எனத் திரியுமென்பார் தொல்காப்பியர். ழகரம் – டகரமாகத் திரிந்த அதே போக்கில்தான் புழல்காய், தமிழில் புடல்காய் ஆனது.
- இப் புடல்காய், புடலங்காய் – பொடலங்காய் – பொள்ளங்காய் எனவும் மக்கள் வழக்கில் பல திரிபுகளில் வழங்குகிறது.
- 'புல்' என்னும் ஒரு வேர்ச்சொல்லுக்குத் துளை என்பது பொருள். தொல்காப்பியர், நிலைத்திணைகளைப் புல், மரம் என இரண்டாகப் பிரித்தார்.
- உள்துளை நிலைத்திணைகளே புல்வகை என்றானது. இப் 'புல்' சொல், புல் + து = புற்று எனவும். புல் – பொல் – பொல் + து – பொற்று – பொற்றல் – பொத்தல் எனவும் புல்–புள்–புளு–புளுகு எனவும் புல்–புள் புளு –புழு–புழை எனவும் எல்லாம் பலப்பல துளை என்னும் பொருள்தரும் சொற்களை அதன்போக்கில் ஈன்றுள்ளது.
- மலையாளமொழி. புடல் – புடலை – புடலங்காய் என்னும் தமிழ் வழக்கினைப் 'படோல்'எனக் கூறுகிறது.
- மலையாளத்தில் மட்டுமல்லாமல், பிற திராவிடமொழிகளிலுள்ள சொற்களுக்கும் உரிய முழுப்பொருளையும் வேர்ப்பொருளையும் அறிய, தமிழே பெருந்துணையாக உள்ளது.
- இதன் உண்மைத்தன்மையைப் பர்ரோ, எமினோ ஆகிய மேல்நாட்டு மொழியியல் அறிஞர்கள் ஆய்ந்து தொகுத்துரைத்த 'திராவிட மொழிகளில் ஒப்பிலக்கண வேர்ச்சொல் அகராதி' (Dravidian Erymological Dictionaries – Burrow & Emeneau) நூல்வழி காணலாம்.

SHANKAR IAS ACADEMY

- தமிழின் செவ்வாம்பல், ‘கெம்பாவல்’ எனவும், செவ்வாழை’கெம்புபாளெ’ எனவும், பாம்பு ‘ஹாவு’ எனவும், பல்லி – ‘ஹல்லி’ எனவும் கன்னடத்தில் திரிந்துள்ளன. இக் கன்னட வழக்குகளின் உண்மைப்பொருளைத் தமிழுடன் உறவுபடுத்தித்தான் அறியமுடியும்.
- தம்முன், தம்பி என்பன தமிழ்ச்சொற்கள். தன்முன் பிறந்தவன் தம்முன்; தன்பின் பிறந்தவன் – தம்பி தெலுங்கு, தம்பியைத் ‘தம்முடு’ என்கின்றது.
- குதித்தோடும் குதிரையை அதே தெலுங்கு, ‘குர்ரமு’ என்கிறது. ஊசல் ஊஞ்சல் என்பன நல்ல தமிழ்ச்சொற்கள். தமிழின் ஊஞ்சலைத் துளு, ‘உஜ்ஜாலு’ என்றுரைக்கும்.

**இந்தோ ஐரோப்பிய வேர் நானூற்று அறுபத்தொன்று**

- உலகின் மிகப்பெரிய மொழிக்குடும்பம். இந்தோ – ஐரோப்பியம். எழுநூற்று எழுபது கோடிக்கும் மேற்பட்ட உலக மக்கள் தொகையில், நானூறு கோடிக்கும் மேற்பட்டோர் இந்தோ ஐரோப்பியம் பேசுவோர். இக்குடும்பமொழிகள்.
- நூற்றுக்கும் மேற்பட்டனவாக உலகில் உள்ளன. இம்மொழிகள் யாவற்றிலும் வழங்கும் சொற்கள் கோடிக்கணக்கில் இருக்கும்.
- ஆயின், இக்கோடிக்கணக்கான இந்தோ ஐரோப்பிய மொழிகளின் சொற்களுக்கும் நானூற்று அறுபத்தொன்றே வேர்ச்சொற்களாக உள்ளன என்பார், ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் மாமேதை கீற்று (Walter Skeat).
- இதன்வழி, வேர்ச்சொற்கள் நிலையான எண்ணிக்கை உடையன என்பதையும் அவற்றிலிருந்தே சொற்கள் காலந்தோறும் பெருகிப் பெருகி உருவாகின்றன என்பதையும் நம்மால் அறியமுடிகிறது.
- உலக மொழிகள் பலவற்றையும் வேர்ச்சொல் ஆய்வின்மூலம் மொழியறிஞர்கள் இன்று ஒன்றாக்கிக் காண்கின்றனர்.
- அவ்வகை ஆய்வின் முடிவாக, உலக மொழிக்குடும்பங்களை ஒரு பெருங்குடும்பத்தில் அவர்கள் அடக்கிவிடுகின்றனர்.
- இந்தோ ஐரோப்பிய மொழிகள் அனைத்திற்கும் உரியனவாகக் காட்டப்பட்டுள்ள வேர்ச்சொற்கள், பல்வேறு குடும்ப மொழிகளுக்கும் உரியனவாகப் பொருந்தியுள்ளன.
- திராவிடமொழிக் குடும்பங்களுக்குரிய வேர்ச்சொற்கள் எனப்படுவன பலவும் இந்தோ ஐரோப்பிய மொழிகளின் வேர்களுடனும் பொருந்தியிருப்பதைக் கால்டுவெல் முதலான அறிஞர்கள் உறவுபடுத்தி ஆய்ந்துள்ளனர்.

**கூழாங்கல்:** மலைமேலிருந்து ஆற்றிலும் அருவியிலும் அடித்து வரப்படும் கூரான கற்கள், பல இடங்களிலும் மோதி மோதிக் குழைவாகிவிடுகிறது. இக்குழைவான கல்லே கூழ் + ஆம் + கல் = கூழாங்கல் என்றானது.

SHANKAR IAS ACADEMY

# எதிர்ச்சொல், எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்

| எதிர்ச்சொல் | | | |
|---|---|---|---|
| 1. | காய் × கனி | 36. | இசை × வசை |
| 2. | அணுகு × விலகு | 37. | இணங்கல் × பிணங்கல் |
| 3. | ஐயம் × தெளிவு | 38. | இணை × தனி |
| 4. | ஊக்கம் × சோர்வு | 39. | இம்மை × மறுமை |
| 5. | உண்மை × பொய்மை | 40. | இதம் × அகிதம் |
| 6. | மாணவன் × மாணவி | 41. | இன்சொல் × வன்சொல் |
| 7. | உழவன் × உழத்தி | 42. | இன்பம் × துன்பம் |
| 8. | சிறுவன் × சிறுமி | 43. | இல்லறம் × துறவறம் |
| 9. | பாட்டன் × பாட்டி | 44. | இலாபம் × நஷ்டம் |
| 10. | தோழன் × தோழி | 45. | இயற்கை × செயற்கை |
| 11. | அரசன் × அரசி | 46. | இளமை × முதுமை |
| 12. | எளிது × அரிது | 47. | ஈதல் × ஏற்றல் |
| 13. | ஈதல் × ஏற்றல் | 48. | ஈரம் × வறட்சி |
| 14. | அந்நியர் × உறவினர் | 49. | உண்டு × இல்லை |
| 15. | இரவலர் × புரவலர் | 50. | உண்மை × இன்மை |
| 16. | நல்லார் × அல்லார் | 51. | உத்தமன் × அதமன் |
| 17. | பெரியார் × சிறியார் | 52. | உபகாரம் × அபகாரம் |
| 18. | மதியாதார் × மதிப்பவர் | 53. | உபயம் × தனி |
| 19. | அகம் × புறம் | 54. | உயர்வு × தாழ்வு |
| 20. | அகழ்தல் × தூர்த்தல் | 55. | உள் × வெளி |
| 21. | அகலம் × குறுக்கம் | 56. | உறவு × பகை |
| 22. | அகலல் × கிட்டுதல் | 57. | ஊடல் × கூடல் |
| 23. | அங்கன் × அநங்கன் | 58. | எரிதல் × அவிதல் |
| 24. | அடி × முடி | 59. | ஏறல் × இறங்கல் |
| 25. | அடைப்பு × திறப்பு | 60. | ஒன்னார் × உற்றார் |
| 26. | அந்நியம் × அநந்நியம் | 61. | ஓங்கல் × ஒடுங்கல் |
| 27. | அர்த்தம் × அநர்த்தம் | 62. | கட்டுதல் × அவிழ்த்தல் |
| 28. | அறம் × மறம் | 63. | கண்டம் × அகண்டம் |
| 29. | அலர்தல் × குவிதல் | 64. | கலக்கம் × தெளிவு |
| 30. | ஆகூழ் × போகூழ் | 65. | கவனம் × மறதி |
| 31. | ஆக்கல் × அழித்தல் | 66. | களங்கம் × நிஷ்களங்கம் |
| 32. | ஆதாரம் × நிராதாரம் | 67. | கற்றார் × கல்லார் |
| 33. | ஆதி × அந்தம் | 68. | கனவு × நனவு |
| 34. | ஆரம்பம் × முடிவு | 69. | காப்பாற்றுதல் × கைவிடுதல் |
| 35. | ஆரோகணம் × அவரோகணம் | 70. | காலம் × அகாலம் |

SHANKAR IAS ACADEMY

# எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை அறிதல், பிழைதிருத்துக.

- ஒன்று என்பதைக் குறிக்க **ஓர், ஒரு** ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன.
- உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.
- உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஒரு என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) ஓர் ஊர் ஓர் ஏரி
ஒரு நகரம் ஒரு கடல்

- இவை போலவே, உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் **அஃது** என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.
- உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் **அது** என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) அஃது இங்கே உள்ளது
அது நன்றாக உள்ளது

| பிழை | சரி |
|---|---|
| ஓர் மாவட்டம் | ஒரு மாவட்டம் |
| ஒரு அமைச்சர் | ஓர் அமைச்சர் |
| அவரது மகனோடு | அவருடைய மகனோடு |
| மேற்க்கொண்டார் | மேற்கொண்டார் |
| அந்த சுற்றுலா | அந்தச்சுற்றுலா |
| கண்டதை கூறவே | கண்டதனைக் கூறவே |
| அவர்தான் | அவர்தாம் |

| எண்ணுப் பெயர்களுக்குரிய எண்ணடைகள் | | |
|---|---|---|
| **எண்ணுப் பெயர்கள்** | **எண்ணடைகள்** | **எடுத்துக்காட்டு** |
| ஒன்று | ஒரு, ஓர் | ஒருவர், ஒரு மரம், ஓர் உயிர் |
| இரண்டு | இரு, ஈர் | இருவர், இருவகை, ஈரெழுத்து |
| மூன்று | மூ, மு | மூவர், முத்தமிழ் |
| நான்கு | நால், நாலு | நால்வர், நாலுநாள் |
| ஐந்து | ஐ | ஐவர், ஐம்பெருங்காப்பியம் |
| ஆறு | அறு | அறுவர், அறுபடை |
| ஏழு | எழு, ஏழ் | எழுவர், ஏழிசை |
| எட்டு | எண் | எண்மர், எண்டிசை |
| பத்து | பதின், பன் | பதின்மர், பன்னிருவர் |

- சிலர் ந, ண, ன/ ற, ர/ ல, ள, ழ ஆகிய எழுத்துகள் பற்றித் தெளிவில்லாமல் இருக்கின்றனர்.
- உயிர்மெய் எழுத்துகளில் வரும் மேல்விலங்கு, கீழ்விலங்கு, கொம்புகள், துணைக்கால் போன்றவற்றைப் பயன்படுத்தும் முறையிலும் கவனம் தேவை.

SHANKAR IAS ACADEMY

- சொல்லில் எழுத்துப் பிழை இல்லாதிருக்கலாம். ஆனால் பொருட்பிழை ஏற்பட வாய்ப்புண்டு. முடிந்தால் தரலாம்/முடித்தால் தரலாம்; கறி தின்றான்! கரி தின்றான் – இங்கே எழுத்துப் பிழையில்லை. ஆனால் பொருள் வேறுபாடு உண்டு. இடமறிந்து எழுத வேண்டும்.

## எழுத்துப் பிழைகள்

- பிழைகளைக் களைவதற்கான வழிமுறைகளை அறிந்தால் நல்ல தமிழில் எழுத முடியும்.
- எழுத்துகள் குறித்த அடிப்படையான செய்திகள் சிலவற்றை மீண்டும் நினைவுகூர்தல் இங்கு உதவும்.

## எழுத்துப்பிழை தவிர்க்க

- எல்லா இடங்களிலும் பேச்சுத் தமிழை எழுதமுடியாது. பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம் எனலாம்.
- குறில், நெடில் வேறுபாடு அறியாதிருப்பதும் எழுத்துகள் வரும்முறையில் தெளிவற்றிருப்பதும் பிழைகள் மலியக் காரணமாய் அமைகின்றன.
- எழுத்துகளின் ஒலிப்புமுறை, அவற்றுக்கான வரிவடிவ வேறுபாடு, அவை சொல்லில் வரும் இடங்களையும் (முதல், இடை, கடை) தெள்ளத் தெளிவாய் மனத்துள் பதித்துக்கொள்வதைக் கடமையாகக்கொள்ள வேண்டும்.
- ந, ண, ன / ற, ர / ல, ள, ழ இவற்றின் வேறுபாடு அறிந்து வாய்விட்டு ஒலித்துப் பழகுவது சாலச் சிறந்தது.
- இவ்வெழுத்துகளுக்கான சில அடிப்படை இலக்கணத்தையும் கசடறக் கற்றல் இன்றியமையாத கற்றல் பணியாகும்.
- மேலுள்ள எட்டு எழுத்துகளில் நகரம் மட்டுமே சொல்லின் தொடக்கமாக வரும். றகர மெய் சொல்லின் இறுதியில் வராது. மற்றவை சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வரும்.

# வினைச்சொல்

| **ஒரு செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்** |
|---|

- வந்தான், போகிறான். உண்டார் முதலியன வினைச் சொற்கள் ஆகும். தொழிலின் காலம் காட்டும் சொல் வினைச்சொல் ஆகும்.

  **பாரதியார் பாஞ்சாலி சபதத்தை இயற்றினார்.**

  **குமுதா பள்ளிக்கூடம் சென்றாள்.**

  **விளக்கு எரிந்தது.**

- இத்தொடர்களில் உள்ள, இயற்றினார். சென்றாள், எரிந்தது என்பவை, பாரதியார். குமுதா, விளக்கு முதலான பெயர்களின் வினையை அல்லது செயலைக் குறிக்கின்றன.
- இவ்வாறு, வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் – Verb எனப்படும்.
    1. வினைச்சொல் வேற்றுமையை ஏற்காது.
    2. வினைச்சொல் காலம் காட்டும்.

SHANKAR IAS ACADEMY

- இது மூவகைப்படும்.
    1. இறந்தகாலம் – படித்தான், நடித்தான், சென்றாள், உறங்கினார்.
    2. நிகழ்காலம் – படிக்கின்றார், நடிக்கிறார், செல்கின்றாள். உறங்குகிறார்.
    3. எதிர்காலம் – படிப்பான், நடிப்பான், செல்வாள், உறங்குவாள்.
- முடிவு பெற்ற வினைச்சொல் முற்று எனப்படும். முடிவு பெறாத வினைச்சொல் எச்சம் எனப்படும்.
- வினைச்சொற்கள் என்பது தொழில் அல்லது செயலைக் குறிக்கும். இவை காலம் காட்டும் இடைநிலைகளையும் பால், எண் காட்டும் விகுதிகளையும் பெற்று வரும். ஒவ்வொரு வினைச்சொல்லுக்கும் தனித்தனியே சொற்பொருள் உண்டு.

எ.கா.

- பார் என்னும் வினைச்சொல் பார்த்தல் அல்லது காணுதல் என்ற தனிப்பொருளைத் தரும்.
- இது போன்றே இரு, பாடு, ஆடு, செய், அழு, தள்ளு போன்ற வினைச் சொற்களும் தமக்கென்று தனித்தனிப் பொருளைத் தரும்.
- முதல் வினைக்குத் துணையாக துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை, துணைவினை எனப்படும்.
- துணைவினை என்பது இன்னொரு வினையுடன் சேர்ந்து வருகின்ற நிலையில் தன் பொருளை இழந்து சேர்ந்துவரும் வினைக்குப் புதிய பொருளைத்தரும் வினைச்சொல் ஆகும்.
- தமிழில் இரு என்பது தனியே வரும்போது இருத்தல் எனும் பொருளைத் தருகிறது. அதுவே போ, வா, செய், படு போன்ற வினைகளுடன் சேரும்போது போயிருந்தான், வந்திருந்தான், செய்திருந்தான், படுத்திருந்தான் என்றாகிறது. இங்கு இரு என்பது துணை வினைப் பொருளைத் தருகிறது.
- தமிழில் துணை வினை, தலைமை வினைக்குப் பிறகு வருகின்றது. தலைமை வினைகள் எப்போதும் போய், வந்து, செய்து.
- படுத்து போன்ற வினையெச்ச வடிவிலேயே வருகின்றன. துணைவினை படுத்திரு, செய்துவிடு, என்பவற்றில் வருவதுபோல் ஏவல் வினையாக அல்லது போயிருந்தான், வந்துவிட்டான் வந்துவிட்டான் என்பவற்றில் து ள்ளதுபோல் முற்றுவினை வடிவத்தில் வருகின்றது.
- தற்காலத் தமிழில் **விடு. அடி, அருள், அழு, ஆயிற்று, இடு, இரு, எடு, ஒழி, கட்டு, கிட, கிழி, கூடு, கொடு, கொள், தள்ளு, தீர், தொலை, நில், படு, பண்ணு, பார், பிடி, போ, போக, போடு, மாட்டு. முடி, வா, வாங்கு, வேண்டு, வை** போன்ற நாற்பதிற்கும் மேற்பட்ட வினைகள் துணைவினைகளாக வழங்குகின்றன.
- இத்துணைவினைகள் **முயற்சி, பலன் அளிக்காமை, உறுதி, துணிவு, முடிவு, மிகுதி, காரணம், கண்டிப்பு, வெறுப்பு, கோபம், சிறப்பு** போன்ற பல்வேறு பொருள்களை உணர்த்துவனவாக அமைந்துள்ளன. இவற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களை உணர்த்தும் வகையிலும் சில துணைவினைகள் அமைந்துள்ளன.

எ.கா

**விடு**

- இத்துணைவினை உறுதிப்பொருளைத் தருகிறது.

**எழுதிவிடு**

- இதற்குப் பொருள் எழுது என்பதாகும். ஆனால் எழுது என்பதில் இல்லாத உறுதிப்பொருள் எழுதிவிடு என்பதில் உள்ளது.
- விடு என்ற துணைவினையே அப்பொருளைத் தருகிறது. அதேபோல எழுதினேன், எழுதுகிறேன், எழுதுவேன் என்ற வினைச் சொற்களில் இல்லாத உறுதிப்பொருள், அவ்வினைச் சொற்களோடு விடு என்ற துணைவினையைச் சேர்த்து முறையே எழுதிவிட்டேன். எழுதிவிடுகிறேன். எழுதிவிடுவேன் என்று கூறும்போது இருப்பதைக் காணலாம்.
- ஆக, விடு என்னும் துணைவினைக் கட்டாயம் அல்லது கண்டிப்பு என்ற பொருளைத் தருவதாகவும் வழங்குகிறது.

## பெயர் வினை வேறுபாடு

- சொற்களுள் சில, பெயர்சொல்லாக வழங்குகின்றன; வேறுசில, வினைச்சொல்லாக வழங்குகின்றன; மற்றும் சில, பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் வழங்குகின்றன.
- இம்மூவகைப்பட்ட சொற்களுள் பெயராயும் வினையாயும் இருக்கும் சொல், பெயர்ச்சொல்லாய் நிற்கும்போது தரும் பொருள் இது என்பதையும், வினைச் சொல்லாய் நிற்கும்போது தரும் பொருள் இது என்பதையும் மாணவர் அறியவேண்டுவது அவசியம்.
- அதுபற்றி, கீழே அட்டவணையில் அவ்வாறு பெயர்வினைப் பொருள் வேறுபாட்டைக் காட்டும் சொற்களுள் சில விளக்கப்பட்டுள்ளன.

## உவமை, மரபு, பழமொழி

- மரபுத்தொடர், பழமொழித்தொடர், உவமைத்தொடர் முதலிய தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுவதன் மூலம் கருத்தை எளிதில் விளங்கச் செய்யலாம்.

**(எ.கா.)** தாய், தன் குழந்தையைக் கண்ணுங்கருத்துமாக வளர்த்தாள்.

அண்ணா, தங்குதடையின்றிப் பேசும் ஆற்றல் உடையவர்.

**உவமைத் தொடரின் பொருளறிதல்:**

**உவமைத் தொடர்கள்**

நாம் பேச்சிலும் எழுத்திலும் கருத்துகளை எளிதாக விளக்குவதற்காகச் சில தொடர்களைப் பயன்படுத்துவோம். அவை உவமைத் தொடர்கள் எனப்படும். ஒவ்வொரு உவமைத் தொடருக்கும் தனிப் பொருள் உண்டு.

**(எ.கா)**

1. மடை திறந்த வெள்ளம் போல் – தடையின்றி மிகுதியாக. திருவிழாவைக் காண மடைதிறந்த வெள்ளம் போல மக்கள் வந்தனர்.
2. உள்ளங்கை நெல்லிக்கனி போல – வெளிப்படைத் தன்மை. பாரதியின் பாடல்கள் உள்ளங்கை நெல்லிக்கனி போல அனைவருக்கும் விளங்கும்.

SHANKAR IAS ACADEMY

**உவமைகளைச் சொற்றொடரில் அமைத்தல்:**

**(எ–டு)**

1. என் இளமைக்காலத்துச் செயல்கள், பசுமரத்தாணிபோல நெஞ்சில் ஆழமாகப் பதிந்துள்ளன.
2. அறிஞர் அண்ணாவின் புகழ், குன்றின்மேலிட்ட விளக்குப்போலப் பாரெங்கும் ஒளிவீசுகின்றது.
3. மேகலையின் மனக்கவலை தந்தையைக் கண்டதும் பகலவனைக் கண்ட பனிபோலாயிற்று.
4. திருக்குறளின் மாட்சி குன்றிலிட்ட விளக்காக உலக நாடுகளில் பெருகி வருகிறது.
5. வேளாண்மைக்கு நீர் பற்றாக்குறையால் காய்ந்துவிட்ட நெற் பயிர்களைக் கண்ணுற்ற உழவன் இலவு காத்த கிளி போலானான்.
6. சாலை நேர்ச்சியில் உயிரிழந்த தன் மகனின் உடலைக் கண்ட தாய் அனலில் விழுந்த புழுப்போலத் துடித்தாள்.
7. தமிழைப் பழித்துக் கூறிய சொற்கள் என் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது.
8. ஆசிரியர் கற்பித்த இலக்கணம் பசுமரத்தாணி போல் என் மனத்தில் பதிந்தது.
9. அன்னை தெரசாவின் புகழ் குன்றின்மேலிட்ட விளக்குப்போல ஒளிவீசுகின்றது.
10. அமெரிக்க மண்ணில் விவேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவு, சர்க்கரைப்பந்தல் தேன்மழை பொழிந்ததுபோல அமைந்தது.
11. முயற்சி இல்லாதவர்களுக்குச் சொல்கின்ற அறிவுரை கடல் கரைத்த பெருங்காயம் போலப் பயனற்றது.
12. பூவுடன்சேர்ந்த நாரும் மணப்பதுபோல் என் மொழியாசிரியரிடம பாடம் படித்த நான் மொழிப்புலமை பெற்றுப் புகழடைந்தேன்.

## மரபுத்தமிழ்

### மரபு

| |
|---|
| "எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" – **நன்னூல்** |

- **எலிக் குட்டி, தென்னை ஓலை, மான் குட்டி**
- மேற்கண்ட சொற்களை நாம் நாள்தோறும் பயன்படுத்தி வருகிறோம். ஆனால் இவை பிழையான (வழுவான) சொற்களாகும்.
- எலிக் குட்டி என்பதை 'எலிக் குஞ்சு' என்றும் தென்னை ஓலை என்பதைத் 'தென்னங் கீற்று என்றும், மான் குட்டி என்பதை 'மான் கன்று' என்றும் முன்னோர் வழங்கி வந்தனர். இதுவே மரபாகக் கருதப்படுகிறது.
- எனவே, எலிக் குஞ்சு, தென்னங் கீற்று. மான் கன்று என்பவை மரபு பிறழாத சரியான சொற்கள் ஆகும். இவ்வாறு எப்பொருளை, எச்சொல்லால் முன்னோர் வழங்கி வந்தார்களோ. அப்பொருளை அச்சொல்லாலேயே வழங்குவது மரபு எனப்படும்.

SHANKAR IAS ACADEMY

(எ–டு) கிளிப்பிள்ளை
ஆட்டுக்குட்டி
யானைக்கன்று
வாழைக்கன்று

- இவற்றை, ‘கிளிக்குட்டி’ என்றோ ‘ஆட்டுக்கன்று’ என்றோ எழுதுவது தவறு. அது மரபுக்கு முரணாகும்.

**இவ்வாறு வரும் சில மரபுகள்**

- திணை மரபு
- பால் மரபு
- காலம்
- இளமைப் பெயர்
- ஒலிமரபு
- வினைமரபு
- தொகை மரபு

### 1. திணை மரபு

- இரண்டு வகைப்படும். அவை
    1. உயர்திணை
    2. அஃறிணை

**உயர்திணை**

- ஆறு அறிவுடைய மனிதர்களை உயர்திணை என்பர்.

**அஃறிணை**

- பறவைகள், விலங்கினங்கள், தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருள்களை அஃறிணை என்பர்.
- பெயர்ச்சொற்களை உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் எனப் பிரிக்கிறோம். வீரன், அம்மா, நடிகன், கண்ணகி – உயர்திணைப் பெயர்கள். பூ, மரம், பூனை, குருவி – அஃறிணைப் பெயர்கள்.

### 2. பால் மரபு:

- பால் என்பது மற்றொருவகைப் பிரிவு.
- பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் ஐந்து பால்களாகப் பிரிக்கிறோம்.
- அவை

| | | |
|---|---|---|
| ஆண்பால் | – | அவன், அண்ணன் |
| பெண்பால் | – | அவள், அரசி |
| பலர்பால் | – | அவர்கள், இளைஞர்கள் |
| ஒன்றன்பால் | – | அது, குதிரை |
| பலவின்பால் | – | அவை, மாடுகள் |

SHANKAR IAS ACADEMY

**உயர்திணையில்,**

1. ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால். (எ.கா.) மாணவன், செல்வன்.
2. ஒரு பெண்ணைக் குறிப்பது பெண்பால். (எ.கா) ஆதினி, மாணவி.
3. ஒன்றுக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பது பலர்பால். (எ.கா.) மாணவர்கள், மக்கள் .

**அஃறிணையில்,**

4. ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால்.
   (எ.கா.) கல், பசு.
5. ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பலவின்பால்.
   (எ.கா.) மண் புழுக்கள், பசுக்கள்.

- ஆண்பால் பெயர்ச்சொல் ஆண்பால் வினைமுடிவையே பெறும்.

  அவன் வந்தான்.
  **(பெயர்) (வினை)**

- அவன் வந்தாள் என்றோ, அவன் வந்தார் என்றோ எழுதுவது பிழையாகும். இதேபோல்தான், பிற பால் சொற்களையும் எழுதுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பெயர் | – | வினை |
| அவள் | – | வந்தாள் |
| அவர்கள் | – | வந்தார்கள் |
| அது | – | வந்தது |
| அவை | – | வந்தன |

- "தோட்டத்தில் பூக்கள் பூத்து இருந்தது. பறிப்பதற்குக் கமலா வந்தாள். கூடவே இராணியும் வேணியும் வந்தாள். அப்போது தோட்டத்தில் ஒரு பாம்பு ஓடின. கமலா கத்தினான். இராணி மட்டும் பயமின்றிப் பாம்பை நெருங்கினார்கள்."

## கலைச் சொல்

## பல்துறை சார்ந்த கலைச் சொல் அறிவோம்

**கலைச்சொல்:**

- பேச்சு வழக்கில் ஆங்கிலச்சொற்கள் மிகுதியாகக் கலந்து மக்களால் பேசப்பட்டு வருகின்றன. ஆனால், அதற்குரிய தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தும் வழக்கம் குறைந்து வருகிறது.
- சான்றாக cellphone என்னும் ஆங்கிலச் சொல்லிற்குக் கைபேசி.
- செல்லிடப்பேசி, அலைபேசி போன்ற சொற்கள் பயன்பாட்டில் உள்ளன.
- இவ்வாறான சொற்களை உருவாக்கிக் கொள்ளும் முறைமைக்குக் கலைச்சொல்லாக்கம் என்று பெயர். அறிவியலுக்கு ஏற்புடைய பல கலைச்சொற்கள் வழக்கில் பயன்படுத்தப்படுகின்றன.
- சில கலைச்சொற்கள் பொருத்தமில்லாமல் உள்ளன. காலத்திற்கேற்ப வளரும் சில துறைகளில் கலைச்சொற்களின் தேவை மிகுதியாக இருக்கிறது.

## கலைச்சொற்கள் – பொருள்

- ஒரு மொழியில் காலத்திற்கேற்ப, துறைசார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக, உருவாக்கிப் பயன்படுத்தப்படும் சொற்களைக் கலைச்சொற்கள் என்கிறோம்.
- ஒரு மொழி தன் வேர்ச்சொற்களைக் கொண்டு புதிய புதிய கலைச்சொற்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.
- இவ்வாறு உருவாக்கிக் கொள்ளும்போது மொழி தன்னைப் புதுப்பித்துக்கொண்டு புதிய செழிப்பினைப் பெற்று மேலும் வளர்ச்சி பெறும்.
- எடுத்துக்காட்டாக website.blog, போன்றவை தகவல் தொழில்நுட்பத்தின் புதிய கண்டுபிடிப்புகள். இவற்றிற்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களாக உள்ள இணையம்.
- வலைப்பூ போன்றவை தகவல்தொழில் நுட்பக் கலைச்சொற்கள் ஆகும்.
- கலைச் சொற்கள் பெரும்பாலும் காரணப்பெயர்களாகவே இருக்கும்.
- பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம்.
- ஆனால், கலைச்சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையானவிடத்துப் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவதாகும்.

## கலைச்சொற்கள் பயன்படும் துறைகள்

- மருத்துவம், பொறியியல், தகவல் தொடர்பியல் முதலான துறைசார்ந்த கலைச்சொற்கள் இன்றைய அறிவியல் சூழலுக்கேற்பப் பயன்படுத்தப்படுகின்றன.
- மருத்துவமனை (CLINIC), குருதிப்பிரிவு (BLOOD GROUP), மருந்தாளுநர் (PHARMACIST), ஊடுகதிர் (X – RAY), குடற்காய்ச்சல் (TYPHOID), களிம்பு (OINTMENT) முதலியவை மருத்துவக் கலைச்சொற்கள்; எழுதுசுவடி (NOTE BOOK), விடைச்சுவடி (ANSWER BOOK) பொதுக் குறிப்புச் சுவடி (ROUGH NOTE BOOK), விளக்கச்சுவடி (PROSPECTUS) போன்றவை கல்வி சார்ந்த கலைச்சொற்கள்.
- இவ்வாறு துறை சார்ந்த கலைச்சொற்கள் இலட்சக் கணக்கில் தமிழில் உள்ளன. ஒவ்வொரு துறையிலும் உள்ள புதிய கலைச்சொற்களைத் தொகுத்து அகரவரிசைப்படுத்திக் கலைச்சொல் அகராதிகள் வெளியிடப்படுகின்றன.

## கலைச்சொல்லாக்கப் பணியின்போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்

- ஆக்கப்பெறும் சொல் தமிழ்ச்சொல்லாக இருத்தல் வேண்டும்.
- பொருள் பொருத்தமுடையதாக, அதே நேரத்தில் செயலைக் குறிப்பதாக அமைதல் வேண்டும்.
- வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும்.
- ஓசை நயமுடையதாக இருத்தல் வேண்டும். தமிழிலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும். நல்லவை அல்லாதவற்றைக் குறிக்கக்கூடாது.
- எடுத்துக்காட்டாக, இ–மெயில், ஸ்மார்ட்ஃபோன், விண்டோஸ் 10.80 ஆகிய ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக மின்னஞ்சல், திறன்பேசி, பலகணி 10, 8ஆம் தலைமுறை போன்ற கலைச்சொற்கள் தமிழில் உள்ளன.
- அக்கலைச் சொற்களை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும். இப்பணிக்கு இதழ்களும் ஊடகங்களும் துணைநிற்க வேண்டும்.

SHANKAR IAS ACADEMY

## புதிய கண்டுபிடிப்புகளுக்கான கலைச்சொற்கள்

- இதழ்கள், மின்இதழ்கள் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையத்தளம் போன்றவற்றிலிருந்து பெறமுடியும்.
- தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் இருபதிற்கும் மேற்பட்ட துறைகளுக்குக் கலைச்சொற்களை வெளியிட்டுள்ளது.
- பள்ளியில் செயல்படும் கையெழுத்து இதழில் கலைச்சொற்களுக்கெனத் தனியிடம் ஒதுக்கி, மாணவர்களிடையே கலைச்சொற்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

## தமிழில் கலைச்சொற்களின் இன்றியமையாமை

- உலகின் தொன்மையான மொழிகளுள் இன்றும் நிலைத்து நிற்கின்ற மொழி, தமிழ்மொழி. காலத்திற்கேற்பத் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் மொழியே வாழும்.
- மருத்துவம், பொறியியல், தொழில்நுட்ப அறிவியல் ஆகியவற்றைத் தமிழ்வழியில் பயில, கலைச்சொல்லாக்கம் இன்றியமையாததாக உள்ளது.
- தாய்மொழி வழியிலான சிந்தனை மட்டுமே புதிது புதிதான கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கும்.
- உலகின் எந்த மூலையில் எவ்வகையான கண்டுபிடிப்பு நிகழ்ந்தாலும் உடனுக்குடன் ஜப்பானியர்கள் தங்கள் மொழியில் புதிய சொல்லை உருவாக்கிவிடுவர்.
- தாய்மொழி வழியில் ஜப்பானியர்கள் அறிவியல் தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பதால் அங்கே நாள்தோறும் புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்கின்றன.
- கலைச்சொல்லாக்கம் இல்லையென்றால் அவற்றை நாம் ஒலிபெயர்ப்புச் சொல்லாக மட்டுமே பயன்படுத்த முடியும்.
- எனவே, கலைச்சொற்களை நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது இன்றியமையாதது.

**அறிவியல் கலைச்சொற்களைத் தமிழாக்குவதில் உள்ள முறைகள் குறித்து அறிவியல் அறிஞர் வா.செ. குழந்தைசாமி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.**

| | |
|---|---|
| பழந்தமிழிலக்கியச் சொல்லைப் பயன்படுத்துதல் | வலவன் (PILOT) |
| பேச்சுமொழிச் சொல்லைப் பயன்படுத்துதல் | அம்மை (MEASLES) |
| பிறமொழிச் சொல்லினைக் கடன்பெறல் | தசம முறை (Decimal) |
| புதுச்சொல் படைத்தல் | மூலக்கூறு (Molecule) |
| உலக வழக்கை ஏற்றுக்கொள்ளல் | எக்ஸ் கதிர் (X–ray) |
| பிறமொழித்துறைச் சொற்களை மொழிபெயர்த்தல் | ஒளிச்சேர்க்கை (Photosynthesis) |
| ஒலிபெயர்த்துப் பயன்படுத்தும் சொற்கள் | மீட்டர், ஓம் (Meter, Ohm) |
| உலக அளவிலான குறியீடுகள், சூத்திரங்கள் | $\sum \sqrt{A} = \pi r^2 H_2O, Ca$ |

- தமிழில் கலைச்சொற்களை உருவாக்கிடும்போது பழந்தமிழிலக்கியச் சொற்களையும் பேச்சுவழக்குச் சொற்களையும் புதிய சொற்களையும் இயன்றவரை பயன்படுத்தல் வேண்டும்.



SHANKAR IAS ACADEMY

- அன்றாட உரையாடலில் தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
- கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபடுவோர், பிறமொழிச்சொற்களை அப்படியே கையாள்வதையோ ஒலிபெயர்ப்புச் சொற்களாக மாற்றுவதையோ கடன்வாங்குவதையோ தவிர்த்தல் வேண்டும்.
- நாம் கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபடும்போது தமிழில் எண்ணற்ற புதிய சொற்களை உருவாக்குவதோடு படைப்புகள் சார்ந்த அறிவையும் பெறலாம்.
- ஒரு சொல்லை மொழிபெயர்க்கும்போதோ அல்லது புதிய சொல்லை உருவாக்கும்போதோ அச்சொல் அதே போன்ற வேறு பல சொற்களை உருவாக்க உதவ வேண்டும்.
- எடுத்துக்காட்டாக, library என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நூலகம், நூல்நிலையம் ஆகிய சொற்கள் கையாளப்படுகின்றன.
- இச்சொற்களில் நூலகம் என்னும் சொல்லே மேலும் பல சொற்களை உருவாக்கும் ஆக்கத்திறன் கொண்டது.
- library – நூலகம், librarian – நூலகர், library science – நூலக இயல்.
- இன்றைய நிலையில் பலரும் கலைச்சொற்களை உருவாக்கிய வண்ணம் உள்ளனர்.
- கற்றறிந்தோர், கற்றறியாதோர், கைவினைஞர்கள், பயிற்றுநர், மாணவர்கள், மகளிர், குழந்தைகள் எனப் பலரும் கலைச்சொற்களைத் தாமாகவே உருவாக்குகின்றனர்.
- அறிவியல் கலைச்சொற்களை உருவாக்கும்போது பல்வேறு சொற்களை ஆள்கின்றனர். எடுத்துக்காட்டாக, Antibiotics – எதிர் உயிர்ப்பொருள், நுண்ணுயிர்க் கொல்லிகள், உயிர் எதிர் நச்சுகள், கேடுயிர்க் கொல்லிகள், நச்சுயிர்க் கொல்லிகள் எனப் பல்வேறு கலைச்சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.
- இக்கலைச் சொற்கள் தமிழில் தமிழில் சொல்லாக்க வளர்ச்சியினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. ஆனால், கலைச்சொற்களைக் கற்பதிலும் அவற்றைப் புரிந்துகொள்வதிலும் துறைசார்ந்த நிலையில் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.
- இவற்றைத் தவிர்க்க அச்சொற்களைத் தரப்படுத்திப் பயன்படுத்த வேண்டும். இதற்கென குழு ஒன்றை உருவாக்கலாம்.

## பாரதியின் மொழிபெயர்ப்பு

- 'தென் ஆப்பிரிக்காவின் பெண்கள் விடுதலை' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதத் தொடங்கிய பாரதி, Member என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லொன்றை உருவாக்க முனைந்தார். மெம்பர் என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் எனக்கு அகப்படவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சர்யம். அவயவி சரியான வார்த்தையில்லை. அங்கத்தான் கட்டிவராது. சபிகன் சரியான பதந்தான். ஆனால் பொதுஜனங்களுக்குத் தெரியாது. யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டுபிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்த்தேன்; உறுப்பாளி? ஏதெல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனதிற்குப் பொருந்தவில்லை. என்ன செய்வேன்! கடைசியாக மெம்பர் என்று எழுதி விட்டேன். இன்னும் ஆர, அமர யோசித்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொருமுறை சொல்லுகிறேன்.

SHANKAR IAS ACADEMY

SHANKAR IAS ACADEMY — Best Academy for Civil Services Exam Coaching — SINCE 2004

I'M TOP 2026 TNPSC

# பொதுவான கலைச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| வலஞ்சுழி | Clock wise | கலப்படம் | Adulteration |
| இணையம் | Internet | நுகர்வோர் | Consumer |
| தேடுபொறி | Search engine | வணிகர் | Merchant |
| இடஞ்சுழி | Anti Clock wise | நல்வரவு | Welcome |
| குரல்தேடல் | Voice Search | ஆயத்த ஆடை | Readymade Dress |
| தொடுதிரை | Touch Screen | சிற்பங்கள் | Sculptures |
| முகநூல் | Facebook | ஒப்பனை | Makeup |
| செயலி | App | சில்லுகள் | Chips |
| புலனம் | Whatsapp | சிற்றுண்டி | Tiffin |
| வலசை | Migration | நாட்டுப்பற்று | Patriotis |
| புகலிடம் | Sanctuary | இலக்கியம் | Literature |
| கண்டம் | Continent | கலைக்கூடம் | Art Gallery |
| தட்பவெப்பநிலை | Climate | மெய்யுணர்வு | Knowledge of Reality |
| வானிலை | Weather | அறக்கட்டளை | Trust |
| புவிஈர்ப்புப்புலம் | Gravitational Field | தன்னார்வலர் | Volunteer |
| செயற்கை நுண்ணறிவு | Artificial Intelligence | இளம் செஞ்சிலுவைச் சங்கம் | Junior Red Cross |
| செயற்கைக் கோள் | Satellite | மனிதநேயம் | Humanity |
| மீத்திறன் கணினி | Super Computer | கருணை | Mercy |
| நுண்ணறிவு | Intelligence | உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை | Transplantation |
| கல்வி | Education | நோபல் பரிசு | Nobel Prize |
| தொடக்கப் பள்ளி | Primary School | சரக்குந்து | Lorry |
| மேல்நிலைப் பள்ளி | Higher Secondary School | சாரண சாரணியர் | Scouts & Guides |
| நூலகம் | Library | சமூகப் பணியாளர் | Social Worker |
| மின்படிக்கட்டு | Escalator | ஊடகம் | Media |
| மின்தூக்கி | Lift | மொழியியல் | Linguistics |
| மின்னஞ்சல் | E–Mail | பருவ இதழ் | Magazine |
| குறுந்தகடு | Compact Disk (CD) | பொம்மலாட்டம் | Puppetry |
| மின்நூலகம் | E – Library | ஒலியியல் | Phonology |
| மின்நூல் | E–Book | எழுத்திலக்கணம் | Orthography |
| மின் இதழ்கள் | E–Magazine | இதழியல் | Journalism |
| பண்டம் | Commodity | உரையாடல் | Dialogue |
| பயணப்படகுகள் | Ferries | தீவு | Island |
| கடற்பயணம் | Voyage | இயற்கை வளம் | Natural Resource |
| தொழில் முனைவோர் | Entrepreneur | உவமை | Parable |
| பாரம்பரியம் | Heritage | வன விலங்குகள் | Wild Animals |

# பத்தி வினா

## கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்

**1. கீழுள்ள உரைப்பத்தியை ஆசிரியர் படிக்க, மாணவர்கள் உற்றுக்கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.**

மனிதனுடைய மனத்தில் உணர்ச்சிகளை எழுப்பி அழகையும் இன்பத்தையும் அளிக்கின்ற பண்பு அழகுக்கலைகளுக்கு உண்டு.

அழகுக்கலைகள், மனத்திலே உணர்ச்சியை எழுப்பி அழகுக் காட்சியையும் இன்ப உணர்ச்சியையும் கொடுத்து மகிழ்விக்கிறபடியினாலே, நாகரிகம் படைத்த மக்கள் அழகுக் கலைகளைப் போற்றுகிறார்கள்; பேணி வளர்க்கிறார்கள்; துய்த்து இன்புற்று மகிழ்கிறார்கள். அழகுக்கலைக்கு இன்கலை என்றும் கவின்கலை என்றும் நற்கலை என்றும் வேறு பெயர்கள் உண்டு. இவ்வழகுக் கலைகள் ஐந்து. அவை, கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பன.

மயிலை சீனி. வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்

**வினாக்கள்**

1. நாகரிகம் படைத்த மக்கள் எதனைப் போற்றுகின்றனர்?
   அழகுக் கலை
2. அழகுக்கலைக்கான பண்பு யாது?
   மனிதனுடைய மனத்தில் உணர்ச்சிகளை எழுப்பி அழகையும் இன்பத்தையும் அளிக்கின்றது
3. அழகுக்கலைக்கான வேறு பெயர்களை எழுதுக.
   இன்கலை, கவின்கலை, நற்கலை
4. அழகுக்கலை எத்தனை வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
   ஐந்து
5. உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பிடுக.
   தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்

**2. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, **சுத்தம் சோறு போடும்** என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல்நலமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

**வினாக்கள்**

1. பழமொழியின் சிறப்பு ________ சொல்வது
   அ) விரிவாகச் ஆ) சுருங்கச்
   இ) பழைமையைச் ஈ) பல மொழிகளில்

2. நோயற்ற வாழ்வைத் தருவது ______________ சுத்தம்
3. உடல்நலமே ______________ அடிப்படை உழைப்பு
4. உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை? உணவு, உடை, உறைவிடம்
5. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக. சுத்தம்

**3. பின்வரும் செய்திக்குப் பொருத்தமான திருக்குறள் எது எனக் கண்டறிந்து எழுதுக.**

2016 ஆம் ஆண்டு ரியோ நகரில் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் கலந்துகொண்டார். உயரம் தாண்டுதல் போட்டியில் அவர் தங்கப் பதக்கம் பெற்றார். செய்தியாளர்கள் அவருடைய தாயிடம் நேர்காணல் செய்தனர். "என் மகனின் வெற்றி எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அவனைப் பெற்ற பொழுதைவிட இப்போது அதிகமாக மகிழ்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

**வினாக்கள்**

அ) செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

ஆ) ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

இ) இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

**4. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1921 ஆம் ஆண்டு மத்திய தரைக் கடலில், ஒரு கப்பல் இங்கிலாந்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. தமிழர் ஒருவர் கப்பலின் மேல்தளத்தில் நின்று கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவரது உள்ளத்தில் கடல்நீர் ஏன் நீலநிறமாகக் காட்சியளிக்கிறது என்ற வினா எழுந்தது. அவ்வினா அவரை உறங்க விடவில்லை. இங்கிலாந்து பயணம் முடிந்து இந்தியா திரும்பினார். பிறகு பாதரச ஆவி விளக்கு, பென்சீன் மற்றும் நிறமாலைக் காட்டி ஆகியவற்றின் உதவியுடன் தமது ஆய்வைத் தொடங்கினார்.

ஆய்வின் முடிவில் 1928 பிப்ரவரி 28 ஆம் நாள் "இராமன் விளைவு" என்னும் தமது கண்டுபிடிப்பை வெளியிட்டார். இக்கண்டுபிடிப்பு இந்தியாவிற்கு அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. அவர் தமது கண்டுபிடிப்பை வெளியிட்ட பிப்ரவரி 28 ஆம் நாளை நாம் ஆண்டு தோறும் "தேசிய அறிவியல் நாள்" எனக் கொண்டாடி மகிழ்கிறோம். அவர் யார் தெரியுமா? அவர்தான் சர். சி. வி. இராமன்.

**வினாக்கள்**

1. இராமன் விளைவைக் கண்டறிந்தவர் யார்? __________ சர். சி. வி. இராமன்
2. இராமன் அவர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்த கேள்வி எது?
   அ) கடல்நீர் ஏன் கறுப்பாகக் காட்சியளிக்கிறது?
   ஆ) கடல்நீர் ஏன் நீல நிறமாக இல்லை?
   இ) கடல்நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது?
   ஈ) கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது?
3. தேசிய அறிவியல் நாள் எப்போது கொண்டாடப்படுகிறது? பிப்ரவரி 28
4. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பிடுக. "இராமன் விளைவு"

SHANKAR IAS ACADEMY

**5. பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும்.**

காமராசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர். ஊழியர் அவர்களைத் தடுப்பதைக் காமராசர் கவனித்தார். உடனே அவர்களை உள்ளே அழைத்தார். “யாரைப் பார்க்க வந்தீங்க?” என்று அன்புடன் வினவினார். “எங்க அண்ணனுக்குத் தேர்வுக்குப் பணம் கட்ட அம்மாவிடம் வசதியில்லே. உங்களைப் பார்த்தால்…” என்று சிறுமி கூறி முடிப்பதற்குள், “அம்மா அனுப்பி விட்டாரா?” என்று காமராசர் கேட்டார். “இல்லை நாங்களாகத்தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாகக் கொண்டு போய் வித்துட்டு வருவாங்க. அதில் வரும் வருமானத்தை வச்சுத்தான் எங்களைப் படிக்க வைக்கிறாங்க” என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்டதும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்.

மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரைத் தேடி வந்தனர். “ஐயா தேர்வுக்குப் பணம் கட்டியாச்சு. இந்த இரசீதை (பற்றுச் சீட்டை) அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க” என்றனர். அதனைக் கேட்டுக் காமராசர் மனம் நெகிழ்ந்தார்.

வினாக்கள்

1. காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள்
   அ) பெற்றோர்     ஆ) சிறுவன், சிறுமி
   இ) மக்கள்     ஈ) ஆசிரியர்கள்
2. இந்நிகழ்வு சிறுவனது குடும்பத்தின் எப்பண்பை விளக்குகிறது?
   அ) ஏழ்மை     ஆ) நேர்மை
   இ) உழைப்பு     ஈ) கல்லாமை
3. மறுநாள் குழந்தைகள் வந்ததும் காமராசர் மனம் __________ நெகிழ்ந்தார்
4. சிறுவனும் சிறுமியும் எதற்காகக் காமராசரின் வீட்டிற்கு வந்தனர்? பணம்
5. காமராசர் செய்த உதவி யாது? பணம்

**6. கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக**

மனிதர்களுக்குத் தேவையான பொருள்களைக் கிடைக்கச் செய்வதே வணிகத்தின் நோக்கங்களுள் ஒன்று. ஓர் இடத்தில் உற்பத்தியாகும் பொருள்களைப் பல இடங்களுக்கு அனுப்புவதும் பல இடங்களில் கிடைக்கும் பொருள்களை ஓர் இடத்தில் கிடைக்கச் செய்வதும் வணிகம் ஆகும்.

கிடைக்கும் பொருள்களின் மதிப்பைக் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகமாகும். சான்றாகக் கல் என்பது விற்பனைப் பொருளன்று. ஆனால் அதனைச் செதுக்கிச் சிலையாக மாற்றலாம். உதிரும் கல்தூளைக் கோலமாவாக மாற்றலாம். இதனை மதிப்புக் கூட்டுதல் என்பர்.

வினாக்கள்

1. கிடைக்கும் பொருள்களின்__________க் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகம்.
   (அ) அளவை     (ஆ) மதிப்பை
   (இ) எண்ணிக்கையை     (ஈ) எடையை
2. சிலை செதுக்கப்படும்போது உதிரும் கல்தூளை ________ மாற்றலாம். கோலமாவாக
3. வணிகத்தின் நோக்கம் என்ன? மனிதர்களுக்குத் தேவையான பொருள்களைக் கிடைக்கச் செய்வது
4. மதிப்புக் கூட்டுதல் என்றால் என்ன? கிடைக்கும் பொருள்களின் மதிப்பைக் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது
5. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பை எழுதுக **மதிப்புக் கூட்டுதல்**

SHANKAR IAS ACADEMY

**7. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக**

இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர்களுள் ஒருவர் வ.உ.சிதம்பரனார். வ.உ.சி. அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். அவர், வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மை பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் கப்பல்களுக்குப் போட்டியாக உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மேலும், பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்பார்.

**வினாக்கள்**

1. சுதேசி நாவாய்ச் சங்கத்தை நிறுவியவர் யார்? வ.உ.சிதம்பரனார்.
2. வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது யாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்? பாரதியார்
3. வ.உ.சி. அவர்கள் யாருடைய பாடல்களை விரும்பிக் கேட்பார்? பாரதியார்
4. வ.உ.சி. அவர்களின் பன்முகத் தன்மைகள் யாவை? வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர்
5. வ.உ.சி. அவர்கள் புலமை பெற்றிருந்த மொழிகள் யாவை? தமிழிலும் ஆங்கிலத்திலும்

**8. கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

பண்டைக்காலத்தில் அரசன் போர் செய்யக் கருதியவுடன், அவனது போர்ப்பறை முழங்கும். அப்பறையின் ஓசை நாற்றிசையையும் அதிரச் செய்யும். அவ்வோசையைக் கேட்ட போர்வீரர்கள் போர்க்கோலம் பூண்டு மிக்க ஆர்வத்தோடு போருக்குப் புறப்படுவார்கள். தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நாற்படைகளும் திரண்டெழும். அரசன் படைத்தலைவரோடு சென்று அவற்றைப் பார்த்து மகிழ்வான்.

போர் செய்யப் புறப்படுவதற்கு முன்பாக அரசன், தன் அரண்மனையில் வீரர்களுக்குப் பெருவிருந்து அளிப்பான். அதனைப் 'பெருஞ்சோறு அளித்தல்' என்பர். சேனை புறப்பட்டுச் செல்லும் வழியில் அரசனும் படைத்தலைவர்களும் தங்குதற்குரிய பாடி வீடுகள் அமைக்கப்பட்டிருக்கும். அங்கு அரசனும் வீரரும் இளைப்பாறுவர். அப்பொழுது ஆடலும் பாடலும் நடைபெறும்.

**வினாக்கள்**

1. நாற்றிசை, நாற்படை - இத்தொகைச்சொற்களை விரித்தெழுதுக.
   நாற்றிசை - வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு
   நாற்படை – தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை
2. உம் சேர்ந்திருக்கும் பெயர்ச்சொற்களை எடுத்தெழுதுக.
3. பெருஞ்சோறு அளித்தல் என்றால் என்ன? அரசனும் படைத்தலைவர்களும் வீரரும் போர் செய்யப் புறப்படுவதற்கு முன்பாக அரசன், தன் அரண்மனையில் வீரர்களுக்குப் பெருவிருந்து அளிப்பான்

**9. கீழுள்ள உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

ஆயிரம் யானைகளைப் போரில் வென்ற அரசனுக்காகப் பாடப்படும் இலக்கியவகை பரணி. 'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி' என்பது பரணியின் இலக்கணம். இவ்விலக்கியம் தொண்ணூற்றாறு சிற்றிலக்கியவகைகளுள் ஒன்று. அரசர்கள் இருவருக்கிடையேயான போரில், தோற்ற அரசனது நாட்டின் பெயரால் பரணி பாடப்படும்.



SHANKAR IAS ACADEMY

போருக்குரிய தெய்வமாகக் காளியைக் கருதுவர். பரணி இலக்கியங்களுள் மிகச்சிறந்தது கலிங்கத்துப்பரணி. போரில் குலோத்துங்க மன்னனிடம் கலிங்க நாட்டு மன்னன் தோற்றுப்போனான். அதனால், கலிங்கத்துப்பரணி எனப் பெயர் சூட்டப்பட்டது. இந்நூல் ஜெயங்கொண்டாரால் பாடப்பட்டது.

**வினாக்கள்**

1. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களை எடுத்து எழுதுக. ஆயிரம், தொண்ணூற்றாறு, ஒன்று
2. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள இணைப்புச்சொல் எது? அதனால்
3. 'அமர்' என்பதன் பொருள்
   அ) யானை ஆ) போர் இ) வெற்றி
4. தொண்ணூற்றாறு – பிரிக்கும் முறை ________
   அ) தொண் + ஆறு ஆ) தொண்ணூறு + ஆறு இ) தொள்ளாயிரம் + ஆறு

**10.** **அறம்**, பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கனையும் உணர்த்தி, மக்களை நல்வழிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் எனப்படும்.

மேற்கண்ட நான்கு பொருள்களுள் ஒன்றோ சிலவோ குறைந்து வந்து தெய்வம், அரசன், வள்ளல், குரு முதலியோரின் சிறப்பினைக் கற்பனை செய்து பாடுவது சிற்றிலக்கியம். இவற்றை வடநூலார் பிரபந்தம் என்பர்.

பிரபந்தம் என்பதற்கு நன்கு **கட்டப்பட்டது** என்பது பொருள்.
தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் **தொண்ணூற்றாறு** வகைப்படும்.

**வினாக்கள்**

1. பேரிலக்கியங்கள் என்றால் என்ன? அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கனையும் உணர்த்தி, மக்களை நல்வழிப்படுத்தும் இலக்கியங்கள்
2. பிரபந்தம் என்பதன் பொருள் யாது? நன்கு கட்டப்பட்டது
3. உரைநடைப்பகுதியில் இடம்பெற்றுள்ள எதிர்ச்சொற்களை எழுதுக. பேரிலக்கியங்கள் x சிற்றிலக்கியம்
4. இலக்கியம் – பிரிக்கும் முறை
   அ) இல + கியம் ஆ) இலக்கிய + இம் இ) இலக்கு + இயம்

**11.** **கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

படத்தில் நீங்கள் காணும் பறவை மரகதப் புறாவாகும். தமிழ்நாட்டின் தேசியப் பறவையாக இது விளங்குகிறது. இப்பறவை மழைக்காடுகளிலும், அடர்ந்த ஈரமான இடங்களிலும் வாழ்கின்றது. இப்பறவையின் இறக்கைகள் மரகதப்பச்சை நிறத்தில் இருக்கும்.
மரகதப்புறா, பறப்பதனைவிட நிலத்தில் நடப்பதனையே மிகவும் விரும்புகிறது. இப்பறவை விதைகள், பழங்கள், பல்வேறுவகையான தாவரங்களை விரும்பி உண்ணும். இப்பறவை மரங்களில் கூடுகட்டி, முட்டையிடுகிறது. இப்பறவையின் முட்டை மஞ்சள் கலந்த வெண்ணிறத்தில் காணப்படும். இப்பறவை எளிதாகப் பழகக்கூடிய வகையில் உள்ளது.



SHANKAR IAS ACADEMY

**வினாக்கள்**

1. தமிழ்நாட்டின் தேசியப் பறவை எது? மரகதப் புறா
2. மரகதப்புறா எங்கு வாழ்கிறது? மழைக்காடுகளிலும், அடர்ந்த ஈரமான இடங்களிலும்
3. மரகதப்புறா எதனை விரும்பி உண்கிறது? விதைகள், பழங்கள், பல்வேறுவகையான தாவரங்கள்
4. மரகதப்புறா முட்டையின் நிறம் யாது? மஞ்சள் கலந்த வெண்ணிறம்
5. நிரப்புக. மரகதப்புறா, பறப்பதனைவிட ________ விரும்புகிறது. நடப்பதனையே

**12. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**வினாக்கள்**

1. பின்வரும் நான்கு வினாக்களுக்கும் பொருந்தும் ஒரு விடையைத் தருக.
   அ) மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை? 'காங்கேயம்'
   ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது? 'காங்கேயம்'
   இ) பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கின்ற காளை இனம் எது? 'காங்கேயம்'
   ஈ) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது? 'காங்கேயம்'
2. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
   அ) கர்நாடகம் ஆ) கேரளா
   இ) இலங்கை ஈ) ஆந்திரா
3. பிரித்து எழுதுக: கண்டெடுக்கப்பட்டுள்ளன.
   அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன ஆ) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன
   இ) கண்டெடுக்க + பட்டு + உள்ளன ஈ) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன
4. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன – இது எவ்வகைத் தொடர்?
   அ) வினாத்தொடர் ஆ) கட்டளைத்தொடர்
   இ) செய்தித்தொடர் ஈ) உணர்ச்சித்தொடர்

SHANKAR IAS ACADEMY

# பிறமொழி சொல்

## பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக்குதல்

- நமது தாய் மொழியாகிய தமிழ் மொழியில் எந்தப் பொருள் பற்றி எழுதினாலும் பேசினாலும் பிற மொழிச்சொற் கலப்பின்றித் தொடர்கள் அமைய வேண்டும்.
- தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதுவதும் பேசுவதும் இப்போது மிகுதியும் காணப்படுகிறது.
- இக்குறையைக் களைந்து செம்மையான தமிழ்நடையில் எழுதவும் பேசவும் பிற மொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை அறிந்துகொள்வது இன்றியமையாததாகும்.

## தமிழில் வேண்டாத வேற்று மொழிச் சொற்கள்:

- வேண்டாத பிறமொழிச் சொற்கள் சில தமிழில் வழங்குகின்றன.
- தமிழ் மொழியில் இயல்பாக உள்ள சொற்களை விலக்கி அவற்றுக்குப் பதில் வேற்றுமொழிச் சொற்களைப் புகுத்துவது தமிழின் வளத்தைக் குறைப்பதாகும்.
- தமிழில் இல்லாத வேற்றுமொழிச் சொற்களையும், தொடர்களையும், அவற்றுக்குரிய பொருத்தமான மாற்றுச் சொற்களைக் காணும் வரை வழங்குவதில் தவறில்லை.
- ஆனால், இயல்பாகத் தமிழ் மொழியில் ஏற்கெனவே உள்ள சொற்களை விடுத்து வேற்று மொழிச் சொற்களைப் புகுத்துவது தாய் மொழிக்குக் கேடுபயக்கும் செயலாகும் என்பதை மறத்தல் கூடாது.

## அமல், அமுல்:

- இது அரபி மொழிச் சொல்லாகும். தமிழில் 'அமுல்' என்றால் கொள்ளை யென்று பொருள்படும். எனவே 'அமல் / அமுல்' படுத்தப்படுகிறது என்பதற்குப்பதில் 'செயல்படுத்தப்படுகிறது' என்றும், 'அமலில் உள்ளது' என்பதைச் 'செயல்முறையில் உள்ளது' என்றும் கூறுவதுதான் சிறந்தது.

## தாக்கல் செய்யப்பட்டது:

- 'வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது' என்றே சாதாரணமாக இப்போது கூறப்பட்டு வருகிறது. 'தாக்கல்' என்றால் தமிழில் 'அடித்தல் / மோதல்' என்றே பொருள்படும். இதனை 'ஒப்படைக்கப்பட்டது', 'பதிவு செய்யப்பட்டது' என்று கூறுவதுதான் சிறந்தது.

## தலா:

- ஒவ்வொரு என்ற பொருளில் 'தலா' என்பது வழங்கப்படுகிறது. 'தலை' என்ற சொல் 'தலா' என மாறிற்று. 'தலைக்கு ஒரு ரூபாய் கொடு' என்று சொல்வது முறையானது. 'தலை' என்பது இங்கு ஆளைக் குறிக்கும் சினையாகு பெயர். இது 'தலா' வாக மாறிற்று. 'காங்கிரஸ் கட்சியும் அ.தி.மு.கவும் தலா மூன்று இடங்களைப் பெற்றன' என்றே கூறி வருகிறார்கள். 'காங்கிரஸ் கட்சியும் அ.தி.மு.க. கட்சியும் ஒவ்வொன்றும் மும்மூன்று இடங்களைப் பெற்றது' என்பதுதான் சரியானதாகும்.

## ரத்துசெய்:

- இச்சொல்லு கடுப் பதிலாக 'நீக்கு', 'கைவிடு', 'தள்ளிவிடு', 'விலக்கிக்கொள்', ஆகிய தமிழ்ச் சொற்களில் ஏதாவது உரியவொன்றைப் பயன்படுத்தலாம்.

SHANKAR IAS ACADEMY

**பைசல் செய்யப்பட்டது:**

- இது 'தீர்க்கப் பட்டது', 'தீர்த்துவிடப்பட்டது', 'தீர்மானம் செய்யப்பட்டது', எனத் தமிழிலேயே சொல்வது பொருந்துமே.

**பட்டுவாடா செய்:**

- (உருது) கொடு, வழங்கு, அளி என்பவற்றில் உரிய சொல்லைப் பயன்படுத்துவதுதான் சரியானது.

**சகஜம், சகஜமானது:**

- வழக்கமானது, இயல்பானது – இவற்றில் உரிய சொல்லைப் பயன்படுத்தலே ஏற்றது.

**மாமூல்:**

- பழையநிலை, வழக்கமான(து) – இவற்றுள் உரிய சொல்லைப் பயன்படுத்தலே சிறந்தது.

**வாபஸ்:**

- திரும்பப் பெறுதல் என்று சொல்லலாம்.

**பிரயாணம், பிரயாணி:**

- இவற்றை முறையே பயணம், பயணி என்று எளிமையாகத் தமிழ் முறையில் கூறலாமே.

## தொடர் வகைகள்

**எழுத்துகள் ஒன்றோ பலவோ சேர்ந்து பொருள் தரும்போது சொல்லாகிறது. சொற்கள் பல சேர்ந்து தொடர்கள் உருவாகின்றன. பல சொல் சேர்ந்து வந்தாலும், பொருள் முடிவுபெற்று வந்தால் மட்டுமே அவை தொடர்கள் எனப்படும். தொடருக்கும் (Sentence) சொற்றொடருக்கும் (Phrase) சிறு வேறுபாடு உண்டு. எடுத்துக்காட்டாக, "வட்டமான நிலா" என்பது. ஒரு சொற்றொடர். "நான் வட்டமான நிலாவைக் கண்டேன்" என்பது பொருள் முடிவுபெற்ற தொடர். நம்முடைய பேச்சிலும் எழுத்திலும் இவ்விரண்டுமே பயன்பாட்டில் உள்ளன. தொடர் உருவாவதற்கு எழுவாய், செயப்படுபொருள், பயனிலை தேவை. இவை மூன்றனுள் ஏதேனும் ஒன்று இல்லாமல்கூடத் தொடர் அமையலாம்.**

**தொடர்/வாக்கியம்:**

- சொற்கள் பல தொடர்ந்து வந்து ஒரு கருத்தை உணர்த்தினால் அது தொடர் எனப்படும்.
- ஒரு தொடருக்கு எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் இன்றியமையாதவை. செயப்படுபொருள் இல்லாமலும் தொடர் அமையலாம். ஒரு தொடரில் முதலில் எழுவாயும் இறுதியில் பயனிலையும் வரும். சில தொடரின் இறுதியில் செயப்படுபொருளும் வரும். சில தொடர்களில் வைப்புமுறை மாறியும் வரும்.
- தொடர் அல்லது சொற்றொடர் என்னும் தமிழ்ச்சொல்லுக்கு இணையான வட சொல் வாக்கியம் என்பதாகும். தொடர் என்றாலும் வாக்கியம் என்றாலும் ஒரே பொருளைத்தான் உணர்த்தும்.

ஒரு தொடரில் மூன்று பகுதிகள் இடம்பெறும்.

- அவை 1. எழுவாய் 2. பயனிலை 3. செயப்படுபொருள்

## 1. எழுவாய்

- ஒரு தொடர் உருவாவதற்குக் காரணமாக அமைவது எழுவாய். அல்லது ஒரு தொடரில் யார். எது, எவை, யாவர் எனும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய் ஆகும். எழுவாய் வெளிப்படையாக வருவதும் உண்டு. மறைந்து வருவதும் உண்டு. அப்படி மறைந்து வரும் எழுவாயைத் தோன்றா எழுவாய் என அழைப்பர்.
- எழுவாய் எப்போதும் ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல்லாக மட்டுமே வரும். இஃது உயர்திணையையும் குறிக்கும்; அஃறிணையையும் குறிக்கும்; ஒருமையாகவும், பன்மையாகவும் வரும். செயலைக் குறிக்கும் வினைச்சொல்லாக எழுவாய் வராது.

**(எ.கா.) எட்வர்டு வந்தான்**

- இந்தச் சொற்றொடரில் பெயர்ச்சொல், எட்வர்டு என்பதாகும். இந்தச் சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லையே எழுவாய் என்கிறோம்.
- ஒரு தொடரில் யார்? எது? எவை? என்னும் வினாக்களுக்கு விடையாக அமைவது எழுவாய்.

**(எ.கா.)** **நீலன்** பாடத்தைப் படித்தான்.
**பாரி** யார்?
**புலி** ஒரு விலங்கு.

- இத்தொடர்களில் நீலன், பாரி, புலி ஆகியன எழுவாய்கள்.

**எடுத்துக்காட்டு–1 (வெளிப்படையாக வரும் எழுவாய்)**

1. கவிதா கவிதை எழுதினாள். (யார்)
2. மாணவர்கள் பாடம் படித்தனர் (யாவர்)
3. நாய் வீட்டைக் காக்கும் (எது)
4. பறவைகள் இரை தேடின (எவை)

**எடுத்துக்காட்டு – 2 (மறைந்து வரும் எழுவாய் / தோன்றா எழுவாய்)**

1. பாடம் படி
2. அறம் செய விரும்பு

- "பாடம் படி" இந்தத் தொடரில் செயலைச் செய்வது யார்? என்னும் வினாவை எழுப்பும்போது பாடம் படி என்பதில் நீ என்னும் எழுவாய் மறைந்து வந்துள்ளது. எனவே இங்கு 'நீ' என்பது தோன்றா எழுவாய் ஆகும்.

## 2. பயனிலை

- ஒரு தொடரில் என்ன செயல் நிகழ்கிறது எனக் கேள்வி கேட்கப்படும்போது அதற்கான விடையாக அமைவது பயனிலை. பயனிலை வினைச் சொல்லாக அமையும். பயனிலையை மூவகையாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு.
- ஒரு தொடரை வினை, வினா, பெயர் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடித்து வைப்பது பயனிலை.

SHANKAR IAS ACADEMY


(எ.கா.) கரிகாலன் கல்லணையைக் **கட்டினான்**.

கரிகாலன் **யார்**?

கரிகாலன் ஒரு **மன்னன்**.

**கனகாம்பரம் பூத்தது.**

- இத்தொடர்களில் கட்டினான், யார், மன்னன், பூத்தது ஆகியன பயனிலைகள்.




- **நான் வந்தேன்.**
  - இத்தொடரில் வினைமுற்று பயனிலையாக வந்தது. இது வினைப் பயனிலை எனப்படும்.
- **சொன்னவள் கலா**.
  - இங்கு கலா என்னும் பெயர்ச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது பெயர்ப் பயனிலை எனப்படும்.
- **விளையாடுபவன் யார்?**
  - இங்கு யார் என்னும் வினாச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது வினாப் பயனிலை எனப்படும்.

## 3. செயப்படுபொருள்

- ஒரு தொடரில் எதை, யாரை. எதனை, எவற்றை எனக் கேட்கப்படும் வினாவுக்கு விடையாக வரும் சொல்லே செயப்படுபொருள் ஆகும். செயப்படுபொருள் என்பது எழுவாயினால் செய்யப்படுகின்ற பொருளாகும். இ்து இரண்டாம் வேற்றுமை உருபினை ஏற்று வரும். சில தொடர்களில் செயப்படுபொருள் இல்லாமலும் வரும்.
- யாரை, எதை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வருவது செயப்படுபொருள்.

(எ.கா.) நான் **கவிதையைப்** படித்தேன்.
என் **புத்தகத்தை** எடுத்தது யார்?
**நெல்லிக்கனியைத்** தந்தவர் அதியமான்.
**மீனா கனகாம்பரத்தைச் சூடினாள்.**

- இத்தொடர்களில் கவிதை, புத்தகம், நெல்லிக்கனி, கனகாம்பரம் ஆகியன செயப்படு பொருள்கள்.

**எடுத்துக்காட்டு–1**
**குயவன் பானை வனைந்தான்**

- இத்தொடரில் குயவன் – எழுவாய், பானை – செயப்படுபொருள், வனைந்தான் – பயனிலை எதனைச் செய்தான் என்னும் வினாவிற்குப் பானை என்னும் சொல் விடையாகக் கிடைக்கிறது.
- இவ்வாறு செயப்படுபொருள் பெற்றுவரும் வினைச் சொற்களைச் "செயப்படுபொருள் குன்றா வினை" என அழைப்பர்.

**எடுத்துக்காட்டு – 2**
**பனை விழுந்தது**

- இத்தொடரில் பனை – எழுவாய், விழுந்தது – பயனிலை. செயப்படுபொருள் இல்லை. இவ்வாறு செயப்படுபொருள் இல்லாமலும் ஒருதொடர் வரலாம். இவ்வாறு செயப்படுபொருள் பெறாத வினைச் சொற்களைச் "செயப்படுபொருள் குன்றியவினை" என அழைப்பர்.

# மொழிப்பெயர்ப்பு

## மொழிபெயர்ப்புக் கல்வி

- **"ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா.**
- **'ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவுகொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்; உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்கிறார் மு.கு. ஜகந்நாதர்.**

### மொழிபெயர்ப்பு – தொடக்கம்

- மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் (98) குறிப்பிட்டுள்ளார்.
- 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு, சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது.
- பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையே.

### மொழிபெயர்ப்பு – தேவை

- மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி, தேசிய புத்தக நிறுவனம் (NBT), தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்படுகின்றன.
- உலகப் போரின்போது அமெரிக்கா, "சரண் அடையாவிடில் குண்டு வீசப்படும்" என்ற செய்தியை ஜப்பானுக்கு அனுப்பியதாகவும் அதற்கு ஜப்பான், 'மொகு சாஸ்ட்டு' என்று விடை அனுப்பியதாகவும் கூறுவர். அந்தத் தொடரின் பொருள் தெரியாமையால் அமெரிக்கா, ஹிரோஷிமாவில் குண்டுவீசியது என்று சொல்கிறார்கள்.
- அந்தத் தொடருக்குப் பொருள், 'விடைதர அவகாசம் வேண்டும்' என்பதாம். ஆனால் அதற்கு அமெரிக்கர்கள், 'மறுக்கிறோம்' என்று பொருள் கொண்டதாகவும் கூறுவர்.

SHANKAR IAS ACADEMY

- இது உண்மை எனில், மொழிபெயர்ப்பு சரியாக அமையாததால் காலத்திற்கும் அழிவு தரும் களங்கம் நேர்ந்தது எனலாம்.

**இலக்கிய இறக்குமதி**

- ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகம் ஆன ஷேக்ஸ்பியர், அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்டார்.
- 18ஆம் நூற்றாண்டுவரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன. ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும் ஆங்கிலம் வழியாகப் பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின.
- தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால்தான்.
- மொழிபெயர்ப்பு இல்லாவிடில் சில படைப்பாளிகளும் கூட உருவாகியிருக்க முடியாது; ஷேக்ஸ்பியர் இருந்திருக்க முடியாது: கம்பன் இருந்திருக்க முடியாது.
- இரவீந்திரநாத தாகூர் வங்க மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அவரே மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல்பரிசு கிடைத்தது.
- மகாகவியான பாரதியின் கவிதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் உலகஅளவில் உயரிய விருதுகளும் ஏற்பும் கிடைத்திருக்கும்.
- ஒரு நாடு எவ்வளவு மின்னாற்றலைப் பயன்படுத்துகிறது என்பதைக் கொண்டு அதன் தொழில் வளர்ச்சியை மதிப்பிடுவார்கள்.
- அதுபோல, ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள்.

**பாரதியின் மொழிபெயர்ப்பு**

- Exhibition – காட்சி, பொருட்காட்சி
- East Indian Railways – இருப்புப் பாதை
- Revolution – புரட்சி
- Strike – தொழில் நிறுத்தி இருத்தல், தொழில் நிறுத்தம், வேலை நிறுத்தம்

**மொழிபெயர்ப்பு**

- எங்கோ தொலைதூரத்தில் வாழும் மனிதர்கள் தங்களின் மொழியில் சொன்னவற்றை, எழுதியவற்றை இன்னொரு மொழியில் தமக்குத் தெரிந்த மொழியில் மொழிபெயர்த்து அறிந்து கொள்கிறார்கள். அதுதான் மொழிபெயர்ப்பு.
- ராகுல் சாங்கிருத்யாயன் 1942ஆம் ஆண்டு ஹஜிராபாக் மத்திய சிறையிலிருந்தபோது 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலை இந்தி மொழியில் எழுதினார்.
- 1949ஆம் ஆண்டு இந்நூலை கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.
- இன்றுவரையில் 'வால்காவிலிருந்து கங்கை வரை' ஒவ்வொரு தமிழரும் விரும்பிப் படிக்கும் நூலாக இருக்கிறது. இதுவரையில் பல பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.
- 2016 – டாக்டர் என்.ஸ்ரீதர் மொழி பெயர்ப்பு, 2016 – முத்து மீனாட்சி மொழி பெயர்ப்பு, 2018 – யூமா வாசுகி மொழி பெயர்ப்பு – சா.கந்தசாமி

SHANKAR IAS ACADEMY

# அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்

## அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்

- இப்பகுதி வினாக்கள் தமிழ் எழுத்துக்களின் அகர வரிசை முறையை நினைவுகூறும் வகையில் அமைக்கப்படுகிறது.
- அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல் என்றால்,
  - உயிரெழுத்துக்கள் = 12 முதலிலும்,
  - மெய் எழுத்துக்கள் = 18, உயிர்மெய் எழுத்துகள் = 216 அடுத்தும் என வரிசை படுத்த வேண்டும்

**i) கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் உயிரெழுத்தில் தொடங்கும் சொல் இருப்பின் அதனை முதலில் எழுத வேண்டும். (அ முதல் ஔ வரை)**

(எ.கா.)

**வினா :** அன்பு, இலை, ஆலமரம், ஈசல்

**விடை :** அன்பு, ஆலமரம், இலை, ஈசல்

**ii) கொடுக்கப்பட்டுள்ள சொற்களில், உயிர்மெய் சொற்களை முதல் எழுத்தாக கொண்ட சொற்கள் இருப்பின், அதனை க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ற, ன என்ற உயிர்மெய் எழுத்துக்களின் வரிசைபடி வரிசை படுத்த வேண்டும்.**

(எ.கா.)

**வினா :** கண், தண்ணீர், நகம், சணல்

**விடை :** கண், சணல், தண்ணீர், நகம்

**iii) கொடுக்கப்பட்டுள்ள சொற்களில், ஒரே உயிர்மெய் எழுத்து கொண்ட பல சொற்கள் வந்திருந்தால், அதனை க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ என்ற முறையில் வரிசைப்படுத்த வேண்டும்.**

**வினா :** தவளை, தேர், திண்மை, தென்னை,தாய்

**விடை :** தவளை, தாய், தாய், திண்மை, தென்னை, தேர்

- நன்கு தமிழ் கற்றோருக்குக் கூட மெய்யெழுத்துகளை சற்று வேகத்துடன் அகர வரிசைப்படுத்துதல் சற்று சிரமமான ஒன்று தான். எனவே நாம் முன்னோர் கற்ற தமிழ் எழுத்துக்களின் வரிசை முறையைப் பின்வரும் அட்டவணை மூலம் மீண்டும் நினைவுறுத்திக் கொள்ளுதல் மிகவும் நன்று.

(எ.கா.)

1. பாரதி, பாரம், பா, பாலை, பானை, பாறை

**விடை :** பா, பாரதி, பாரம், பாலை, பாறை, பானை

2. பசு, பகடு, நெய், நேர்மை, நொச்சி, நோய், பகடு, பசு

**விடை :** நெய், நேர்மை, நொச்சி, நோய், பகடு, பசு

3. நாகம், நிச்சயம், நறுமணம், நுரை, நூல், நீக்கம்

**விடை :** நறுமணம், நாகம், நிச்சயம், நீக்கல், நுரை, நூல்

4. தருப்பை, தந்தை, தமிழ், தகழ், தந்தை, தமிழ், தடாகம்

**விடை :** தகடு, தகழி, தாடகம், தந்தை, தமிழ், கருப்பை

5. சூரியன், சினேகம், சீதை, காட்சி, சந்திரன், சுமை

SHANKAR IAS ACADEMY

**விடை :** சந்திரன், சாட்சி, சினேகம், சீதை, சுமை, சூரியன்

6. ஏகலைவர், ஐந்து, ஒருமை, ஏகாதசி, ஐக்கியம்

**விடை :** ஏகலைவர், ஏகாதசி, ஐக்கியம், ஐந்து, ஒருமை

7. அந்தணர், ஆக்கம், உணவு, ஆடவர், இசை, இலக்குமி, உணவு

**விடை :** அந்தணர், ஆக்கம், ஆடவர், இசை, இலக்குமி, உணவு

8. உயிர், உபாயம், உதயம், உடுக்கை, உண்மை, உபகாரம்

**விடை :** உடுக்கை, உண்மை, உதயம், உபகாரம், உபாயம், உயிர்

9. குலம், கூகை, காந்தம், கேடகம், கோழி,

**விடை :** குலம், கூகை, காந்தம், கேடகம், கோழி

10. கணிதம், கூம்பு, கட்டழகு, கரடி, கலவை, காடு

**விடை :** கட்டழகு, கணிதம், கம்பு, கரடி, கலவை, காடு

## தமிழில் அகர வரிசை

**உயிர் எழுத்துக்கள்: 12**

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

**மெய்யெழுத்துக்கள்: 18**

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| க் | ங் | ய் |
| ச் | ஞ் | ர் |
| ட் | ண் | ல் |
| த் | ந் | வ் |
| ப் | ம் | ழ் |
| ற் | ன் | ள் |

- பதினெட்டு மெய்யெழுத்துகளும் அகரமுதலி வரிசையில் இவ்வாறு வந்துள்ளன.
- வல்லெழுத்தைத் தொடர்ந்து அதன் இனமான மெல்லெழுத்து வருவது நோக்கத்தக்கது. அடுத்து, இடையின எழுத்துகள் வருகின்றன.
- ற், ன் மட்டும் இறுதியில் வருகின்றன.
- அப்படியானால், அகரமுதலியில் அக்காள் என்னும் சொல் முதலில் வருமா? அண்ணன் என்னும் சொல் முதலில் வருமா? மெய்யெழுத்து வரிசையைப் பாருங்கள். அக்காள் என்னும் சொல்தான் முதலில் வரும்.
- அம்மா, அப்பா, அண்ணி, அங்காடி, அன்னம் என்னும் சொற்களை அகரமுதலி வரிசையில் எழுதுவதானால் அங்காடி, அண்ணி, அப்பா, அம்மா, அன்னம் என்றுதான் எழுதுதல் வேண்டும்.

SHANKAR IAS ACADEMY

## உயிர்மெய் எழுத்துக்கள்: 216

- உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் இணைவதால் உண்டாகும் எழுத்து உயிர்மெய் எழுத்து எனப்படும்.

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

# ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக

### ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக

- நாம் எல்லாச் சொற்களையும் எல்லா இடங்களிலும் முழுமையான வடிவத்தில் பயன்படுத்துவது இல்லை.
- தஞ்சாவூர் என்னும் பெயரைத் தஞ்சை என்றும், திருநெல்வேலி என்னும் பெயரை நெல்லை எனவும் வழங்குகிறோம்.
- இவ்வாறு இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும்.
- (எ.கா.) கோவை, குடந்தை, எந்தை, போது, சோணாடு

### மற்ற உதாரணங்கள்:

| | |
|---|---|
| 1. ஆற்றூர் – ஆத்தூர் | 16. சோழிங்கநல்லூர் – சோளிங்கர் |
| 2. சேலையூர் – சேலம் | 17. திருவண்ணாமலை –அருணை |
| 3. கருவூர்–கரூர் | 18. கருந்தட்டைக்குடி – கரந்தை |
| 4. கொடைக்கானல் – கோடை | 19. கரிவலம் வந்தநல்லூர் – கருவை |
| 5. மணப்பாறை – மணவை | 20. இராமநாதபுரம் – முகவை |
| 6. விருதுநகர் – விருதை | 21. நாகர்கோவில் – நாஞ்சி |

| | |
|---|---|
| 7. பரமக்குடி – பரம்பை | 22. திருத்தணி – தணிகை |
| 8. சங்கரன்கோவில் – சங்கை | 23. வேதாரண்யம் – வேதை |
| 9. அம்பாசமுத்திரம் – அம்பை | 24. திருச்செந்தூர் செந்தூர்/திருச்சீரலைவாய்/அலைவாய் |
| 10. அறந்தாங்கி – அறந்தை | 25. தர்மபுரி–தகடூர் |
| 11. அலங்காநல்லூர் – அலங்கை | 26. உசிலம்பட்டி – உசிலை |
| 12. சிங்களாந்தபுரம் – சிங்கை | 27. காஞ்சிபுரம் – காஞ்சி |
| 13. சிங்காநல்லூர் – சிங்கை | 28. பாளையங்கோட்டை – பாளை |
| 14. மயிலாடுதுறை – மயூரம்/மாயூரம் | 29. ஸ்ரீவைகுண்டம் – ஸ்ரீவை |
| 15. சேந்தமங்கலம் – சேந்தை | |

## ஓரெழுத்து ஒரு மொழி

**ஒரெழுத்து ஒரு மொழி, உரிய பொருளைக் கண்டறிதல்,பொருள் தரும் ஓர் எழுத்து, பல பொருள் தரும் ஒரு சொல்லைக் கூறுக, ஒருபொருள் தரும் பல சொற்கள், இருபொருள் குறிக்கும் சொற்கள், ஒரு சொல்லிற்கு இணையான வேறு சொல் அறிதல், ஒருபொருள் பன்மொழி**

- தமிழில் சொல் என்பதற்கு **நெல்** என்பது ஒரு பொருள். **சொன்றி**, **சோறு** என்பவை அவ்வழியில் வந்தவை. நெல்லில் பதர் உண்டு.
- ஆனால் சொல்லில் பதர் இருத்தலாகாது. **எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே** என்பது **தொல்காப்பியர்** கூற்று.
- மொழி என்பதற்குச் **சொல்** என்பதும் ஒரு பொருள். மொழியை (சொல்லை) ஓரெழுத்து மொழி, ஈரெழுத்து மொழி, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாக்குவர்.
- ஓர் எழுத்து மொழி எவை எனின், **நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி** என்பார் தொல்காப்பியர்.
- குற்றெழுத்து ஒன்று தனித்து நின்று சொல் ஆவது இல்லை என்பதைக் **குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே** என்பார்.

### ஓரெழுத்து ஒருமொழிகள்

- உயிர் எழுத்து – ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ
- மகர வரிசை – மா, மீ, மூ, மே, மை, மோ
- ககர வரிசை – கா, கூ, கை, கோ
- சகர வரிசை – சா, சீ, சே, சோ
- தகர வரிசை – தா தீ, தூ, தே, தை
- வகர வரிசை – வா, வீ, வை, வௌ
- பகர வரிசை – பா, பூ, பே, பை, போ
- யகர வரிசை – யா
- நகர வரிசை – நா, நீ, நே, நை, நோ
- குறில் எழுத்து – நொ, து

SHANKAR IAS ACADEMY

- **ஆ, மா, நீ, மீ, பீ, ஊ, சே, தே** இவ்வாறான ஓரெழுத்து ஒரு மொழிகளும்உள்ளன.
- பூங்கா இணைந்தது போல ஆ, மா என்பவை இணைந்து **ஆமா** என்னும் கலைச்சொல் வடிவம் கொண்டமை பண்டைக் காலத்திலேயே உண்டு. காட்டுப் பசுவுக்கு 'ஆமா' என்று பெயர்.
- **மா** என்பதும் ஓரெழுத்து ஒரு மொழிகளுள் ஒன்று. நாட்டிலுள்ள பெருமக்கள் பெரிதும் கூடும் அவையை மாநாடு என்கிறோம்.
- பல குறு நிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை மாநிலம் என்கிறோம். உலகப் பெரும் பரப்பையும் இயக்கத்தையும் சுட்ட மாஞாலம் என்கிறோம்.
- இவ்வாறெல்லாம் இயல்பாக மா என்னும் ஓரெழுத்து ஒருமொழி மக்கள் வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் திகழ்கின்றது.
- மாநிறம் என மாந்தளிர் நிறத்தை ஒப்புமை காட்டி உரைப்பது பெருவழக்கு. மா என்பது விலங்கையும் குறிக்கும்.
- அரிமா, பரிமா, நரிமா, வரிமா, கரிமா என்றெல்லாம் வந்து விலங்கினப் பெயராகி நிற்கின்றது.
- **ஈ, பூ, கை** ஆகிய எழுத்துகளைக் கவனியுங்கள்.
- இவை ஒவ்வொன்றிற்கும் பொருள் உண்டு. இவ்வாறு ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.
- **நன்னூல்** என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் நாற்பத்திரண்டு ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.
- இவற்றில் **நொ, து** ஆகிய இரண்டு சொற்களைத்தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்தவை ஆகும்.

**ஓரெழுத்து ஒரு மொழிகளும் அவற்றின் பொருளும்**

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | பசு | | நே | அன்பு |
| ஈ | கொடு | | நை | இழிவு |
| ஊ | இறைச்சி | | நோ | வறுமை |
| ஏ | அம்பு | | பா | பாடல் |
| ஐ | தலைவன் | | பூ | மலர் |
| ஓ | மதகுநீர் தாங்கும் பலகை | | பே | மேகம் |
| கா | சோலை | | பை | இளமை |
| கூ | பூமி | | போ | செல் |
| கை | ஒழுக்கம் | | மா | மாமரம் |
| கோ | அரசன் | | மீ | வான் |
| சா | இறந்துபோ | | மூ | மூப்பு |
| சீ | இகழ்ச்சி | | மே | அன்பு |
| சே | உயர்வு | | மை | அஞ்சனம் |
| சோ | மதில் | | மோ | முகத்தல் |

SHANKAR IAS ACADEMY

| | | | | |
|---|---|---|---|---|
| தா | கொடு | | யா | அகலம் |
| தீ | நெருப்பு | | வா | அழைத்தல் |
| தூ | தூய்மை | | வீ | மலர் |
| தே | கடவுள் | | வை | புல் |
| தை | தைத்தல | | வௌ | கவர் |
| நா | நாவு | | நொ | நோய் |
| நீ | முன்னிலை ஒருமை | | து | உண் |

| எழுத்து | பொருள் |
|---|---|
| அ | எட்டு, அழகு, சிவன், திருமால், நான்முகன், சுட்டு, அசை, திப்பிலி, 8 என்ற எண் வடிவம், சேய்மை |
| ஆ | ஆச்சாமரம், வியப்பு, பசு, வினா, விடை, சொல், ஒர் இனம், ஆன்மா, வரை, நினைவு, உடன்பாடு, இரக்கம், வியப்பு, துன்பம், மறுப்பு, உருக்கம், இணைப்பு, இச்சை |
| இ | அண்மைச்சுட்டு, இங்கே, இவன், அன்பு, விகுதி, இகழ்ச்சி |
| ஈ | அம்பு, அழிவு, இந்திரவில், சிறுபறவை, குகை, தாமரை, இதழ், திருமகள், நாமகள், வண்டு, தேன், தேனீ, நரி, பாம்பு, பார்வதி, கொடு, கொக்கு, பூச்சி |
| உ | சிவபிரான், நான்முகன், உமையவள், ஒர் இடைச்சொல், சுட்டெழுத்து, ஆச்சரியம், உருக்கம் |
| ஊ | உணவு, இறைச்சி, திங்கள், சிவன், ஊன், தசை, உண்ணல், சந்திரன் |
| எ | குறி, வினாஎழுத்து |
| ஏ | இடைச்சொல், சிவன், திருமால், இறுமாப்பு, விளிக்குறிப்பு, செலுத்துதல், மேல்நோக்குதல், வினா |
| ஐ | தலைவன், அசைநிலை, அரசன், அழகு, இருமல், கடவுள், கடுகு, குரு, கோழை, சர்க்கரை, கன்னி, சிவன், கிழங்கு, தும்பை, துர்க்கை, பருந்து, தந்தை, பெருநோய், ஆசை, வியப்பு, ஐந்து, ஐயம், கணவன், பாஷனம், மென்மை, மேன்மை, மருந்து |
| ஓ | ஒழிவு, மதகு, உயர்வு, இழிவு, கழிவு, இரக்கம், மகிழ்ச்சி, வியப்பு, நினைவு, அழைத்தல், ஐயம், நான்முகம், வினா பரிநிலை, நான்முகன், கொன்றை, ஆபத்து |
| ஔ | பாம்பு, நிலம், விழித்தல், அழைத்தல், வியப்பு, தடை, கடிதல், பூமி, ஆனந்தம் |
| க | அரசன், நான்முகன், தீ, ஆன்மா, உடல், காற்று, கதிரவன், செல்வன், திருமால், தொனி, நமன், மயில், மனம், மணி, இமயம், திங்கள், உடல், நலம், தலை, திரவியம், நீர், பறவை, ஒளி, முகில், வில்லவன், பொருத்து, வியங்குகோள் விகுதி, பறவை |
| கா | அசைச்சொல், காத்தல், காவடி, சோலை, தோட்சுமை, பூந்தோட்டம், பூங்காவனம், காவடித்தண்டு, பூ, கலைமகள், நிறை, காவல், செய், வருத்தம், பாதுகாப்பு, வலி, துலாக்கோல் |
| கீ | கிளிக்குரல், தடை, தொனி, நிந்தை, பாவபூமி |

| | |
|---|---|
| கு | குற்றம், சிறுமை, இகழ்ச்சி, நீக்குதல், நிறம், இன்மை, பூமி, உருபு, சாரியை |
| கூ | பூமி, பிசாசு, அழுக்கு, கூகை, கூக்குரல், கூவுதல், ஓசைக்குறிப்பு |
| கை | இடம், ஒப்பனை, ஒழுக்கம், காம்பு, கிரணம், செங்கல், கட்சி, கைம்மரம், விசிறிக்காம்பு, படையுறுப்பு, ஆற்றல், ஆள், உலகு, உடன், திங்கள், செய்கை, பகுதி, பிடிப்பு, மரவட்டை, முறை, வரிசை, கரம், சயம், வழக்கம், தங்கை, ஊட்டு, வன்மை, சதுரம், சங்கு, வண்டு, கைத்தலம், அஞ்சலி, கைத்தொழில், கைப்பிடி, அஞ்சலி, விறகு |
| கோ | அரசன், அம்பு, வானம், ஆண்மகன், இடியேறு, இலந்தை, ரோமம், கண், எழுது, சந்திரன், கிரணம், சூரியன், திசை, நீர், தேவலோகம், பசு, பூமி, பெரியமலை, தாய், வாணி, மேன்மை, வெளிச்சம், தகப்பன், தலைமை, குயவன், சொல், சாறு, அரசியல், இரங்கல், தொடு, சொர்க்கம், சொல் |
| கெள | கிருத்தியம், கொல்லு, தீங்கு, வாயால் பற்றுதல் |
| சா | பேய், இறப்பு, சோர்தல், சாதல், 6 என்ற எண், கழிதல், பேய் |
| சீ | அடக்கம், இகழ்ச்சி, அலட்சியம், காந்தி, சம்பத்து, கலைமகள், உறக்கம், பார்வதி, பெண், ஒளி, விந்து, கீழ், சளி, சீதேவி, செல்வம், வெறுப்பு |
| சு | அதட்டு, ஓசை, நன்மை, சுகம், விரட்டுதல் |
| சூ | வானவகை |
| சை | கைப்பொருள், செல்வம் |
| சே | எருது, அழிஞ்சில் மரம், உயர்வு, எதிர்மறை, ஒலிக்குறிப்பு, சிவப்பு, காளை, செங்கோட்டை, சேரான், இடபம் |

## கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல்

1. திருக்குறள் கருத்தின் அடிப்படையில் அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (உலகு)

   A) கடலின்றி அமையாது ____________
   B) பகை இன்றி அமையாது ____________
   C) மலையின்றி அமையாது ____________
   D) நீரின்றி அமையாது ____________
   E) விடை தெரியவில்லை

2. சரியான சொல் எது?
   வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்கள் ____________ நின்றனர்.

   A) எழுதுகோல்
   B) சீருடையுடன்
   C) புத்தகம்
   D) உயர்நிலை
   E) விடை தெரியவில்லை

SHANKAR IAS

3. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (பெண்ணும்)

A) ஆணும் ___________ சமம்.

B) சேவலும் ___________ பறவைகள்

C) ___________ ஆய்ச்சியும் முல்லை நில மக்கள்.

D) தந்தை தாயை ___________ ஐயை என்பர்.

E) விடை தெரியவில்லை

4. அடைப்புக்குள் உள்ள சொல்லை தகுந்த இடத்தில் சேர்க்க (அழகாக)

A) ஊர்தி ___________ சென்றது.

B) காலம் ___________ ஓடுகிறது.

C) சங்க இலக்கியம் வாழ்க்கையை ___________ காட்டுகிறது.

D) இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் ___________ காட்டு.

E) விடை தெரியவில்லை

5. தகுந்த சொல்லைத் தேர்ந்தெடு.

ஆராயும் அறிவு உடையவர்கள் ___________ சொற்களைப் பேசமாட்டார்.

A) உயர்வான

B) விலையற்ற

C) பயன்தராத

D) பயன் உடைய

E) விடை தெரியவில்லை

6. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (உணவு)

A) உறவுக்கு ___________ கொடு

B) பசித்தவனுக்கு ___________ கொடு

C) உழைப்புக்கு ___________ கொடு

D) உரிமைக்கு ___________ கொடு

E) விடை தெரியவில்லை

7. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (வேற்றுமை)

A) ___________ இறக்கமும் மலைக்கு அழகு

B) அழுகையும் ___________ வாழ்வில் இயல்பு

C) ___________ முதுமையும் யாவர்க்கும் உண்டு

D) ஒற்றுமை கண்டால் ___________ நீங்கும்

E) விடை தெரியவில்லை

8. அடைப்புக்குறிக்குள் உள்ள சொல்லை பொருத்தமான இடத்தில் எழுது (அவர்)

A) என் வீடு ___________ உள்ளது.

B) தம்பி ___________ வா.

C) நீர் ___________ தேங்கி இருக்கிறது.

D) யார் ___________ தெரியுமா?

E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

9. அடைப்புக்குள் உள்ள சொல்லை தகுந்த இடத்தில் சேர்க்க (தனது)
A) தலைவர் ____________ கையால் பரிசு வழங்கினார்.
B) மாணவன் ____________ கையால் பெற்றுக்கொண்டான்.
C) மாடுகள் ____________ தலையை ஆட்டின.
D) தலைவர் ____________ வீட்டை வழங்கினார்.
E) விடை தெரியவில்லை

10. அடைப்புக்குள் உள்ள சொல்லை தகுந்த இடத்தில் சேர்க்க (மதலை)
A) ஏணி சாத்திய ____________
B) வானம் ஊன்றிய ____________
C) இரவில் மாட்டிய ____________
D) கானம் பாடிய ____________
E) விடை தெரியவில்லை

11. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க : (மணிமேகலை)
A) எட்டுத்தொகை நூல்களில் ஒன்று ____________
B) பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று ____________
C) ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று ____________
D) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று ____________
E) விடை தெரியவில்லை

12. அடைப்புக்குள் உள்ள ஒலி மரபுச் சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க : (பேசும்)
A) குயில் ____________
B) மயில் ____________
C) கிளி ____________
D) கூகை ____________
E) விடை தெரியவில்லை

13. அடைப்புக்குள் உள்ள எழுத்தைத் தகுந்த இடத்தில் சேர்க்க (ஐ)
A) ஆடை ____________ அணிந்தேன்
B) தோசை ____________ மாவு
C) பள்ளி ____________ சென்றேன்
D) கண்ணன் ____________ சட்டை
E) விடை தெரியவில்லை

14. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க (இயற்கை)
A) நாம் ____________ உரங்கள் தயாரித்து உழவர்களுக்கு வழங்க வேண்டும்
B) நாம் ____________ உரங்கள் தவிர்த்து நில வளம் காப்போம்
C) நாம் உரங்கள் ____________ தயாரித்து உழவர்களுக்கு வழங்க வேண்டும்
D) ____________ உரங்கள் உழவர்களுக்குத் தயாரித்து நாம் வழங்க வேண்டும்
E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

15. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (முழை)

A) சிங்கம் ____________ யில் வாழும்

B) பறவை ____________யில் வாழும்

C) யானை ____________ யில் வாழும்

D) எலி ____________ யில் வாழும்

E) விடை தெரியவில்லை

## சொல்லும் பொருளும்

| சொல் | பொருள் | சொல் | பொருள் |
|---|---|---|---|
| நிருமித்த | உருவாக்கிய | நல்கும் | தரும் |
| விளைவு | வளர்ச்சி | கலம் | கப்பல் |
| சமூகம் | மக்கள் குழு | கழனி | வயல் |
| அசதி | சோர்வு | ஆழி | கடல் |
| ஆழிப் பெருக்கு | கடல் கோள் | கதிர்ச்சுடர் | கதிரவனின் ஒளி |
| ஊழி | நீண்டதொருகாலப்பகுதி | மின்னல்வரி | மின்னல் கோடு |
| மேதினி | உலகம் | அரிச்சுவடி | அகரவரிசை எழுத்துக |
| உள்ளப்பூட்டு | உள்ளத்தின் அறியாமை | மெய் | உண்மை |
| திங்கள் | நிலவு | தேசம் | நாடு |
| கொங்கு | மகரந்தம் | தண்டருள் | குளிர்ந்த கருணை |
| அலர் | மலர்தல் | கூர் | மிகுதி |
| பொற்கோட்டு | பொன்மயமான சிகரத்தில் | பணி | தொண்டு |
| மேரு | இமயமலை | எய்தும் | கிடைக்கும் |
| நாமநீர் | அச்சம் தரும் கடல் | செம்மையருக்கு | சான்றோருக்கு |
| திகிரி | ஆணைச்சக்கரம் | எல்லாரும் | எல்லா மக்களும் |
| அளி | கருணை | ஏவல் | தொண்டு |
| காணி | நில அளவைக் குறிக்கும் சொல் | அல்லாமல் | அதைத்தவிர |
| மாடங்கள் | மாளிகையின் அடுக்குகள் | பராபரமே | மேலான பொருளே |
| சித்தம் | உள்ளம் | சுயம் | தனித்தன்மை |
| இயன்றவரை | முடிந்தவரை | உள்ளீடுகள் | உள்ளே இருப்பவை |
| ஒருமித்து | ஒன்றுபட்டு | அஞ்சினர் | பயந்தனர் |
| ஔடதம் | மருந்து | முற்றும் | முழுவதும் |
| மாசற | குற்றம் இல்லாமல் | கருணை | இரக்கம் |
| சீர்தூக்கின் | ஒப்பிட்டு ஆராய்ந்தால் | வீழும் | விழும் |
| தேசம் | நாடு | மாரி | மழை |
| தூற்றும்படி | இகழும்படி | கும்பி | வயிறு |
| மூத்தோர் | பெரியோர் | ஆகாது | முடியாது |
| மாற்றார் | மற்றவர் | பூதலம் | பூமி |

SHANKAR IAS ACADEMY

| | | | |
|---|---|---|---|
| நெறி | வழி | நீள்நிலம் | பரந்த உலகம் |
| மேதைகள் | அறிஞர்கள் | பார் | உலகம் |
| வற்றாமல் | குறையாமல் | ஆர்வலர் | அன்புடையவர் |
| பூஞ்சினை | பூக்களை உடைய கிளை | சாந்தம் | சந்தனம் |
| சிறை | இறகு | பூசல் தரும் | வெளிப்பட்டு நிற்கும் |
| நட்டல் | நட்புக் கொள்ளுதல் | முருகியம் | குறிஞ்சிப்பறை |
| நந்தவனம் | பூஞ்சோலை | வழக்கு | வாழ்க்கைநெறி |
| பண் | இசை | ஆருயிர் | அருமையான உயிர் |
| பார் | உலகம் | என்பு | எலும்பு |
| இழைத்து | பதித்து | ஈனும் | தரும் |
| முக்கனி | மா, பலா, வாழை | நண்பு | நட்பு |
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் | வையகம் | உலகம் |
| மல்லெடுத்த | வலிமைபெற்ற | என்ப | என்பார்கள் |
| மறம் | வீரம் | மைவனம் | மலைநெல் |
| சமர் | போர் | என்பிலது | எலும்பு இல்லாதது (புழு) |
| எக்களிப்பு | பெருமகிழ்ச்சி | அன்பிலது | அன்பில்லாத உயிர்கள் |
| நாய்க்கால் | நாயின் கால் | வற்றல்மரம் | வாடிய மரம் |
| ஈக்கால் | ஈயின் கால் | புறத்துறுப்பு | உடல் உறுப்புகள் |
| அணியர் | நெருங்கி இருப்பவர் | எவன் செய்யும் | என்ன பயன்? |
| என்னாம் | என்ன பயன்? | அகத்துறுப்பு | மனத்தின் உறுப்பு |
| சேய்(மை) | தொலைவு | ஒன்றோ | தொடரும் சொல் |
| செய் | வயல் | பூவை | நாகணவாய்ப் பறவை |
| அனையார் | போன்றோர் | அவல் | பள்ளம் |
| கொடை | உழுபடை | மிசை | மேடு |
| தலை சாயுதல் | ஓய்ந்து படுத்தல் | ஆடவர் | ஆண்கள் |
| கோணி | சாக்கு | நல்லை | நல்லதாக இருக்கிறாய் |
| பறப்பு | பறக்கும் வானூர்தி முதலியன | ஈரம் | அன்பு |
| ஞாலம் | உலகம் | அளைஇ | கலந்து |
| தமிழ்மகள் | ஔவையார் | படிறு | வஞ்சம் |
| மேலவர் | மேலோர் | செம்பொருள் | மெய்ப்பொருள் |
| கீழவர் | கீழோர் | அகன் | அகம், உள்ளம் |
| மற்றோர் | பிறர்க்கு உதவும் நேர்மை அற்றோர் | அமர் | விருப்பம் |
| நெறியினின்று | அறநெறியில் நின்று | அமர்ந்து | விரும்பி |
| மடவார் | பெண்கள் | முகன் | முகம் |
| தகைசால் | பண்பில் சிறந்த | இன்சொல் | இனியசொல் |
| மனக்கினிய | மனத்துக்கு இனி | இன்சொலன் | இனிய சொற்களைப்பேசுபவன் |
| காதல் புதல்வர் | அன்பு மக்கள் | அமர்ந்து | விரும்பி |

SHANKAR IAS ACADEMY

| | | | |
|---|---|---|---|
| ஓதின் | எதுவென்று சொல்லும்போது | அகத்தான் ஆம் | உள்ளம் கலந்து |
| புகழ்சால் | புகழைத் தரும் | இன்சொலினிதே | இனிய சொற்களைப் பேசுதலே |
| உணர்வு | நல்லெண்ணம் | துன்புறூஉம் | துன்பம் தரும் |
| வானப்புனல் | மழைநீர் | துவ்வாமை | வறுமை |
| வையத்து அமுது | உலகின் அமுதம் | யார் மாட்டும் | எல்லாரிடமும் |
| வையம் | உலகம் | இன்புறூஉம் | இன்பம் தரும் |
| தகரப்பந்தல் | தகரத்தால் அமைக்கப்பட்ட பந்தல் | ஒருவற்கு | ஒருவனுக்கு |
| பொடி | மகரந்தப் பொடி | அணி | அழகுக்காக அணியும் நகைகள் |
| தழை | செடி | அல்லவை | பாவம் |
| தழையா வெப்பம் | பெருகும் வெப்பம் | நாடி | விரும்பி |
| தழைக்கவும் | குறையவும் | நயன்ஈன்று | நல்ல பயன்களைத் தந்து |
| ஆற்றவும் | நிறைவாக | நன்றி | நன்மை |
| தமவேயாம் | தம்முடைய நாடுகளே | பயக்கும் | கொடுக்கும் |
| ஆறு | வழி | தலைப்பிரியாச் சொல் | நீங்காத சொற்கள் |
| உணா | உணவு | சிறுமை | துன்பம் |
| வெய்யவினை | துன்பம் தரும் செயல் | மறுமை | மறுபிறவி |
| வேம்பு | கசப்பான சொற்கள் | இம்மை | இப்பிறவி |
| வீறாப்பு | இறுமாப்பு | இனிதீன்றல் | இனிது + ஈன்றல் |
| பலரில் | பலருடைய வீடுகள் | ஈன்றல் | தருதல், உண்டாக்குதல் |
| புகலல் ஒண்ணாதே | செல்லாதே | வன்சொல் | கடுஞ்சொல் |
| சாற்றும் | புகழ்ச்சியாகப் பேசுவது | எவன்கொலோ | ஏனோ? |
| கடம் | உடம்பு | கவர்தல் | நுகர்தல் |
| இரட்சித்தானா ? | காப்பாற்றினானா? | அற்று | அதுபோன்றது |
| அல்லைத்தான் | அதுவும் அல்லாமல் | பரி | குதிரை |
| ஆரைத்தான் | யாரைத்தான் | சாஸ்தி | மிகுதி |
| பதுமத்தான் | தாமரையில் உள்ள பிரமன் | சிங்காரம் | அழகு |
| புவி | உலகம் | விஸ்தாரம் | பெரும்பரப்பு |
| குமரகண்ட வலிப்பு | ஒருவகை வலிப்புநோய் | கமுகு | பாக்கு |
| இணக்கவரும்படி | அவர்கள் மனம் கனியும்படி | மதலை | தூண் |
| மந்தி | பெண் குரங்கு | கரையும் | அழைக்கும் |
| வான்கவிகள் | தேவர்கள் | வங்கம் | கப்பல் |
| தாவா | கெடாதிருத்தல் | எல் | பகல் |
| வாகு | சரியாக | உரு | அழகு |
| பரிக்கால் | குதிரைக்கால் | போழ | பிளக்க |

SHANKAR IAS ACADEMY

| | | | |
|---|---|---|---|
| கூனல் | வளைந்த | வங்கூழ் | காற்று |
| வேணி | சடை | கோடு உயர் | கரை உயர்ந்த |
| மின்னார் | பெண்கள் | நீகான் | நாவாய் ஓட்டுபவன் |
| மருங்கு | இடை | மாட ஒள்ளெரி | கலங்கரை விளக்கம் |
| சூல்உளை | கருவைத்தாங்கும் துன்பம் | பரிதி | கதிரவன் |
| கோட்டு மரம் | கிளைகளை உடைய மரம் | அன்னதோர் | அப்படிஒரு |
| பீற்றல் குடை | பிய்ந்த குடை | கார்முகில் | மழைமேகம் |
| ஊக்கிவிடும் | ஊக்கப்படுத்தும் | துயின்றிருந்தார் | உறங்கியிருந்தார் |
| விரதம் | நோன்பு | எத்தனிக்கும் | முயலும் |
| குறி | குறிக்கோள் | வெற்பு | மலை |
| பொழிகிற | தருகின்ற | கழனி | வயல் |
| ஒப்புமை | இணை | நிகர் | சமம் |
| அற்புதம் | வியப்பு | வைப்புழி | பொருள் சேமித்து வைக்கும் இடம் |
| பரவசம் | மகிழ்ச்சிப் பெருக்கு | கோட்படா | ஒருவரால் கொள்ளப்படாது |
| முகில் | மேகம் | வாய்த்து ஈயில் | வாய்க்கும்படி கொடுத்தலும் |
| உபகாரி | வள்ளல் | விச்சை | கல்வி |
| துஷ்டி கேட்டல் | துக்கம் விசாரித்தல் | பிரும்மாக்கள் | படைப்பாளர்கள் |
| சிற்றில் | சிறு வீடு | நெடி | நாற்றம் |
| யாண்டு | எங்கே | மழலை | குழந்தை |
| கல் அளை | கற்குகை | வனப்பு | அழகு |
| ஈன்ற வயிறு | பெற்றெடுத்த வயிறு | பூரிப்பு | மகிழ்ச்சி |
| சூரன் | வீரன் | மேனி | உடல் |
| வாரணம் | யானை | வண்கீரை | வளமான கீரை |
| பொக்கிஷம் | செல்வம் | பரி | குதிரை |
| மாரி | மழை | முட்டப்போய் | முழுதாகச் சென்று |
| மடமகள் | இளமகள் | பொலம் | அழகு |
| வறந்திருந்த | வறண்டிருந்த | வண்மை | கொடைத்தன்மை |
| நல்கினாள் | கொடுத்தாள் | போற்றி | வாழ்த்துகிறேன் |
| புகாவாக | உணவாக | சுடும் | வருத்தும் |
| குழி | நில அளவைப்பெயர் | புரை | குற்றம் |
| சாண் | நீட்டல் அளவைப்பெயர் | பயக்கும் | தரும் |
| மணி | முற்றிய நெல் | அன்ன | அவை போல்வன |
| சீலை | புடவை | எய்யாமை | வருந்தாமை |
| மடை | வயலுக்கு நீர் வரும் வழி | அகம் | உள்ளம் |
| கழலுதல் | உதிர்தல் | அமையும் | உண்டாகும் |
| தகளி | அகல்விளக்கு | அறிகை | அறிதல்வேண்டும் |
| ஞானம் | அறிவு | தானை | படை |
| நாரணன் | திருமால் | கடனே | கடமை |

SHANKAR IAS ACADEMY

| | | | |
|---|---|---|---|
| வித்து | விதை | ஆர்கலி | நிறைந்த ஓசையுடைய கடல் |
| ஈன | பெற | காதல் | அன்பு, விருப்பம் |
| களை | வேண்டாத செடி | மேதை | அறிவு நுட்பம் |
| பைங்கூழ் | பசுமையான பயிர் | வண்மை | ஈகை, கொடை |
| நிலன் | நிலம் | பிணி | நோய் |
| வன்சொல் | கடுஞ்சொல் | மெய் | உடம்பு |
| சாந்தம் | அமைதி | ஆடுபரி | ஆடுகின்ற குதிரை |
| தாரணி | உலகம் | சிறந்தன்று | சிறந்தது |
| மகத்துவம் | சிறப்பு | வழிபடுதல் | போற்றி வணங்குதல் |
| பேதங்கள் | வேறுபாடுகள் | சம்பிரமுடன் | முறையாக |
| தத்துவம் | உண்மை | துன்னலர் | பகைவர், அழகிய மலர் |
| இரக்கம் | கருணை | பரிவாய் | அன்பாய் |
| பண் | இசை | சாடும் | தாக்கும், இழுக்கும் |
| மெத்த | மிகுதியாக | கடுகி | விரைந்து |
| பந்தயம் | போட்டி | மேழி | கலப்பை, ஏர் |
| புலவீர் | புலவர்களே | வேந்தர் | மன்னர் |
| கலைமடந்தை | கலைமகள் | ஆழி | மோதிரம் |
| உண்பொழுது | உண்ணும்பொழுது | சூழ்வினை | உண்டாகும் வறுமைத் துன்பம் |
| பெறினும் | பெற்றாலும் | பொலி | தானியக்குவியல் |
| கடறு | காடு | கசடு | குற்றம் |
| தோல்வற்றி | தோல்சுருங்கி | நிற்க | கற்றவாறு நடக்க |
| சாயினும் | அழியினும் | எண் | எண்கள், கணக்கு |
| சான்றாண்மை | அறிவு ஒழுக்கங்களில் நிலைத்து நிற்றல் | எழுத்து | இலக்கண இலக்கியங்கள் (வரிவடிவம்) |
| குன்றாமை | குறையாது இருத்தல் | உவப்ப | மகிழ: |
| தூஉயம் | தூய்மை உடையோர் | தலைக்கூடி | ஒன்றுசேர்ந்து |
| நிறை ஒழுக்கம் | மேலான ஒழுக்கம் | உடையார் | செல்வர் இல்லார் ஏழை |
| தேற்றாதான் | கடைப்பிடிக்காதவன் | ஏக்கற்று | கவலைப்பட்டு |
| வனப்பு | அழகு | கடையர் | தாழ்ந்தவர் |
| தூறு | புதர் | தொட்டனைத்து | தோண்டும் அளவு |
| வித்து | விதை | மாந்தர் | மக்கள் |
| யாண்டும் | எப்பொழுதும் | சாந்துணையும் | சாகும்வரையிலும் |
| மூவாது | முதுமை அடையாமல் | காமுறுவர் | விரும்புவர் |
| நாறுவ | முளைப்ப | ஏமாப்பு | பாதுகாப்பு |
| புண்ணியனார் | இறைவர் | விழுச்செல்வம் | சிறந்த செல்வம் |
| உருகுவார் | வருந்துவார் | தத்தும் புனல் | தத்திச்செல்லும் நீர் |
| பதுமை | உருவம் | சித்ரம் | சிறப்பான காட்சிகள் |
| மெய்ப்பொருள் | நிலையான பொருள் | மதோன்மத்தர் | பெரும்பித்தனாகிய சிவபெருமான் |

SHANKAR IAS ACADEMY

| | | | |
|---|---|---|---|
| கணக்காயர் | ஆசிரியர் | கதி | துணை |
| மாரி | மழை | பேறு | செல்வம் |
| சேமம் | நலம் | நனி | மிகுதி ( மிக்க ) |
| தேசம் | நாடு | தரம் | தகுதி |
| முட்டு | குவியல் | புவி | உலகம் |
| நெத்தி | நெற்றி | விண் | வானம் |
| திரு | செல்வம் | வரை | மலை |
| நிவேதனம் | படையலமுது | முழவு | மத்தளம் |
| கனகம் | பொன் | மதுகரம் | தேன் உண்ணும் வண்டு |
| புரவி | குதிரை | நிரந்தரம் | காலம் முழுமையும் |
| கோ | அரசன் | வைப்பு | நிலப்பகுதி |
| காலன் | எமன் | வண்மொழி | வளமிக்கமொழி |
| சேகரம் | கூட்டம் | இசை | புகழ் |
| மெத்த | மிகவும் | சூழ்கலி | சூழ்ந்துள்ள அறியாமை இருள் |
| காங்கேய நாடு | கொங்குமண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று | தொல்லை | பழமை, துன்பம் |
| தீர்வன | நீங்குபவை | விசும்பு | வானம் |
| உவசமம் | அடங்கி இருத்தல் | மரபு | வழக்கம் |
| நிழல்இகழும் | ஒளிபொருந்திய | மயக்கம் | கலவை |
| பேர்தற்கு | அகற்றுவதற்கு | திரிதல் | மாறுபடுதல் |
| திரியோகமருந்து | மூன்று யோகமருந்து | இருதிணை | உயர்திணை, அஃறிணை |
| தெளிவு | நற்காட்சி | செய்யுள் | பாட்டு |
| நித்தம் நித்தம் | நாள்தோறும் | வழாஅமை | தவறாமை |
| மட்டு | அளவு | தழாஅல் | தழுவுதல் (பயன்படுத்துதல்) |
| சுண்ட | நன்கு | தூண்டுதல் | ஆர்வம் கொள்ளுதல் |
| திறத்தன | தன்மையுடையன | பயிலுதல் | படித்தல் |
| கூற்றவா | பிரிவுகளாக | ஈரம் | இரக்கம் |
| பூணாய் | அணிகலன்களை அணிந்தவளே | நாணம் | வெட்கம் |
| பிணி | துன்பம் | முழவு | இசைக்கருவி |
| ஓர்தல் | நல்லறிவு | செஞ்சொல் | திருந்திய சொல் |
| பிறவார் | பிறக்கமாட்டார் | முகில் | மேகம் |
| வையம் | உலகம் | வின்னம் | சேதம் |
| பேணுவையேல் | பாதுகாத்தால் | கெடிகலங்கி | மிக வருந்தி |
| சென்னி | உச்சி | சித்தம் | உள்ளம் |
| ஞெகிழி | தீச்சுடர் | உய்ம்மின் | ஈடேறுங்கள் |
| உரவுநீர் | பெருநீர்ப் பரப்பு | நம்பர் | அடியார் |
| அழுவம் | கடல் | ஈயில் | வழங்கினால் |
| திட்டுமுட்டு | தடுமாற்றம் | பகராய் | தருவாய் |

| | | | |
|---|---|---|---|
| கலன் | அணிகலன் | பராபரம் | மேலான பொருள் |
| முற்ற | ஒளிர | ஆனந்த வெள்ளம் | இன்பப்பெருக்கு |
| தடம் | அடையாளம் | அறுத்தவருக்கு | நீக்கியவர்க்கு |
| அகம்பாவம் | செருக்கு | சுடர் | ஒளி |
| பண் | இசை | வினை | செயல் |
| கனகச்சுனை | பொன் வண்ண நீர்நிலை | காப்பு | காவல் |
| மதவேழங்கள் | மதயானைகள் | நீரவர் | அறிவுடையார் |
| முரலும் | முழங்கும் | கேண்மை | நட்பு |
| பழவெய் | முதிர்ந்த மூங்கில் | பேதையார் | அறிவிலார் |
| அலந்தவர் | வறியவர் | நவில்தொறும் | கற்கக்கற்க |
| கிளை | உறவினர் | நயம் | இன்பம் |
| செறாஅமை | வெறுக்காமை | நகுதல் | சிரித்தல் |
| நோன்றல் | பொறுத்தல் | நட்டல் | நட்புக்கொள்ளுதல் |
| போற்றார் | பகைவர் | இடித்தல் | கடிந்துரைத்தல் |
| பேதையார் | அறிவற்றவர் | கிழமை | உரிமை |
| மறாஅமை | மறவாமை | முகநக | முகம் மலர |
| பொறை | பொறுமை | அகம் | உள்ளம் |
| வாரி | வருவாய் | ஆறு | நல்வழி |
| வைகுக | தங்குக | உய்த்து | செலுத்தி |
| எஞ்சாமை | குறைவின்றி | அல்லல் | துன்பம் |
| ஓதை | ஓசை | உடுக்கை | ஆடை |
| முட்டாது | தட்டுப்பாடின்றி | இடுக்கண் | துன்பம் |
| வெரீஇ | அஞ்சி | களைவது | நீக்குவது |
| யாணர் | புதுவருவாய் | கொட்பின்றி | வேறுபாடு இல்லாமல் |
| ஒட்டாது | வாட்டம் இன்றி | ஊன்றும் | தாங்கும் |
| மறலி | காலன் | புனைதல் | புகழ்தல் |
| வழிவர் | நழுவி ஓடுவர் | புல் | கீழான |
| கரி | யானை | குழவி | குழந்தை |
| தூறு | புதர் | பிணி | நோய் |
| அருவர் | தமிழர் | கழறும் | பேசும் |
| உடன்றன | சினந்து எழுந்தன | மயரி | மயக்கம் |
| பிலம் | மலைக்குகை | சலவர் | வஞ்சகர் |
| மண்டுதல் | நெருங்குதல் | மன்னுயிர் | நிலைபெற்ற உயிர் |
| இறைஞ்சினர் | வணங்கினர் | குவை | குவியல் |
| முழை | மலைக்குகை | மாரன் | மன்மதன் |
| சீவன் | உயிர் | அளகு | கோழி |
| வையம் | உலகம் | ஆழி | கடல் |
| சத்தியம் | உண்மை | வடிஅம்பு | வடிக்கப்பட்ட அம்பு |

SHANKAR IAS ACADEMY

| | |
|---|---|
| சபதம் | சூளுரை |
| ஆனந்த தரிசனம் | மகிழ்வான காட்சி |
| மோகித்து | விரும்பி |
| நமன் | எமன் |
| நாணாமே | கூசாமல் |
| செற்றான் | வென்றான் |
| அரவு | பாம்பு |
| பிள்ளைக்குருகு | நாரைக்குஞ்சு |
| வள்ளை | ஒருவகை நீர்க்கொடி |
| கடா | எருமை |
| வெளவி | கவ்வி |
| சங்கின் பிள்ளை | சங்குக் குஞ்சுகள் |
| கொடி | பவளக்கொடி |
| கோடு | கொம்பு |
| கழி | உப்பங்கழி |
| திரை | அலை |
| மேதி | எருமை |
| கள் | தேன் |
| புள் | அன்னம் |
| சேடி | தோழி |
| ஈரிருவர் | நால்வர் |
| ஊசலாடுற்றாள் | மனம் தடுமாறினாள் |
| தார் | மாலை |
| செம்மைசேர் | புகழ்மிகு |
| கடிமாலை | மணமாலை |
| சூழ்விதி | நல்வினை |
| காசினி | நிலம் |
| நன்னுதல் | அழகிய நெற்றி |
| வெள்கி | நாணி |
| களிகூர | மகிழ்ச்சி பொங்க |
| வயவேந்து | வெற்றிவேந்தன் (நளன்) |
| ஒண்தாரை | ஒளிமிக்க மலர்மாலை |
| மல்லல் | வளம் |
| மறுகு | அரசவீதி |
| மடநாகு | இளைய பசு |
| மழவிடை | இளங்காளை |
| செம்மாந்து | பெருமிதத்துடன் |
| மது | தேன் |

| | |
|---|---|
| விசும்பு | வானம் |
| நகை | புன்னகை |
| முகை | மொட்டு |
| மேனி | உடல் |
| துலங்குதல் | விளங்குதல் |
| தாது | மகரந்தம் |
| போது | மலர் |
| பொய்கை | குளம் |
| பூகம் | கமுகம் (பாக்கு மரம்) |
| திறல் | வலிமை |
| மறவர் | வீரர் |
| நயன் | நேர்மை |
| நன்றி | உதவி |
| வழக்கு | நன்னெறி |
| ஆன்ற | உயர்ந்த |
| நகையுள்ளும் | விளையாட்டாகவும் |
| பாடறிவார் | நெறியுடையார் |
| மாய்வது | அழிவது |
| அரம் | வாளைக் கூர்மையாக்கும் கருவி |
| நண்பு | நட்பு |
| நயம்இல | தீங்கு, இனிமையற்ற |
| கடை | இழிவு |
| நகல்வல்லர் | சிரித்து மகிழ்பவர் |
| மாயிரு ஞாலம் | மிகப்பெரிய உலகம் |
| திரிந்தற்று | திரிந்ததுபோன்றது |
| பசியறாது | பசித்துயர் நீங்காது |
| அயர்ந்த | களைப்புற்ற |
| நீடிய | தீராத |
| வான்பெற்ற நதி | கங்கையாறு |
| துழாய் | அலங்கல் |
| களபம் | சந்தனம் |
| புயம் | தோள் |
| தைவந்து | தொட்டுத்தடவி |
| நாமம் | பெயர் |
| இருநிலம் | பெரிய உலகம் |
| கைம்மாறு | பயன் |
| மாசற்ற | குற்றமற்ற |
| தேட்டையிட | செல்வம் திரட்ட |

| | | | |
|---|---|---|---|
| தியங்கி | மயங்கி | மீட்சி | மேன்மை |
| சம்பு | நாவல் | மாள | நீங்க |
| மதியம் | நிலவு | மதி | அறிவு |
| வாய்மை | உண்மை | அமுதகிரணம் | குளிர்ச்சியான ஒளி |
| களையும் | நீக்கும் | உதயம் | கதிரவன் |
| வண்மை | வள்ளல் தன்மை | மதுரம் | இனிமை |
| சேய்மை | தொலைவு | நறவம் | தேன் |
| தவம் | பெரும்பேறு | கழுவு துகளர் | குற்றமற்றவர் |
| திடம் | உறுதி | சலதி | கடல் |
| மெய்ஞ்ஞானம் | மெய்யறிவு | அலகு இல் | அளவில்லாத |
| உபாயம் | வழிவகை | புவனம் | உலகம் |
| இரும்போந்து | பருத்த பனைமரம் | மதலை | குழந்தை |
| சந்து | சந்தன மரம் | குறம், பள்ளு | சிற்றிலக்கிய வகைகள் |
| நாகம் | நாகமரம் | மா | வண்டு |
| காஞ்சி | ஆற்றுப்பூவரசு | மது | தேன் |
| யாக்கை | உடம்பு | வாவி | பொய்கை |
| புணரியோர் | தந்தவர் | குந்த | உட்கார |
| புன்புலம் | புல்லிய நிலம் | கந்தம் | மணம் |
| தாட்கு | முயற்சி ஆளுமை | மிசை | மேல் |
| சமயக் கணக்கர் | சமயத் தத்துவவாதிகள் | விசனம் | கவலை |
| பாடைமாக்கள் | பல மொழிபேசும் மக்கள் | வளர் முதல் | நெற்பயிர் |
| குழீஇ | ஒன்றுகூடி | தரளம் | முத்து: |
| தோம் | குற்றம் | பணிலம் | சங்கு: |
| கோட்டி | மன்றம் | வரம்பு | வரப்பு |
| பொலம் | பொன் | கழை | கரும்பு |
| வேதிகை | திண்ணை | கா | சோலை |
| தூணம் | தூண் | குழை | சிறு கிளை |
| தாமம் | மாலை | அரும்பு | மலர் மொட்டு |
| தமாலம் | பச்சிலை மரம் | மாடு | பக்கம் |
| மாடு | செல்வம் | நெருங்கு வளை | நெருங்குகின்ற சங்குகள் |
| விலோதம் | துணியாலான கொடி | கோடு | குளக்கரை |
| வசி | மழை | ஆடும் | நீராடும் |
| செற்றம் | சினம் | மேதி | எருமை |
| கலாம் | போர் | துதைந்து எழும் | கலக்கி எழும் |
| வையம் | உலகம் | கன்னி வாளை | இளமையான வாளைமீன் |
| மாக்கடல் | பெரிய கடல் | சூடு | நெல் அரிக்கட்டு |
| தணல் | நெருப்பு | சுரிவளை | சங்கு |
| களர்நிலம் | பண்படாத நிலம் | வேரி | தேன் |

SHANKAR IAS ACADEMY

| | | | |
|---|---|---|---|
| நவிலல் | சொல்லல் | பகடு | எருமைக்கடா |
| இயற்றுக | செய்க | பாண்டில் | வட்டம் |
| மின்னாளை | மின்னலைப் போன்றவளை | சிமயம் | மலையுச்சி |
| மின்னாள் | ஒளிரமாட்டாள் | நாளிகேரம் | தென்னை |
| தாழி | சமைக்கும் கலன் | நரந்தம் | நாரத்தை |
| அணித்து | அருகில் | கோளி | அரசமரம் |
| தவிர்க்கஒணா | தவிர்க்க இயலாத | சாலம் | ஆச்சா மரம் |

| | |
|---|---|
| என்பணிந்த | எலும்பை மாலையாக அணிந்த |
| தென்கமலை | தெற்கில் உள்ள திருவாரூர் |
| பூங்கோயில் | திருவாரூர்க்கோவிலின் பெயர் |
| மண் சுமந்தார் | வந்தி என்னும் கிழவிக்காக இறைவன் மண் சுமந்தார் |
| காழூன்று கொடி | கொம்புகளில் கட்டும் கொடி |
| பருதிபுரி | கதிரவன் வழிபட்ட இடம் (வைத்தீசுவரன் கோவில்) |
| கதலிகைக் கொடி | சிறு சிறு கொடியாகப் பல கொடிகள் கட்டியது |
| வேயா மாடம் | வைக்கோல் போன்றவற்றால் வேயப்படாது,<br>திண்மையாகச் சாந்து பூசப்பட்ட மாடம் |
| தடுத்தல் | மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்தி கட்டுதல், எதிரிகளைத் தடுத்துத் தாக்குதல் |
| சும்மாடு | பாரம் சுமப்பவர்கள் தலையில் வைத்துக்கொள்ளும் துணிச்சுருள் |
| முன்றில் | வீட்டின் முன் இடம் (திண்ணை) இங்கு வீட்டைக் குறிக்கிறது |
| கைம்மண்ணளவு | ஒரு சாண் எனவும் பொருள் கொள்வர் |
| நாணம் | செய்யக் கூடாததனைச் செய்ய அச்சப்படுதல் |
| என்பு | எலும்பு, இங்கு உடல், பொருள், ஆவியைக் குறிக்கிறது |
| நன்றியறிதல் | பிறர் செய்த உதவியை மறவாமை |
| ஒப்புரவு | எல்லோரையும் சமமாகப் பேணுதல் |
| புன்கணீர் | துன்பம் கண்டு பெருகும் கண்ணீர் |
| நாடாகு ஒன்றோ | நாடாக இருந்தால் என்ன அல்லது |
| மறித்தல் | கால் வாய்க்கால், குதிரையின் கால் |
| பால்பற்றி | ஒருபக்கச் சார்பு (நடுவுநிலைமையில் இருந்து மாறுதல்) |
| காராளர் | மேகத்தை ஆளுகின்றவர்களாகிய உழவர் |
| குணக்கடலே!<br>அருட்கடலே! | முருகனை இவ்வாறு அழைக்கிறார் |
| குரைகடல் | ஒலிக்கும் கடல்; அசுரர்கள் கடல் வடிவில் வந்தார்கள் என்பது கதை |
| பரங்குன்றுளான் | திருப்பரங்குன்றத்தில் உள்ள முருகன் |
| வானரங்கள் | இச்சொல், இங்கு ஆண் குரங்குகளைக் குறித்தது |
| கமனசித்தர் | வான்வழியே நினைத்த இடத்துக்குச் செல்லும் சித்தர்கள் |

SHANKAR IAS ACADEMY

| | |
|---|---|
| காயசித்தி | மனிதனின் இறப்பை நீக்கிக் காக்கும் மூலிகை |
| சுழி | உடல்மீது உள்ள சுழி, நீர்ச்சுழி |
| முத்தேன் | கொம்புத்தேன், மலைத்தேன், கொசுத்தேன் |
| ஆர்வம் | விருப்பம் வெறுப்பை நீக்கி விருப்பத்தை உண்டாக்கும் என்பது பொருள் |
| மறம் | வீரம் கருணை, வீரம் இரண்டிற்குமே அன்புதான் அடிப்படை என்பது பொருள் |
| முத்தம் அடைக்கும் | முத்துகள் மிக்குப் பெருகி இடையே அடைத்துக்கொண்டு கிடக்கும் |
| கலிப்புவேலை | கருமார், கொல்லர், தட்டார் முதலியோர் செய்யும் தொழில்கள் |
| ஐம்பால் | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் |
| நன்செய் | நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம் |
| புன்செய் | குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம் |
| வள்ளைப்பாட்டு | நெல்குத்தும்போது பாடப்படும் பாடல் |
| தள்ளாதோர் இவண் தள்ளாதோரே | குறைவில்லாது நீர் நிலை அமைப்பவர்கள் குறைவில்லாது புகழுடையவர்களாக விளங்குவார்கள் |
| முக்குழல் | கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்கள் |
| துருத்தி | ஆற்றிடைக்குறை (ஆற்றின் நடுவே இருக்கும் மணல்திட்டு) |
| ஆனந்தம் | மகிழ்ச்சி; பராபரம் மேலான பொருள், இறைவன் |
| வள்ளை | நெல் குத்தும்போது பெண்களால் பாடப்படும் உலக்கைப் பாட்டு |
| படமாடக்கோயில் | படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயில் பாடலின் பொளன் |

## சொற்களை_இணைத்து_உருவாக்குதல்

1. பொருத்தமான இணைப்புச்சொல் அமைந்தத் தொடரைத் தேர்க.
   (A) தமிழ்மொழிதான் மிகப் பழமையான மொழி. எனவே, தமிழ்மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும்
   (B) தமிழ்மொழிதான் மிகப் பழமையான மொழி. ஆனால், தமிழ்மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும்
   (C) தமிழ் மொழிதான் மிகப் பழமையான மொழி. அதுபோல தமிழ் மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும்
   (D) தமிழ் மொழிதான் மிகப்பழமையான மொழி. ஏனெனில், தமிழ் மொழியை நாட்டின் ஆட்சிமொழியாக அறிவிக்க வேண்டும்
   (E) விடை தெரியவில்லை

2. சரியான இணைச்சொல்லைத் தெரிவு செய்க.
   "இந்த ஓவியத்தில் அமைதி எங்கே இருக்கிறது?" என்றார் அரசர். ___________ ஓவியர் "மன்னா பிரச்சினையும் போராட்டமும் ஆரவாரமும் இல்லாத இடத்தில் இருப்பது அமைதி அன்று" என்றான்.
   (A) அவ்வாறு (B) அப்படி
   (C) அதனால் (D) அதற்கு
   (E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

3. சரியான இணைப்புச்சொல்லால் நிரப்புக.
தனக்கான ஆற்றலைச் சேகரித்து வைக்க மூளைக்குள் இடம் இல்லை. __________ அதற்குக் குருதியோட்டம் எப்போதும் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.
(A) அதனால் (B) ஏனெனில்
(C) அதுபோல (D) அதைவிட
(E) விடை தெரியவில்லை

4. சரியான இணைப்புச் சொல்லைத் தெரிவு செய்க.
பெரிய கப்பல்கள் துறைமுகத்தில் கரைக்கு அருகில் வர இயலாது. ____________ கப்பலில் வரும் பொருள்களைத் தோணிகள் மூலம் கரைக்குக் கொண்டு வந்தனர்.
(A) எனவே (B) அதுபோல
(C) அப்படியானால் (D) ஆனால்
(E) விடை தெரியவில்லை

5. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.
காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர், ____________ அவர் எளிமையை விரும்பியவர்
(A) ஏனெனில் (B) எனவே
(C) அதனால் (D) ஆகையால்
(E) விடை தெரியவில்லை

6. பொருத்தமான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடு.
நான் என் உயிரைக் கொடுப்பதற்குக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. ____________ நான் கடவுளுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை.
(A) எனவே (B) ஆகவே
(C) அதனால் (D) ஏனெனில்
(E) விடை தெரியவில்லை

7. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.
தீயினால் சுட்ட புண் ஆறிவிடும். ____________ கடுஞ்சொல்லால் ஏற்படும் காயம் ஆறாது.
(A) அதனால் (B) ஆனால்
(C) எனவே (D) ஆகையால்
(E) விடை தெரியவில்லை

8. சரியான இணைப்புச் சொல்லை நிரப்புக.
எமது மக்கள், இந்தப் பூமியை எப்பொழுதும் மறப்பதேயில்லை. ____________ இதுவே எமக்குத் தாயாகும்.
(A) ஏனெனில் (B) அதனால்
(C) ஆகையால் (D) எனவே
(E) விடை தெரியவில்லை

SHANKAR IAS ACADEMY

9. சரியான இணைப்புச் சொல்லை தெரிவு செய்க.
நான் ஏற்கனவே சென்ற இடம்தான். ______________ அச்சம் ஒன்றும் இல்லை.
(A) ஆதலால் (B) ஆனால்
(C) ஆயினும் (D) ஏனெனில்
(E) விடை தெரியவில்லை

10. சரியான இணைப்புச் சொல் எழுதுக.
நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும் ______________ துன்பப்பட வேண்டும்.
(A) அதனால் (B) எனவே
(C) இல்லையென்றால் (D) எனில்
(E) விடை தெரியவில்லை

11. சரியான இணைப்புச் சொல் தருக.
நான் நேற்று பள்ளி செல்லவில்லை ______________ என் உடல்நிலை சரியில்லை.
(A) ஏனெனில் (B) இல்லையென்றால்
(C) ஆனால் (D) மேலும்
(E) விடை தெரியவில்லை

## பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு

**பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு, பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல், பேச்சு வழக்குத் தொடர்களிலுள்ள பிழை திருத்தம்**

வழக்கு:

- **எழுத்திலும் பேச்சிலும் சொற்களைப் பயன்படுத்தும் முறை** வழக்கு எனப்படும். நம் முன்னோர் எந்தெந்தச் சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ, அச்சொற்களை அவ்வாறே பயன்படுத்துவதை வழக்கு என்பர்.
- **இயல்பு வழக்கு, தகுதி வழக்கு** என வழக்கு **இரு**வகைப்படும்.

இயல்பு வழக்கு

- ஒரு பொருளை அதற்கே உரிய **இயல்பான சொற்களால் குறிப்பிடுவது** இயல்பு வழக்கு ஆகும். இயல்பு வழக்கு **மூன்று** வகைப்படும்.
  1. இலக்கணமுடையது
  2. இலக்கணப்போலி
  3. மரூஉ

### 1. இலக்கணமுடையது:

- நிலம், மரம், வான், எழுது – ஆகிய சொற்கள் தமக்குரிய பொருளை எவ்வகை மாறுபாடும் இல்லாமல் இயல்பாகத் தருகின்றன. இவ்வாறு **இலக்கண நெறி மாறாமல் முறையாக அமைந்த சொல்** இலக்கணமுடையது ஆகும்.

## 2. இலக்கணப்போலி

- இல்லத்தின் முன் பகுதியை இல்முன் எனக் குறிக்க வேண்டும். ஆனால் அதனை நம் முன்னோர் முன்றில் என மாற்றி வழங்கினர். கிளையின் நுனியைக் கிளைநுனி எனக் கூறாமல் நுனிக்கிளை எனக் குறிப்பிடுகிறோம். இவ்வாறு இலக்கண முறைப்படி அமையாவிடினும், இலக்கணமுடையவை போலவே ஏற்றுக் கொள்ளப்படும் சொற்கள் இலக்கணப்போலி எனப்படும்.
- இலக்கணப்போலி என்பது பெரும்பாலும் சொற்களின் முன்பின் பகுதிகள் இடம்மாறி வருவதையே குறிக்கும். எனவே, இலக்கணப் போலியை முன்பின்னாகத் தொக்க போலி எனவும் குறிப்பிடுவர்.
- (எ.கா) புறநகர், கால்வாய், தசை, கடைக்கண்.

> **வாயில்-வாசல்**
> **இல்லத்துக்குள் நுழையும் வழி இல்வாய் (இல்லத்தின் வாய்) எனக் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால் அதனை வாயில் என வழங்குகிறோம். இது இலக்கணப் போலியாகும்.**
> **வாயில் என்னும் சொல்லைப் பேச்சு வழக்கில் வாசல் என வழங்குகிறோம். இது மரூஉ ஆகும்.**

## 3. மரூஉ:

- நாம் எல்லாச் சொற்களையும் எல்லா இடங்களிலும் முழுமையான வடிவத்தில் பயன்படுத்துவது இல்லை. தஞ்சாவூர் என்னும் பெயரைத் தஞ்சை என்றும், திருநெல்வேலி என்னும் பெயரை நெல்லை எனவும் வழங்குகிறோம். இவ்வாறு இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும்.
- (எ.கா)– கோவை, குடந்தை, எந்தை, போது, சோணாடு

> **வாயில்-வாசல்**
> **இல்லத்துக்குள் நுழையும் வழி இல்வாய் (இல்லத்தின் வாய்) எனக் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால் அதனை வாயில் என வழங்குகிறோம். இது இலக்கணப் போலியாகும்.**
> **வாயில் என்னும் சொல்லைப் பேச்சு வழக்கில் வாசல் என வழங்குகிறோம். இது மரூஉ ஆகும்.**

# பொருந்தாச் சொல்லைத் தேர்வு செய்தல்

- பொருந்தாச் சொல் என்பது கொடுக்கப்பட்டுள்ள நான்கு சொற்களில் ஏதேனும் ஒன்று மட்டும் பிற மூன்று சொற்களிலிருந்து வேறுபட்டிருக்கும். இப்பகுதி மிகவும் எளிமையானது. வினாக்கள் இலக்கணக்குறிப்பு, திணைவகைகள், நூல் தொகுப்பு போன்றவற்றிலிருந்தும் கேட்கப்படும்.
- **இருபாலருக்கும் பொதுவான பருவங்கள்**
  - காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி.
- **ஆண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்)**
  - சிற்றில், சிறுபறை, சிறுதேர்
- **பெண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்)**
  - கழங்கு, அம்மானை, ஊசல்

| | |
|---|---|
| **இரு திணை** | உயர் திணை, அஃறிணை |
| **இரு வினை** | நல் வினை, தீ வினை |
| **முக்கனி** | மா, பலா, வாழை |
| **முத்தமிழ்** | இயல், இசை, நாடகம் |
| **முந்நீர்** | ஆற்று நீர், மழை நீர், ஊற்று நீர் |
| **முப்படை** | தரைப் படை, கப்பல் படை, விமானப் படை |
| **நால்வகை உணவு** | உண்ணல், தின்னல், பருகல், நக்கல் |
| **நாற் குணம்** | அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு |
| **நானிலம்** | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |
| **ஐம் பொறி** | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| **ஐம் பூதம்** | நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் |
| **அறு சுவை** | இனிப்பு, கசப்பு, புளிப்பு, கரிப்பு, துவர்ப்பு, கார்ப்பு |
| **எழு வண்ணம்** | வெண்மை, கருமை, செம்மை (சிவப்பு), பசுமை, மஞ்சள், நீலம், கருநீலம் |
| **எண் சுவை** | நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம் பெருமிதம், வெகுளி, உவகை |
| **நவதானியம்** | நெல், துவரை, பச்சைப் பயறு, உளுந்து. அவரை. எள்ளு, கடலை, கொள்ளு, கோதுமை |
| **முந்நீர்** | ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் |
| **பஞ்சாங்கம்** | திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்ற ஐந்து பிரிவுகளுடைய காலக் குறிப்பு நூல். |
| **ஏழு பருவ பெண்கள்** | பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் |
| **கப்பல்** | தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம், கலம், வங்கம், நாவாய் |
| **கப்பல் பல்வேறு வகையான உறுப்புகள்** | எரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும் |
| **கப்பலை செலுத்துபவர்** | மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி |
| **ஐம்பூதங்கள்** | நிலம், நீர், தீ, காற்று, வானம் |
| **ஐந்திணை** | குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத்திணை |

* * * * * * *